சுஜாதா

கடவுள்

COMICS
PDF
TIMES

HSC

ஜனகணமன

ஜேகே தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும், ஒரு முக்கியமான மனிதரைச் சந்திக்கும், சில நோட்டுக்களை மாறும் முதல் அத்தியாயம்:

ஏதோ ஒரு கால நிலையில் துவங்க வேண்டியிருக்கிறது. எங்கே துவங்கலாம்? துவங்குவது என்ன துவங்குவது? ஆரம்பிப்பது. ஆரம்பிப்பதற்கு முன் இந்த இடத்திலேயே நிறுத்தி விட்டு 'ஜனகணமன' பாடினால் என்ன என்கிற ஆசை பிரதானமாக இருக்கிறது. செய்யலாமா?

எழுந்து
நி
ல்
லு
ங்
க
ள்,

'ஜனகணமன அதிநாயக...'

இருங்கள், உட்காருங்கள் மறுபடி. என்னைப் பற்றி எழுத்தில் சொல்ல வேண்டிய கட்டாயமோ, முக்கியத்துவமோ எதுவும் எனக்கு இல்லை. ஆனால் நான் அவ்வளவு சாதாரணனும் அல்ல. எனக்குச் சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவைகளை, நிகழ்ந்த வரிசையைச் சொல்லுகிறேன். நான் அதைச் சொல்லும் விதத்திலிருந்தே என்னைச் சற்று வேறுபட்ட ஆசாமி என்று நீங்கள் ஊகித்திருக்கலாம். நீங்கள் என்று யாரை வைத்துப் பேசுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் யார்? நீங்கள்... இப்போது இந்த வரியை, இந்த 'யை'ய்யன்னாவைப் படிக்கும் நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?

ராமமூர்த்தி?

பொர்ணண்டஸ்?

கலா?

சரஸ்வதி, நளினி, வசந்தி, கிருஷ்ணசாமி, ஸாலமன் ராஜ், ஜெஸ்ஸிலா சையத்?

நீங்கள் ஏன் இந்தப் பத்திரிகையை எடுத்து இந்தப் பக்கத்தைப் படிக்கிறீர்கள்? எந்தச் சூழ்நிலையில் படிக்கிறீர்கள்? உங்கள் சரித்திரம் என்ன? நீங்கள் கவலைப் பட்டது உண்டா? மணலில் நடந்ததுண்டா? என்னைப் போல் கையில் உள்ள மோதிரத்தை விற்று 'டாஸ்டாவ்ஸ்கி'யின் 'காரமஸாவ்' புத்தகத்தை வாங்கிப் படித்திருக்கிறீர்களா? என்னைப் போல விமானம் ஓட்டியிருக்கிறீர்களா? என்னைப் போல விபத்தில் உருண்டு மூன்று நாள் நினைவற்றுப் படுத்திருக்கிறீர்களா? என்னைப் போல அடிபட்டிருக்கிறீர்களா? அடித்திருக்கிறீர்களா? நம்பியதுண்டா?

சொல்லுங்களேன்.

நீங்கள் தனிப்பட்டவர்தான். புத்தகம் படிப்பவர்கள் தனிப்பட்டவர்கள்தான். நான் ஏதோ இந்தக் கதையைப் படிக்க வேண்டும் என்பதற்கு உங்களுக்கு ஐஸ் வைப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். நாம் எல்லோரும் தனிப்படத்தான் தவம் கிடக்கிறோம். பிரபலமெய்தும் ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. 'கூட்டத்தில் ஒருவன் இல்லை நான். நான் சற்று வேறுபட்டவன்' என்று பெயர் வாங்கத்தான் எவ்வளவோ அல்லாடுகிறோம்.

பூதலமெல்லாம் அலைந்து
மாதருடனே கலந்து
பூமிதனில் வேணும் என்று
பொருள் தேடி...

நான், தேனீக்களின் சுறுசுறுப்புக்குக் கூடக் காரணம் ஒரு நாள் ராணியாக ஆகலாம் என்கிற ஆசைதான் என்று நினைக்கிறேன். நான்கு பேர் பல்லக்குத் தூக்குகிறவர்கள் இருந்தால் அதிலும் ஒரு 'ஸீனியர்' இருப்பான். இமாலயத்தின் பனிப் படலத்தில் முன்னூறு சோல்ஜர்கள் ஒரே விதமாக உடை யணிந்திருந்தால் அதிலும் ஒருவன் ஹார்மோனிக்கா வாசிப்பான். அல்லது கூடாரத்திற்குச் சென்று கைகளைச் சுட வைத்துக் கொண்டு கவிதை எழுதுவான். தனித்தன்மை எய்த

COMICS PDF TIMES

நமக்கெல்லோருக்கும் மோகம் இருக்கிறது. நான் என்ற சொல்லே எவ்வளவு தூரம் என்னை மற்றவர்களிடமிருந்து பிரித்து விடுகிறது! நான் நீயல்லடா, முட்டாளே! நான்.

நான் ஏதும் பிரபலத்தை நாடி நயாகராவுக்குக் குறுக்கே கம்பி போட்டு அதன் மேல் நடக்கவில்லை. ஆஸ்வால்ட் போல, கென்னடியைச் சுட்டுவிட்டு, கொட்டை எழுத்துக்களில் உலகத்துச் செய்தித்தாள்கள் எங்கும் எரியவில்லை....

நான் ஜேகே. என்னை ஜேகே என்று கூப்பிடுங்கள். ஒரே வார்த்தை. ஜே தனி, கே தனி இல்லை. ஜேகே. அவ்வளவுதான் என் பெயர். அந்தச் சுருக்கத்தில் ஒரு அன்யோன்யமும் அவசரமும் இருக்கிறது அல்லவா? ஜேகே! நண்பர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் ஜேகே. பைலட், ஸ்டண்ட் நடிகன், காதலன், அடிபட்டவன், அடிப்பவன், எல்லாவற்றையும் ஒருமுறை பதம் பார்த்தவன்★, அழாதவன், அனுதை, திகட்டத் திகட்டச் சந்தோஷம் கொண்டவன், அந்தந்தக் கணங்களை வாழ்பவன் முட்டாள், கெட்டிக்காரன், எதிர்காலத்தைப் பற்றி எச்சரிக்கையோ கவலையோ இல்லாதவன், கல்யாண மாகாதவன் ஜேகே.

என்னைப் பின்பற்றுதீர்கள். என்னைப் படியுங்கள். பை ஆல் மீன்ஸ் கோ அஹெட். ஆனால் என்னைப் பின்பற்ற வேண்டாம். என்னைப் படிப்பதால் ஏதோ பிரயோசனத்தையோ, வாழ்க்கையை அமைக்க உபதேசத்தையோ. உபதேச ரத்தின மாலையையோ எதிர்பார்க்காதீர்கள். நான் எழுதுவது திருக்குறள் இல்லை. நான் பார்த்த ஜனங்கள் ஞானிகள் இல்லை. எனக்கு நிகழ்ந்த விஷயங்கள் நல்ல விஷயங்கள் இல்லை.

எனவே, இந்தக் கதையில் நீதி தேடுகிறவர்களுக்குச் சரியாக மூன்று நிமிடங்கள் தருகிறேன், விலகுவதற்கு.

மூன்று நிமிஷம்.

மற்றவர்கள் மேலே படிக்கலாம்!

காலை நேரம். சாதாரணமான காலை நேரம். டில்லியில் நான் அப்போது இருந்தேன். இப்போது அங்கில்லை. அப்போது என் பாட்டுக்கு என் வேலையைக் கவனித்துக் கொண்டு, ஒருவரையும் லம்புக்கிழுக்காமல், டிரான்ஸிஸ்டரில் நிக்ஸோடர்ம் விளம்பரத்தைக் கேட்டுக்கொண்டு, எதையோ படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

அப்போது ஆரம்பித்தது வினை.

அதற்குமுன் என் சொந்த விவரங்கள் இன்னும் கொஞ்சம். சலித்துக் கொள்கிறீர்களா? போர் அடிக்கிறதா? சுறுசுறுப்பான ஸார்? அப்படி என்றால் மறுபடியும் டயம் கொடுக்கிறேன். படிக்காதீர்கள். வேண்டாம், 'விட்டு விடுங்கள்.' க்விட்!

ஹலோ, இன்னும் என்னிடம் பிடிவாதமாக இருக்கிறவரே! நீர் என் நண்பர்! அல்லது நீ என் சினேகிதி, வா என் உலகத்துக்கு. உன்னை எனக்குப் பிடிக்கிறது; சமயம் வரும் போது உன்னை ஏரோப்ளேனில் அழைத்துச் செல்கிறேன்! வருகிறாயா?

எங்கே இருந்தேன்? அ..., சுய விளம்பரங்கள்.

நான் ஒரு விமானி. விமானி என்றால் உடனே ஜம்போ ஜெட், ராஜஸ்தான் உடையில் பணிப் பெண்கள், ஷாம்பேன், பிஃபார்ம், 'யுர் அடென்ஷன் ப்ளீஸ்', அவினாஷ் ராஜேஷ் கேலி என்று கற்பனை செய்ய வேண்டாம்! நான் ஓட்டும் விமானம் ஒரு சின்ன விமானம். அதன் இறக்கையில் மருந்தடிக்கக் கூடிய சாதனங்கள் மெலிய குழாய் வடிவத்தில் இருக்கும். இரண்டுபேர் உட்காரலாம். மருந்து டாங்க் பின்னால் இருக்கும். டில்லி, பஞ்சாப், உத்தரப் பிரதேசங்களில் கோதுமை, கரும்பு, நெல் வயல்களுக்குப் பூச்சி மருந்து அடிக்கும் விமானம். ஸஃப்தர்ஜங் விமான நிலையத்திலிருந்து கிளம்பி 1.500 அடியில் பறந்து சிவப்பு முண்டாசுடன் அடையாளத்துக்கு நிற்கும் விவசாயிகளை நோக்கி

வி
ர்
ர்
ர்
ர்
ர்
ர்
ர்
டு
ம்

என்று இறங்கி, 50 அடியில் பறந்து மருந்தைச் சிதற அடித்து விட்டு, மறுபடி ஏறி, மறுபடி இறங்கி, நூறு அடி தள்ளி, மறுபடிமூன்று வரிகளுக்கு முன் சேர்த்துக் கொள்ளவும்.

பேஜாரான வேலை. பிழைப்புக்கு எத்தனையோ காரியங்கள் செய்கிறோம். நிறையப் பணம்செலவழித்து லைசென்ஸ் எடுத்த போது இரண்டாயிரம் சம்பளமும், தினத்துக்கு ஒரு மணி நேரம் வேலையும்தான் கனாக் கண்டேன் தோழி நான். பாழாய்ப் போகிற அரசாங்கம் எங்கேயோ ஒரு சைபர் சேர்த்துத் தப்புக் கணக்குப் போட்டு விட்டு ஏகப்பட்ட பைலட்டுகளுக்குப் பயிற்சி கொடுத்துவிட்டுக் கடைசியில் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் மிஞ்சி விட்டவர்களில் ஒருவன் ஆகிவிட்டேன். நானாவது பரவாயில்லை. என் சக பைலட் ஒரு, வன்பெட்ரோல்பங்க்கில், "எத்தனை லிட்டர் ஸார்?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறான். நான்? என்னைப் பின் பாகத்தில் தூக்கிவிட மந்திரிகளோ, எம்.பி.க்களோ இல்லை. கடைசியில், ப்ளாண்ட் ப்ரொடக்ஷன் டைரக்டரேட் என்ற ஒரு மத்திய சர்க்கார் டிபார்ட்மெண்டில் காண்ட்ராக்டர் பைலட் தேவை என்று விளம்பரம் செய்திருந்தார்கள். அதிலும் எத்தனையோ கஷ்டப்பட்டு, எத்தனையோ வாசல்களில் நின்று, எத்தனையோ சிரித்து விட்டுத்தான் கிடைத்தது. ஓட்டை விமானம். நானேசகலமும். பைலட், இன்ஜினியர், ரேடியோ மெக்கானிக் எல்லாம். ஆனால் அதிலும் த்ரில் இல்லாமல் இல்லை. என்னுடன் ஒரு தடவை வந்து பார், மன்னிக்கவும் பாருங்கள், வந்து தந்திக் கம்பத்தில் குந்தி இருக்கும் குருவிகளைச் சிதற அடித்துப் பறந்து பாருங்கள், இந்த த்ரில் புரியும்.

எனவே நான் ஒரு குட்டி விமானி. என் அறையில் அந்த ஞாயிற்றுக் கிழமை டிரான்ஸிஸ்டர் கேட்டுக் கொண்டிருந்த போது இந்தக் கதையின் அனுபவங்கள் தொடங்கின.

"எனக்கு அட்மிஷன் கொடுத்தீர்களானால் இன்று வீடு திரும்பியதும் உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி காத்திருக்கும்" என்றான் கணபதி என்ற பெயருடைய மாணவன்.

அதிலிருந்த 'சஸ்பென்ஸ்' பிரின்சிபாலின் ஆவலை ஒரேயடியாகத் தூண்டிவிடவே அட்மிஷன் கொடுத்துத் தான் பார்ப்போமே என்று கொடுத்துவிட்டார்.

அன்று மாலை அவர் வீடு திரும்பியபோது நிஜமாகவே அவர் பெயருக்கு ஒரு தந்தி வந்து கிடந்தது!

தந்தியின் வாசகம்:

"ஹேப்பி நியூஸ். ஐ ஹாவ் காட் அட்மிஷன் இன் யுவர் காலேஜ். தேங்க் யூ வெரி மச்-கணபதி."

★ நீங்கள் நினைப்பது உட்பட

அறைக் கதவை யாரோ தட்டினார்கள். திறந்தேன். ஒரு அழகான பெண், மார்பில் ஸாரி நழுவ, உதடுகள் சற்றே திறந்திருக்க, நடுவே பற்கள் அழகாக, வரிசையாக ஒளிர நின்று கொண்டிருப்பாள் என்று தானே எதிர்பார்த்தேன். தப்பு. ஒரு கிழவர். ஜெயராஜ் கவனிக்கவும்.

கிழவர் உள்ளே நுழைந்ததும் இன்னும்கிழவராகத் தோற்றமளித்தார். அவர் தலை மயிர் கலைந்திருந்தது. கண்ணாடி மூக்கில் சரியாக நிற்கவில்லை. பையில் ஏழெட்டுப் பென்சில்கள் வைத்திருந்தார். விரல்களில் இங்க் கறை படிந்திருந்தது. மூக்கு நுனி சிவந்திருந்தது. அவர் மீசையை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது.

''குட்மார்னிங்'' என்றேன்.

''நீங்கள்தான் பைலட். இல்லையா?''

''ஆம் நான் ஒரு பைலட்.''

''உங்கள் பெயர்?''

''ஜேகே.''

''வெறும் ஜேகே?''

எல்லோரும் கேட்கும் கேள்வி.

''வெறும் ஜெகே. கால் மி ஜஸ்ட் ஜெகே! நீங்கள்?''

''என் பெயர் பரமேஸ்வரன். டாக்டர் பரமேஸ்வரன். நான் ஒரு ஜியாலஜிஸ்ட்.''

''அப்படியா. சந்தோஷம். உட்காருங்கள்.''

''ஜியாலஜிஸ்ட் என்றால் என்ன தெரியுமா?''

''தெரியும்.''

''என்ன சொல்லுங்கள்.''

தயக்கத்துக்குப் பின், ''நீங்களே சொல்லுங்கள்'' என்றேன்.

''எனக்கு நீங்கள் ஒரு வேலை செய்ய வேண்டும்'' என்றார்.

''சொல்லுங்கள்.''

அவர் சுற்று முற்றும் பார்த்தார். ''நாம் தனியாக இருக்கிறோமா?''

''டிரான்ஸிஸ்டர் இருக்கிறது'' என்றேன்.

''நான் சொல்லப் போவது மிக முக்கியமான விஷயம். அருகே வாருங்கள்.''

''என்னசெய்யவேண்டும்?'' என்றேன், மிகச் சிறிய எழுத்துக்களில்.

''உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?''

''அதைப்பற்றி என்ன உங்களுக்கு?''

''இல்லை. 2500 ரூபாய். உங்களுக்கு அதிகமான தொகையா, குறைவான தொகையா?''

''சம்பளமா?''

''இல்லை. ஒரு நாள் வேலைக்கு.''

''2500 ரூபாயா?''

''ஆம்.''

''இனிமேல் அரை நிமிடம் இந்த வீட்டில் நான் இருந்தால், 'என்னடா மடப்பயலே' என்று கேள்.. நீ இவ்வளவு தூரம் சொல்லிவிட்ட பிறகு நான் இங்கே இன்னும் நின்று கொண்டிருக்கப் பைத்தியமா என்ன? நான் ஒன்றும் அப்படிச் சுரணை கெட்டவன் இல்லை; தெரிஞ்சுக்கோ !... வேறு எதுவும் போக்கிடம் இல்லாத ஏமாளி, சோணகிரியாக இருந்தால் தான் நீ சொன்னபடி கேட்டுக் கொண்டு உனக்கு அடிமையாய் இருக்கச் சம்மதிப்பான். நான் அப்படி இருக்க எனக்கு விதியா என்ன?,,.ஆண்டவன் கொடுத்த கை-கால்கள் இருக்கு. உழைக்கத் திறன் இருக்கு. நான் பாட்டுக்கு, கிடைத்த வேலையைச் செய்து ராஜா மாதிரி...''

''நிறுத்து!... அரை நிமிடம் முடிந்து விட்டது. இப்போது நான் கேட்கிறேன்: 'என்னடா மடப்பயலே! இன்னுமா நீ போகவில்லை?'''

''விசில் அடிக்கலாமா? 2500 ஒரு ஃப்ளைட்டுக்காகவா? யாரை அழைத்துப் போக வேண்டும்?''

''யாரையும் வேண்டாம். ஒரு சிறிய சாதனம். அதை உங்கள் விமானத்தில் கொண்டு வர வேண்டும்.''

''என்ன சாதனம்? காமிராவா?''

''இல்லை. ஒரு ஸிண்டிலேஷன் கௌண்டர்.''

''வெடியா?''

''சேச்சே. நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கிறீர்கள். நான் ஒரு ஆராய்ச்சியாளன். நான் செய்திருக்கும் ஆராய்ச்சி இந்தத் தேசத்துக்கு முக்கியமானது. ஆனால் மிஸ்டர் ஜேகே, இதில் கொஞ்சம் இரகசியம் தேவையாக இருக்கிறது.''

''எங்கிருந்து கொண்டு வர வேண்டும்?''

''மோங்கா'' என்றார் பரமேஸ்வரன்.

''ஏங்கா?''

''மோங்கா. உத்தரப்பிரதேசத்தில் ஒரு டவுன். நாளை நீங்கள் மருந்து அடிக்க அந்த இடத்திற்கு அருகில் செல்கிறீர்கள் என்பது உங்கள் ஆபீஸ் மூலம் தெரிய வந்தது. மோங்காவில் ஒரு பழைய - இரண்டாம் உலக யுத்த காலத்து-விமான நிலையம் இருக்கிறது. உபயோகப்படாத ஸ்ட்ரிப் அது. அதில் நீங்கள் இறங்க வேண்டி இருக்கும். உங்கள் சின்ன விமானத்தில் அது முடியும் என்று நினைக்கிறேன். இறங்கினவுடன் எங்கள் கம்பெனி ஆட்கள் வந்து உங்கள் விமானத்தில் அந்தக் கருவியைப் பொருத்துவார்கள். பொறுத்தினவுடன் நீங்கள் கிளம்பி நேராக டில்லி வந்து விட வேண்டும். ஸ்ஃப்தர்ஜங் விமான நிலையத்தில் நாங்கள் வந்து அந்த சாதனத்தைக் கழற்றிக் கொண்டு சென்று விடுவோம். அவ்வளவுதான் வேலை. 2500 ரூபாய்.''

நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன் சற்று நேரம்.

''டாக்டர் பரமேஸ்வரன்..''

''மிஸ்டர் ஜேகே.''

''நான் உங்களைப் பரமேச்சு என்று கூப்பிடலாமா?''

''ஐ பெக் யுர் பார்டன்!''

''மறவுங்கள். இந்த விவகாரமே எனக்குக் கொஞ்சம் நிழலாகப் படுகிறது!''

''ஏன்?''

''நான் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்கிறீர்களா?''

''வித் பிளெஷர் ஜேகே.''

''மோங்கா! அந்த மோங்காவில் நீங்கா என்ன செய்கிறீர்கள்? அங்கே என்ன வேலை?''

''மோங்கா டவுனில் எங்கள் தொழிற்சாலை இருக்கிறது.''

''எங்கள் என்று பன்மையில் பேசுகிறீர்கள். யார் 'எங்கள்?'?''

''எங்கள் கம்பெனி.''

''என்ன கம்பெனி?''

''ஏன்? எலக்ட்ரானிக்ஸ். நீங்கள் இதை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

''அப்புறம் அந்தக் கருவி! அது என்ன பெயர் சொன்னீர்கள்?''

''ஸிண்டிலேஷன் கௌண்டர்.''

''அது என்ன செய்யும்?''

''ஒரு ஸிண்டிலேட்டரின் மேல் அயோனைஸிங் ரேடியேஷன் பட்டால் அதிலிருந்து ஏற்படும் வெளிச்ச ஃப்ளாஷ்களை ஃபோட்டோ

திருச்சியில் தபால், தந்தி அலுவலகத்தில் வேலை பார்க்கும் 'லைன் மென்'கள் தாங்கள் பணி புரியும் லைனில் ஏற்படும் தவறுகளைக் கவனிக்க, கையுடன் ஒரு முழு'டெலிபோன் பாக்ஸை' எடுத்துச் செல்ல வேண்டும்.

முழு டெலிபோன் பெட்டியையும் எடுத்துச் செல்வதாக இருந்தால் கனமாக இருப்பதுடன் சௌகரியக் குறைவாகவும் இருக்கும். ஆகவே, கையில் எடுத்துச் செல்லவும், சுலபமாக இயக்கவும் ரிசீவரிலேயே டயலைப் பொருத்தி யிருக்கிறார்கள்.

அதாவது, இவர்களே டெலிபோன் பாக்ஸிலுள்ள டயலை எடுத்துக் கிண்ணம் ஒன்று தயார் செய்து அதற்குள் டயலைப் பொருத்தி ரிசீவரில் இணைத்து விட்டார்கள்.

படம், தகவல்: பொன்மலை பரிமளம்

மல்டிப்ளையர் வைத்துக் கொண்டு எண்ணுகிறது.''

நான் சிரித்தேன். ''பரமேச் ஒல்ட் பாய்! இந்த வேலை வேண்டாம். அது என்ன செய்யும்? மிக எளிய, சுலபமான பாஷையில் இரண்டு வயதுக் குழந்தைக்குக் கூடப் புரியும்படியாகப் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.''

அவர் யோசித்தார். ''ரேடியம் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும்'' என்று வாட்சைக் காட்டினேன்.

''அ! அது போல, யுரேனியம், தோரியம்... எல்லாம் விலை உயர்ந்த உலோகங்கள். அதைக் கண்டு பிடிக்கிறது இந்தச் சாதனம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''போட்டோ கீட்டோ என்று சொன்னீர்களே?''

''சேச்சே! நீங்கள் காமிரா என்று நினைக்கிறீர்கள். அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. அது ஒரு பெட்டி. ஒரு பென் ரிகார்டர் இருக்கும். அவ்வளவுதான்.''

''ஏன் கேட்கிறேன் என்றால் நாளைக்கு நான் பறக்கப் போகும் ரூட் நேபால் எல்லைக்கு அருகில் செல்கிறது. சற்று ஜாக்கிரதையாக...''

அவர் வாய் விட்டுச் சிரித்தார். ''சேச்சே என்ன இது? நான் சொல்வது ஆராய்ச்சிக் கருவி. நீங்கள் வேறு ஏதோ எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ரொம்ப சுலபமான வேலை. ஒரு சாதனத்தை விமானத்தில் கொண்டு வர வேண்டும். அவ்வளவே!''

''தென் வொய் ஆல் திஸ் ஹஷ் ஹஷ்?''

''புரியவில்லை.''

''ஏன் ரகசியம்? ஏன் இத்தனை பணம்?''

''ரகசியம்: இது முக்கியமான ஆராய்ச்சி. மற்ற போட்டி கம்பெனிகளுக்கு லீக் ஆகி விடக் கூடாது. இந்தக் கருவி சரியாக வேலை செய்கிறதா என்று பரிசோதித்துப் பேட்டண்ட் எடுத்து விட்டால் எங்கள் கம்பெனிக்கு ஏகப்பட்ட லாபம் ஏற்படும்...முக்கிய ஆராய்ச்சி. அதனால் அத்தனை பணம். இந்தக் கருவியை டெவலெப் செய்வதற்காக இதுவரை மூன்றரை லட்சம் செலவாகி இருக்கிறது தெரியுமா!''

''மற்றொரு கேள்வி! அதை ரெயிலில் எடுத்து வர முடியாதா? ஜீப்பில் எடுத்து வர முடியாதா?''

''அதில்பிரயேசனமில்லை. இந்தக் கருவி'ஏரியல் சர்வே'க்கான கருவி. விமானத்தில் கொண்டு வருவதன் மூலம் மிகப் பெரிய பரப்பை சுவர் செய்யலாம். ஒரே ஓட்டில் கண்டு பிடித்து விடலாம். புரிகிறதா?''

''புரியவில்லை; ஆனால் 2500 ரூபாய் புரிகிறது.''

''மூன் பணம்தேவையா?''என்று தன் பைக்குள் கைவிட்டுச்சில புதிய நூறு ரூபாய் நோட்டுக்களை எண்ண ஆரம்பித்தார். ''இந்த ஆராய்ச்சியினால் நம் நாட்டுக்கு மிகுந்த நன்மை விளையப் போகிறது. உங்களுக்குத் தேச பக்தி இல்லையா?'' அவருடன் நானும் ஆயிரம் வரை எண்ணினேன்.

''எதற்காக, போயும் போயும், வேளாண்மைத் துறைப் படிப்பைத் தேர்ந்தெடுக்கிறாய்?''

''அதிலேதான் ஆண்மை இருக்கிறது.''

''என்ன செய்ய வேண்டும்— மூன்று தடவை 'ஜெய் ஹிந்த்' சொல்ல வேண்டுமா?''

''வேடிக்கையாய்ப் பேசுகிறீர்கள்'' என்று சிரிக்காமல் நூறு ரூபாய் நோட்டுக்களை என்னிடம் நீட்டி,''ஆயிரம்ரூபாய் இருக்கிறது! நாளைக்கு நீங்கள் மருந்து அடிக்கச் செல்லும்போது மோங்காவில் ஒரு தடவை இறங்குங்கள்-ஏஸ் எலக்ட்ரானிக்ஸ் என்ற கம்பெனி ஜீப் தயாராக நிற்கும். அவர்கள் உங்களிடம் 'கௌண்டரை'க் கொடுப்பார்கள். அதை எப்படி இயக்குவது என்று சொல்லித் தருவார்கள். அதை விமானத்தில் வைத்துக் கொண்டு திரும்பி வாருங்கள். ஸம்ப் தர்ஜங்கில் வந்து இறங்கினதும், எனக்குப் பெட்டி கிடைத்ததும், பாக்கிப் பணம். சம்மதமா?''

''சம்மதம்'' என்று வாங்கிக் கொண்டேன்.

''உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது. உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. குட் டே! வருகிறேன்.''

ஏற்றுக் கொண்டு விட்டேன். 'மணிக்கொடி' காலத்து எழுத்தாளர்கள் கதைகளில் விதி சிரிக்குமே, அதுபோல் அப்போது என் அறையில் அலமாரி ஓரத்தில் ஹேர் ஆயில் பாட்டில் அருகில் விதி சின்னதாக உட்கார்ந்திருந்தால் சிரித்திருக்கும்—

மூன்று தினங்களில் நான் கைதாகப் போவதை நினைத்து.

—தொடரும்

NOT FOR SALE
MADE FOR FANS

ஜேகே

சுஜாதா

ஜேகே தன் விமானத்தில் உங்களை அழைத்துச் செல்லும் இரண்டாம் அத்தியாயம்.

திங்கட்கிழமை காலை எப்பொழுதும் போலப் புலர்ந்தது. சூரியன் எப்பொழுதும் போல எழுந்தான். வேலையில்லாத இளைஞர்கள் எப்பொழுதும் போல க்யூக்களில் நிற்கத் தயாராஞர்கள். க்றிஸ்டல் துல்யமான காலை. காற்றில் ஒரு 'சில்' இருந்தது. ஆகாயம் மேகமற்ற வெண்ணீல மேலாக்கு.

நான் ஸஃப்தர்ஜங் சென்றேன். ஸஃப்தர்ஜங் வி. நிலையத்தைநீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்கிறவர்கள் அடுத்த பாராவுக்குச் செல்லவும். பார்க்காதவர்கள் கேட்கவும். ஒரு காலத்தில் இந்த விமான நிலையம் செல்வாக்காக இருந்தது. அப்பொழுது எல்லாம் விமானங்கள் இவ்வளவு பெரிதாக இல்லை. ஏதோ ஒரு டக்கோட்டா, இன்னொரு டக்கோட்டா, சின்னச்சின்ன பயிற்சி விமானங்கள் என்று பயந்து பயந்து பறந்து கொண்டிருந்தன. நிலையம் டில்லி நகரின் வயிற்றில் இருக்கிறது. சுற்றிலும் 'சிக்' கென்று வீடுகள். நடுவே ஒரு பச்சை பேனின் போல நிலையம். இதை மூடுவதற்குப் பலபேர் உற்சாகமாக இருக்கிறார்கள். ஏனென்ருல் பாஸஞ்சர் விமானப்போக்குவரத்து முழுவதும் பாலம் விமான நிலையத்திற்குச் சென்றுவிட்டது. இங்கே பறப்பது ஒரு சில பயிற்சி விமானங்களும் இன்னொரு சில க்ளைடர்களும், என்னைப் போன்ற உபரி பைலட்டுகளின் அழுக்கு விமானங்களுமே! எனவே விமான நிலையக் கட்டடமும் சற்று சிதிலமாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. ஒரே ஒரு புக் ஷாப் இருக்கிறது. அதில் கடைசியாக 1954-ம் வருடத்து 'வீக்லி'யும் சில கந்தல் நாவல்களும் கிடைக்கும். அதாவது கடை திறந்தால். ரெஸ்டாரெண்டுக்கு உள்ளே போனுல் உம்மேல் ஒட்டடை படிவதற்குள் வெய்ட்டர் வந்தால் அன்று உம் அதிர்ஷ்ட தினம்...மாடியில் கொஞ்சம் சலசலப்பு இருக்கும். அதிகாரிகளும் சாதனங்களும் நிரம்பி இருக்கும். ஏனென்ருல் இது டில்லி ஏரியாவுக்குக் கண்ட்ரோல் சென்ட்டர்.

மாடிக்குச் சென்று என்னுடைய ஃப்ளைட் ப்ளானை நிரப்பினேன்.. டிராஃபிக் கண்ட்ரோல் ஆபீஸர் என்னைப் பார்த்துச் சிரித்தார். "தினம் போலத்தானே?" என்ருர்.

"ஆம்" என்றேன், சற்றுத் தயக்கத்துடன்.

தினம் போல நான் பறக்கப் போவதில்லை. இன்று மோங்காவில் இறங்கப் போகிறேன் என்று அவரிடம் சொன்னுல் சத்தியமாக க்ளியரன்ஸ் கிடைக்காது. சொல்லவில்லை. எனக்குக் கொடுத்திருப்பது வயல்களில் மருந்தடிக்க ஒரு பொதுவான கிளியரன்ஸ். பாதையை விட்டுச் சற்று விலகினுல் கூட ரேடியோ மூலம் கூப்பிட்டு ஏர் ஃபோர்ஸ்காரர்கள் அதட்டுவார்கள். ஹிண்டன் பக்கம் போனுல் மிக் (எம்.ஐ.ஜி.) விமானங்கள் மூக்கருகே கோபமாகச் சீய்த்துக் கொண்டு செல்லும்...

"காப்டன்" என்ருர் அவர் அன்பாக.

என்னைக் காப்டன் என்று கூப்பிட்டதில் எனக்குச் சந்தோஷம். "எஸ்!" என்றேன் காதலுடன்.

"நானும் பார்க்கிறேன், வருடக் கணக்கில், இப்படி தினமும் கடற்கரைக்கு வருகிறீர்களே! ஆரோக்கியமான காற்று வாங்கத்தானே?"

"நானையிலிருந்து வரமாட்டேன் சார்! கண்டல்காரருக்கு ஆறு ரூபாய், வேர்க்கடலைக்காரனுக்கு நாலு ரூபாய் பாக்கி. இன்றுரெண்டு பேரும் பாக்கியைக் கீழே வச்சுட்டு மறு வேலை பார்க்கச் சொல்லிட்டானுங்க."

"என்னை ஒரு நாள் ஜாய் ரைட் அழைத்துக் கொண்டு போகிறீர்களா?"

"இப்பொழுதே வாருங்களேன்.." வரமாட்டார், தெரியும்.

"இப்பொழுதா! நான் ட்யூட்டியில் இருக்கிறேனே!" என்ருர் ஏமாற்றத்துடன்.

"ஸம் அதர் டைம். நான்தான் தினம் போகிறேனே! அந்தப் பெண்யார்?"

"அவள் ஒரு டெலிபிரிண்டர் ஆப்பரேட்டர்."

"திரும்பிப் பார்க்காமலேயே சொல்கிறீர்கள்."

"அவள் ஒருத்தி தான் இங்கே அழகான பெண்."

"ஓ, ஆ!" என்று சிரித்தேன். அவரும் சிரித்தார்

"கன் யூ ஆஸ்க் ஹர் இஃப் ஷி வாண்ட்ஸ் ஏ ஜாய் ரைட்?"

"அவளும் ட்யூட்டியில் இருக்கிருள். ஸம் அதர் டைம்" என்று சிரித்தார்.

ப்ளடி காண்ஸ்பிரேட்டர்!

அங்கிருந்து வானிலை ஆசாமியைப் போய்ப் பார்த்தேன். அவர் நான் பறக்கப் போகும் ரூட் முழுவதும் வரை படத்தில் சுழித்துச் சுழித்துக் கலர்ப்பென்ஸிலால் எழுதி இவ்விடத்தில் இடி, மின்னல், மழை இருக்கக்கூடும் என்று சுட்டு விரலால் கண்ணுடி அணிந்த வருண பகவான் போலக் காட்டினுர். "அப்படியா" என்றேன், சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு. "தாங்க்ஸ்" என்றேன். சந்தோஷத்தோடு வெளிவந்தேன். செத்தாலும் மழை பெய்யாது!

ஜாக்கெட்டை அணிந்து கொண்டேன். ரெஸ்டாரெண்டுக்குள் சென்று தென்பட்ட வெய்ட்டரை சட்டென்று பிடித்துக்கொண்டு இரண்டு முட்டை ஆம்லெட்டும் ஓரிரண்டு ஸ்லைஸ்களும் காப்பியும் ஆர்டர் செய்தேன். அவன் கோழியைத் தேடி உள்ளே சென்ருன். நான் யோசித்தேன். என் பையில் அந்த நூறு ரூபாய் நோட்டுக்கள் மடங்கிப் பதிந்து இருந்தன. ஏற்

கெனவே அதில் 160 காலி. ரம்மி.—பாயிண்டுக்கு ஒரு ரூபாய். கட்டு முழுக்க ஜோக்கர்! ஒன்பது பேர் ஆடுவார்கள். ஸ்கூட்பண்ணக்கூடச் சந்தர்ப்பம் வராது. எடுப்பான், டிக் பண்ணுவான். ஜப்பானிய விசிறி போல விரித்துப் பணத்தைக் கறந்து விடுவார்கள்.

என்ன சொல்ல வந்தேன்? ரம்மியில் 160 விட்டேனு? பாக்கி 840-ல் ஒரு சில பனியன்களும் ஒரு பேனாக் கத்தியும் வாங்கிக் கொண்டேன். அப்புறம் நாற்பத்து ஆறு ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கினேன். அப்புறம் ஒருபார்ட்டியைத் தேடிப் போகலாமா என்று யோசித்து, சமீபத்தில் வரப்போகும் எனது மெடிக்கலை ஞாபகத்தில் இருத்திக் கொண்டு மிக நல்ல பிள்ளையாக ரூமிலே புத்தகம் படித்துக்கொண்டிருந்து விட்டேன்.

ஆம்லெட் வந்தது.... ஸாஸைச் சேர்த்துக் கொண்டு ஸ்லைஸைக் கடித்துக்கொண்டு முள்குத்தி அதை விழுங்கினேன். நல்ல பசி! இல்லாவிட்டால் இந்த மாதிரி ஆம்லெட்டைச் சாப்பிடுகிற ஜாதியா நான்?

வெய்ட்டரைக் கூப்பிட்டேன். ''என்ன எண்ணெயையப்பா உபயோகப்படுத்துகிறீர்கள்? ஏரோப்ளேன் எண்ணெயா?''

''[illegible] சுத்தமான நெய்!'' என்றான்.

''சுத்தமான பொய்'' என்று சொல்லிவிட்டு ரூபாய் நோட்டு,

சார்லி பதில் சொல்லவில்லை. சார்லி என் விமானத்தின் பெயர்.

''ஜேகே! யூ ஸன் ஆஃப் எ கன், ஐ பிலிவ் யூ!''

''தாங்க்ஸ்.''



தேகப் பயிற்சி போல் கைகளை வைத்துக்கொள்ளுங்கள். சற்று மண்டி போட்டுக்கொண்டு மூக்கை 45 டிகிரி மேல் நோக்கி உயர்த்துங்

சில்லறையை விசிறிவிட்டுக் கிளம்பி நடந்தேன்.

எஸ்ஸோ ஆளிடம் அப்பா தாயே பெட்ரோல் அனுப்பு என்று கெஞ்சிவிட்டு — சர்க்கார் துறை அல்லவா-என் விமானத்தை நோக்கிச் சென்றேன்.

''குட்மார்னிங் சார்லி!'' என்றேன்.

சுன். அப்படியே இருங்கள்..... நீங்கள் என் சார்லி போல இருப்பீர்கள். வாத்ஸ்யாயனரின் காதலனுக்குத் தன் காதலியின் ஒவ்வொரு அங்கமும் பரிச்சயமாம். அதுபோல எனக்குச் சார்லி பரிச்சயம்.

சார்லியின் அன்றைய ஆரோக்கியத்தை ஆராயத் தொடங்கினேன். கௌலிங்ஸை விலக்கி . எல்லாப் பாகங்களும் அதனதன் இடத்தில் இருக்கிறதா என்று பார்த்தேன். மூஞ்சியில் உள்ள ப்ரொபெல்லர்; கையால் சுற்றி வியர்த்தேன். சார்லி 'கள்க் கள்க்' என்று சொல்ல, யாவும் நலம் என்று தெரிந்து கொண்டு இன்ஜினீயர் மேனனைத் தேடிச் சென்றேன். டெய்லி இன்ஸ்பெக்ஷன் சர்ட்டிபிகேட்டை அவர்தான் கையெழுத்திட வேண்டும்.

மேனன் ஒரு பிரிக்கப்பட்ட டக் கோட்டா என்ஜினின் அடியில் படுத்திருந்தார். அழுக்காக வெளி வந்தார்.

''ஹலோ ஜேகே!''

''ஹலோ.''

''எந்தப் பக்கம்?''

''உத்தர் பிரதேஷ்.''

''க்ராப் ஸ்ப்ரேயிங்.''

''ஆம்.''

''நான் உனக்கு மெக்ஸிகோ தேசத்து வண்ணத்தியின் ஜோக் சொன்னேனே?''

''சொல்லி விட்டீர்கள். கையெழுத்துப் போடுகிறீர்களா?''

''எல்லா செக்கும் ஆகிவிட்டதா?''

''ஆம்.''

''நான் வந்து பார்க்க வேண்டுமா?''

''விருப்பமிருந்தால் பார்க்கலாம்.''

கையெழுத்தை வாங்கிக் கொண்டு சக்கரங்களின் கீழ்க் கட்டைகளை நகர்த்திவிட்டு ஒரு ஆளை உதவிக்கு அழைத்து விமானத்தை வெளியே கொண்டு வந்ததும், எஸ்ஸோ ஆசாமி சின்ன வண்டியுடன் வந்தான். சூயிங்கம் கடித்துக் கொண்டே ஹோஸை இழுத்து இணைத்துப் பெட்ரோல் நிரப்பினான். நான் காத்திருந்தேன்.

8-30-க்கு விமானத்தைக் கிளப்பிரன் அப் பார்த்துவிட்டு அப்படியே ரன்வேயை நோக்கிச் செலுத்தினேன். ரேடியோவைத் தட்டிவிட்டு ஸஃப்தர்ஜங்குடன் பேசி அனுமதி வாங்கிக் கொண்டேன். ரன்வேயின் முகப்பின் அருகில் நிறுத்தி ப்ரேக் போட்டு சார்லியை அலற வைத்தேன்.....

8-42-க்கு ரன்வேயில் நுழைந்து கிளம்பி வேகம் பிடித்து மிக வேகமாக 1000 அடிக்கு ஏவினேன். பாகிஸ்தான் எம்பஸி கட்டடத்தின் நீலக் கோளத்தின் மேல் சாய்ந்து பறந்தேன். கீழே சாணக்யபுரியில் ஒரு நவீன வீட்டின் பின்புறத்தில் ஒரு நீச்சல் குளம்; நீல நீண்ட சதுரமாக ஸ்டாம்பு போலத் தெரிந்தது. அருகே ஒரு பெண்ணுடல் பளபளத்தது. உயரத்தைக் குறைத்து டைவ் அடிக்கலாமா என்று யோசித்தேன். ஜேகே உனக்கு நல்லதல்ல! வேண்டாம் வம்பு.

ரேடியோ டெலிபோன் கரகரத்தது. அதில் சிக்னலாகப் பேசிவிட்டு இடது பக்கம் ஒதுங்கி விலகினேன்.

எத்தனை சின்ன ஜனங்கள்! என் கையின் ஒரு சாண் இடைவெளியில் எத்தனை ஆதர்சங்கள்..நம்பிக்கைகள், ஆசைகள்....பஸ் பிரயாணங்கள், படுக்கைகள்... பலாத்காரங்கள், இனிமையான கணங்கள்.

சார்லி எனக்கு அத்துப்படியான விமானம். சொன்னபடி போகும். திடீர் என்று இரும ஆரம்பித்தால் த்ராட்டிலை ஒரு தடவை பின்வாங்கி முன்னுக்குத் தள்ளினால் சரியாகி விடும். ஆர்.பி.எம். முள் திடீரென்று சில வேளைகளில் நடுங்கிச் சாமியாடும். பயப்படக் கூடாது. முள்ளில்தான் கோளாறு. ஆர்.பி.எம.மில் இல்லை. காம்பஸ்ஸில் கொஞ்சம் தப்புகள் உள்ளன. ஆனால் காம்பஸ்ஸை யார் கவனிக்கிறார்கள். எனக்கு வரைபடம் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். பிரதேசத்தில் பறந்து பறந்து என் கை ரேகைகளை விட அந்நியோன்யமாக அந்த ஏரியா எனக்கு அத்துப்படி....

''சார்லி நாம் இன்று மோங்காவில் இறங்கப் போகிறோம்'' என்றேன். நான் மிகத்தனிமையானவன். எனக்கு என் விமானத்துடன் பேசியாக வேண்டும். இல்லையென்றால் தனியாக மணிக்கணக்கில் பறந்து கொண்டிருந்தால் பைத்தியம் பிடித்து விடும். சார்லியுடன் பேசிக் கொண்டே இருப்பேன். சார்லி கேட்டுக் கொண்டே இருக்கும். சார்லியை நான் என் இரு கைகளுக்கும் இறக்கை பொருத்திய என் எளிய சக்திக்குப் பூமி ஈர்ப்பை மீறும் அபார, அபாய சக்தி தந்த என்னுடைய உடம்பின் ஒரு நீட்டலாகத்தான் கருதினேன்..குட். ஓல்ட். சார்லி..

வடகிழக்காகப் பறந்து கங்கைக் கால்வாயைக் கடந்ததும், மரங்கள் அடர்ந்து தார் நரம்புபோல் ஓடும் ட்ரங்க் ரோடைப் பிடித்துக் கொண்டேன். நகரங்கள் சிறிய தேனீக் கூடுகள், கிராமங்கள் சிறிய குப்பல்கள், நதிகள் வெள்ளி ஜரிகையிட்ட அழுக்குக் கோடுகள். வயல்கள் பச்சைச் சதுரங்கள். அப்புறம் எல்லாவற்றையும் மீறிய மகா சத்தியமாக நீலவானம் நீல நீல வானம்.

வயல் வந்து விட்டது: பின்னால் இருக்கும் டாங்கின் வால்வைத் திறந்தேன். பச்சைக் கதிர்கள் எனக்கு வரவேற்பாகக் காற்றில் ஆடின. வேடிக்கை பார்க்க நிறையச் சிறுவர்களும் கைத்தடிமேல் கழுத்தை ஊன்றின பெரியவர்களும் ஓரமாக நின்றிருந்தார்கள். அவர்களுக்கு இது ஒரு தினசரிப் புதுமை. நூற்றுக்கணக்கான வருடங்களாக மாறாத முறைகளை இன்றைய நாகரிகம் அவசரமாக மாற்ற நினைக்கும் வானப் படை எடுப்பு. ஃப்ரன்ட் பானலில் இருக்கும் குமிழைத் திறந்தேன். வெண் மேகமாக மருந்து என் இறக்கைகளிடமிருந்து வீசிப் பரவியது. வேலை செய்கிறது. மூடிவிட்டேன்.

கைகளைத் தேய்த்துக் கொண்டேன். மரங்கள் — அவைகளைத் தவிர்க்க வேண்டும். டெலிபோன் கம்பங்கள்—அவைகளைத் தவிர்க்க வேண்டும். தூரத்தில் உச்ச வோல்ட் மின்சார டவர்கள்—அவைகளைத் தவிர்க்க வேண்டும். அதே சமயம் வயல்களின் மேல் தாழ்வாகப் பறக்க வேண்டும். அதே சமயம் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டு விட்டால் உடனே இறங்கச் சமதளம் பார்த்துக் கொள்ளவேண்டும். கொஞ்சம் சிக்கலான வேலை என்று சொன்னால் நம்புவீர்கள் என நினைக்கிறேன். எனக்குக் கொடுக்கும் சம்பளம் எம்மாத்திரம் என்றால் கூட ஆமாம் போடுவீர்கள் என நம்புகிறேன். தினம் அறுவடை சீசனுக்கு முன் இதே வேலை மிஸ்டர் ராமஸ்வாமி, அல்லது கிருஷ்ண சாமி! பச்சைப் புரட்சி என்று பேப்பரில் பிரபலமாக அடிபடுகிறதே, என் போன்றவர்களைப் பற்றி ஒரு வார்த்தை?

த்ராட்டிலைக் குறைத்துச் சரிந்தேன். இறக்கைகளைச் சாய்த்துக் கொண்டு திரும்பி மேலும் இறங்கினேன். சம உயரத்தில் வயல்களை நோக்கி விரைந்தேன.

ஆனால் அந்தக் கணத்துக்காக, அவ்வளவு தாழ்வாக, எதிரே அவ்வளவு வேகத்தில் குடிசைகளும் கிணறுகளும் [illegible] கொண்டிருக்கும் [illegible] கன்னாபின்னா என்று ஓட, மருந்துத் தோகை விரித்து அரசன் போல் அந்தப் பிரதேசம் முழுவதும், ஆச்சரியத்தை இறைத்துப் பறக்கும் இந்தக் கணத்துக்காக நான் சம்பளம் இல்லாமல் உழைக்கத் தயார். தினம் தினம் இதே தான் செய்கிறேனே. ஆனாலும் ஒவ்வொரு தடவையும் அந்தக்கடைசி டைவில் என் இதயம் புதிதாகப் பிறக்கிறது. என் ரத்தம் சுத்தம் அடைகிறது. ஒரு பெண்ணில் கூட இந்த த்ரில் இல்லை ராஜா!

மருந்து வேலை முடிந்ததும் மறுபடி உயரம் பிடித்துக் கொண்டு லெவல் செய்து கொண்டு வடக்குப் புறமாகத் திரும்பினேன். டாக்டர் பரமேச்வரன் கொடுத்த நூறு ரூபாய் நோட்டுக்கள் நினைவுக்கு வர, மோங்கா! ஹியர் ஐ கம்!

மோங்கா டவுன் எல்லா உத்தரப் பிரதேசத்து டவுன்கள் ஏரோப்பிளேனில் இருந்து தெரிவதுபோல் தான் இருந்தது. கருப்புக் கோடு ரயில்வே லைன், புளியங்கொட்டைகளை இறைத்தாற்போல வீடுகள். கன்னா பின்னா என்று பச்சை, கரும் பச்சை, பழுப்பு சதுரங்கள் வயல்கள்.

டவுனிலிருந்து விலகித் தனியாக அந்த சிதிலமான விமான நிலையத்தின் ரன்வேக்கள் இரண்டு ப்ளஸ் வடிவத்தில் தெரிந்தன. சில வெள்ளைப் புள்ளிகள்—பசுமாடுகள் தெரிந்தன. ஒரு சிறிய பச்சை மூட்டைப்பூச்சி தெரிந்தது-கார். காற்று எப்படி வீசுகிறது என்று மரங்களைக் கொண்டு குத்து மதிப்பாகக் கவனித்துக் கொண்டேன். காற்றுக்கு எதிர்த்திசையில் அணுகுவதற்கு ஏற்ப ஒரு ரன்வேயைப் பார்த்து வைத்துக்கொண்டேன். அந்த ரன்வேயின் நடுவில் கறையாக இருந்தது. அது பள்ளமாக

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி. யூ. சி. படித்துக்கொண்டிருந்தபோது நானும் என் நண்பர்கள் சிலரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஜாலியாக மலைக்கோட்டைக்குப் போவோம்.

ஒரு சமயம் நாங்கள் அங்கே போய் மலை உச்சியில் ஓர் இடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது திருச்சி நேஷனல் காலேஜ் மாணவர்கள் சிலரும் அங்கே வந்திருந்தனர்.

பேசிக் கொண்டிருந்த எங்களுக்குள் திடீரென்று சண்டை மூண்டு விட்டது. குத்துச்சண்டை, நீச்சல் இரண்டிலும் எங்கள் கல்லூரிதான் முதல் ராங்க் என்பதை அவர்கள் மறுத்தார்கள். கடைசியில் அவர்களே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி மலைக்கோட்டை உச்சியிலேயே செயின்ட் ஜோசப் காலேஜ் சார்பில் எனக்கும், நேஷனல் காலேஜ் சார்பில் அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் போட்டி நடந்தது. இதை மலைக்கு வந்த பலர் வேடிக்கை பார்த்ததோடு போட்டியில் யாருக்கு வெற்றி என்பதையும் நடுவராக இருந்து உற்சாகப்படுத்திச் சொன்னார்கள். நான் தான் வெற்றி பெற்றேன். இச்சம்பவம் என் வீட்டிலிருக்கும் மலைக்கோட்டைப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் ஞாபகம் வரும்.

—ரவிச்சந்திரன்.

இருக்கலாம். என் திட்டத்தில் ரன்வேயின் நீளம் 4000 அடி இருக்கலாம். அதில் 2000 அடிதான் எனக்குக் கிடைக்கும். போதும்.

எதற்கும் ஒரு ரன் அடித்துப் பார்க்கலாம். அந்தக் காரில் காத்திருக்கும் நண்பர்களுக்கும் சற்று இதயத் துடிப்பை அதிகப்படுத்தலாமே!

மிகத் தாழ்வாக அந்த ரன்வேயின் மீது பறந்து அந்தக் காருக்கருகே வந்ததும்,

குப்பென்று—மேலேறித் திரும்பினேன்.

இரண்டுபேர் தத்தம் சட்டைப் பைகளின்மேல் கையை அழுத்திக் கொண்டு ஓடினார்கள்.

சிரித்துக்கொண்டேன். ரன்வே பரவாயில்லை. அதிகம் கரடுமுரடாக இல்லை. யுத்தகாலத்துத் தார் இன்னும் கொஞ்சம் பாக்கி இருந்தது. அடுத்த தடவை நல்ல பிள்ளையாய் இறங்கினேன். தத்தித் தத்தி ஊர்ந்து நிறுத்தினேன். இன்ஜினை அணைத்தேன். விமானத்துக்கு வெளியே வந்தேன்.

அந்த இரண்டு பேரும் காத்திருந்த காரிலிருந்து ஆளுக்கொரு பக்கமாக ஒரு சாதனத்தைப் பிடித்துக்கொண்டு என்னை நோக்கி சைட் வாங்கிக்கொண்டு நடந்து வந்தார்கள். நான் அவர்களை நோக்கி நடந்தேன்.

''குட்மார்னிங்'' என்றார்கள்.

''குட் ஆஃப்டர்நூன்'' என்றேன், கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு.

''டில்லியிலிருந்து வருகிறீர்களா?'' என்றான் ஒருவன். அவன் தொளதொளப்பாக எப்பொழுதும் உடைந்து விடுவான் போலிருந்தான். அவன் க்ழுத்தின் ரஸகுல்லா பேசும்பொழுது மேலே சென்றுவிட்டுத் திரும்பியது.

''தீப்பெட்டி இருக்கிறதா?'' என்றேன். எடுத்துக் கொடுத்தான்.

''இதை எங்கே வைக்க?'' என்றான் மற்றவன்.

அவனுக்கு இருபத்து ஐந்து வயது இருக்கலாம். அடர்த்தியான புருவமும் பூனைக் கண்களும் ஆக இருந்தான். சற்று செம்பட்டையாகத் துண்டு மீசை வைத்திருந்தான். கொண்டு வந்த அயர்வில் வியர்த்திருந்தான்.

அவர்கள் கொண்டுவந்திருந்த அந்த மிஷின் ஒரு மூணடிக்கு இரண்டடிப் பெட்டி போல இருந்தது. அதன் முகப்பில் ஒரு சார்ட் இருந்தது. சில குமிழ்கள் தென்பட்டன.

டில்லியிலோ, பம்பாயிலோ உங்கள் நண்பர் ஒருவருக்குப் பிறந்த நாள். அவருக்கு வாழ்த்துச் செய்தியும், பூச்செண்டும் அனுப்ப வேண்டும்! எப்படி அனுப்புவீர்கள்?

'இண்டர் ஃப்ளோரா' என்ற முறை இதற்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது!

பிறந்த நாள் கொண்டாடுபவரின் முகவரி, நேரம், அனுப்ப வேண்டிய செய்தி முதலிய விவரங்களை மவுண்ரோட் 'காரனெட்' நிறுவனத்தில் கொடுத்துவிட்டுக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். இதற்கு 'இண்டர் ஃப்ளோரா ஆர்டர்' என்று பெயர்.

வெளியூருக்குத் தபாலில் செய்தி அனுப்ப அவகாசம் இருந்தால் காரனட் நிறுவனத்தினர் தங்கள் ஏஜெண்டுகளுக்குச் செய்தி அனுப்பி உங்கள் சார்பில் பூக்களையும், வாழ்த்தினையும் உரிய நபரிடம் சேர்த்து விடுவர்.

நேரமில்லாவிட்டால்? தந்தி, டெலக்ஸ் முறைகளில் செய்தி ஏஜெண்டுகளுக்கு அனுப்பப்படும்!

ரோஜா, சூரியகாந்தி, ஏரம் வீஸ், லூஃபின்ஸ், காரனேஷன்ஸ், லேடிலேஸ், எவர்லாஸ்டிங், ஸ்வீட் பீஸ் போன்ற மலர்கள் பிறந்த நாளன்றுகொடுப்பதற்கு ஏற்றவை.

சென்னையில் காரனட்டைத் தவிர ஸ்பென்ஸர், ரோஸடேல் போன்ற கம்பெனிகளிலும் இந்த வசதி உண்டு. காரனெட்டில் இந்த வழக்கம் பதினேழு வருடங்களுக்கு முன்னால் துவக்கப்பட்டதாம்!

-கோமளா-

சார்ட்டில் சிவப்பு சிவப்பாக மெலிதாக, ஒழுங்காக, கோடுகள் தெரிந்தன. சார்ட்டின் மேல் ஒரு முள் துடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் தூக்கும் அதிர்ச்சியில் அந்த முள் துடித்துத் துடித்துக் கோடுகள் இழுத்துக்கொண்டிருந்தது.

நான் விமானத்தின் கதவைத் திறந்து அதைப் பைலட் டுக்குப் பக்கத்து ஸீட்டில் வைக்கச் சொன்னேன். அவர்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் அதை உட்கார வைத்தார்கள். வைத்ததும் ஒல்லி அதனடியிலிருந்து ஒரு சாவியை எடுத்து கிராமபோனுக்குச் சாவி கொடுப்பது போலக் கொடுத்தான். நான் சிகரெட் புகைத்துக் கொண்டே அசிரத்தையாகப் பார்த்தேன்.

''இங்கே சற்று வாருங்கள்'' என்றான்.

''என்ன'' என்றேன் இடத்தை விட்டு நகராமல்.

''இதில் 'ஆன்' என்று எழுதியிருக்கிறதே ஸ்விட்ச். அதை நீங்கள் மேலே எறியதும் தட்டிவிட வேண்டும்.''

''சரி சரி'' என்றேன். ''உன் பெயர் என்ன?'' என்றேன்.

''வர்மா.''

''வர்மா! வாட் இஸ் ஆல் திஸ்?''

''என்ன?''

''இந்த மிஷின், இந்த ஸ்விட்ச், இந்த மாதிரி உபயோகமில்லாத ஸ்ட்ரிப்பில் நான் இறங்குவது.... இதை டில்லிக்கு எடுத்துச் செல்வது.....''

''எனக்குத் தெரியாது. எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை இந்த விமானத்தில் இதைக் கொண்டு வைப்பதே!''

''யார் வைக்கச் சொன்னார்கள்?''

''கம்பெனியார்.''

''என்ன கம்பெனி?''

''ஏஸ் எலெக்ட்ரானிக்ஸ்.''

''எங்கே இருக்கிறது?''

''இங்கிருந்து எட்டு மைலில்.''

''அங்கே என்ன செய்கிறார்கள்?''

''கருவிகள்.''

''வர்மா! அதிகம் பேசாதே! உன் வேலை முடிந்துவிட்டது வா!'' என்றான் மற்றொருவன்.

''வெய்ட் எ மினிட்'' என்றேன். ''இதில் ஏதும் வெடி மருந்து இல்லை என்று எப்படி நான் நிச்சயமாக இருக்க முடியும்?''

அவன் சிரித்துவிட்டு விலகிக் கொண்டான்.

நான் சற்று நேரம் யோசித்தேன். பார்த்துத்தான் விடலாமே ..... மறுபடி விமானத்தில் ஏறிக் கொண்டேன். கிளப்பினேன். பக்கத்தில் அந்தக் கருவி மெலிதாக வரைந்து கொண்டிருந்தது.

நான் ஊர்ந்து கொண்டிருந்த போது ஒரு ஆள் என்னை நோக்கி அட்டகாசமாக ஓடி வருவதையும் அவன் கைகளை ஆட்டும் பாவனையில் 'போகாதே நிறுத்து!' என்று கொட்டை எழுத்தில் காண்பிப்பதையும் பார்த்தேன்.

—தொடரும்.

சுஜாதா

ஜேகே

அவன் தமிழ் சினிமாவில் கடைசி சீனில் கதாநாயகி, 'சேகர்' என்று ஓடி வருவதைப் போல் என் விமானத்தை நோக்கி ஓடி வந்தான். என் குறுக்கே வந்து என்னைப் பறக்க விட மாட்டான் போலிருந்தது. அதனால் என்ஜினை நிறுத்தினேன். காரில் வந்த மற்ற இரண்டு பேரும் அங்கேயே மரத்தடியில் நின்றார்கள்.

வந்தவன் காக்கிக் கோட்டும் காக்கிப் பாண்ட்டும் அணிந்திருந்தான். அவன் மார்பில் பித்தளை வில்லை 'ஸிவில் ஏவியேஷன்' என்று அறிவித்தது. உலோகப் பூண் போட்ட ஆளுயரக் கம்பு வைத்திருந்தான். அதை உபயோகிக்கத் தயங்க மாட்டான் என்பதும் தெரிந்தது. 'ஸால்வடோர் டாலி' போல மீசை வைத்திருந்தான்.

''என்ன சமாசாரம்?'' என்றேன்.

ஜேகே ஒரு சினேகிதியைப் பற்றிச் சொல்லும் மூன்றாவது அத்தியாயம்.

''எங்கிருந்து வருகிறீர்கள்?''

''ஏன்?''

''இந்த இடத்தில் இறங்கப் பர்மிஷன் இருக்கிறதா?''

''ஏன், இந்த இடம் யாருக்குச் சொந்தம்?''

''சர்க்காருக்கு.''

''நான்கூட சர்க்கார்தான்.''

''பர்மிஷன் இருக்கிறதா? காண்பியுங்கள்'' என்றான் சந்தேகத்துடன்.

நான் என் ஃபிளைட் பிளானைக் காண்பித்தேன். பர்மிஷன் இல்லை அது. அவனுக்குப் படிக்கத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவன் அதைத் தலை கீழாகப் பார்த்து விட்டு என் விமானத்தைச் சுற்றும் முற்றும் பார்த்தான். வெள்ளிக் கிழமைச் சந்தையில் மாடு வாங்குகிறவன் போல் பார்த்தான்.

''நீ யார், சௌகிதாரா?''

''ஆம். நீங்கள் இங்கே இறங்கியதற்கு சார்ஜ் கொடுக்கவேண்டும்.''

''கொடுக்கிறேன் எத்தனை ரூபா?''

''அது எனக்குத் தெரியாது. எங்கள் பெரிய ஆபீசர்தான் சொல்ல வேண்டும்.''

''அவரிடம் கேட்டுச் சொல்லு.''

''அவர் டில்லியில் இருக்கிறார்.''

''சரி, நான் போய்க் கேட்டுக் கொண்டு வரவா?''

அதற்குள் அந்த இரண்டுபேரும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு காரில் எங்கள் அருகே வந்து நின்றார்கள்.

''என்ன விஷயம்?'' என்றான் துண்டு மீசை.

''லாண்டிங் சார்ஜஸ் கட்ட வேண்டுமாம். எவ்வளவு என்று கேட்டால் சொல்ல மாட்டான்.''

அவன் சௌகிதாருடன் இந்தியில், லோகல் இந்தியில், பேசினான். சௌகிதார் தலையை லெஃப்ட் ரைட்டாக ஆட்டினான்.

''அவன் சொல்கிறான், நீங்கள் பர்மிஷன் இல்லாமல் வந்திருக்கி

நீர்களாம். பர்மிஷன் கிடைத்திருந்தால் அவனுக்குத் தபாலாபீஸிலிருந்து டில்லியிலிருந்து டெலிபோன் வந்திருக்குமாம். வரவில்லையாம்.''

''என்ன செய்யச் சொல்கிறான்? கட்டணம்தான் கொடுக்கிறேன் என்றேனே.''

சௌக் மறுபடியும் தலையை ஆட்டிப் பேசினான்.

''உங்களை டேக் ஆஃப் செய்ய அனுமதிக்க மாட்டானாம்.''

நான் சிரித்தேன். ''ஆஸ்க் ஹிம் டு ட்ரை'' என்றேன். ''இதோ பார், உன் பெயர் என்ன, லால் பகதூர் சாஸ்திரியா? கேள். பர்மிஷன் இல்லாமல் அவசரத்திற்குஎங்கே வேண்டுமானாலும் இறங்கலாம். எனக்கு இன்ஜின் கோளாறு ஏற்பட்டது. அதனால்தான் நான் இறங்கினேன். இறங்கினதற்குச் சட்டப்படி உனக்கு டான பணம் கொடுத்து விட்டு போகிறேன். மேலே பேச்சுக் கிடையாது.''

அவன் யோசித்து மறுபடி தலையை ஆட்டினான்.

''வர்மா, கிவ் ஹிம் ஃ'பிஃப்டீ ரூபீஸ் அண்ட் ஆஸ்க் ஹிம் டு கெட் தி ஹெல் அவுட் ஆஃப் மை வே'' என்று சொல்லி விட்டு விமானத்தில் மறுபடி ஏறிக் கொண்டேன். சௌகிதார் என் சட்டையைப் பிடித்தான். அவர்கள் இருவரும் அவனை விலக்கி, தூரமாகத் தள்ளினார்கள். அவன் கம்பை வீசினான். அது யார் மேலும் படாமல் தரையில் விழுந்தது.

''ஒதுங்கு'' என்று ஒரே சீறலில் விமானத்தைக் கிளப்பி விட்டேன்.

உயரம் பிடித்துத் திரும்பியபோது அவர்கள் மூவரும் சண்டை போடுவது அடிக்கடி குணம் மாறும் எழுத்துப் போல் தெரிந்தது.

''வாட் த ஹெல்.''

மணி 1-20, பிற்பகல். என் அருகில் இருந்த அந்தச் சாதனத்தைப் பார்த்தேன். அதன் பக்கவாட்டில் 'ஆன்' என்று எழுதி இருந்த குமிழைத் தட்டினேன். முள் துடித்துக் கீற்ற ஆரம்பித்தது. சார்ட் மெதுவாக நகர ஆரம்பித்தது. அவ்வப்போது முள் அதன்மேல் சிவப்புப் புள்ளிகளை இறைத்தது.

அது என்னவாக இருக்கும்?

இதைக் கொண்டு வர ஏற்கெனவே ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனை மீறியாகி விட்டது. சர்க்கார் நின்று கெடுக்கும் தெய்வம்.

என்ன ஆகி விடப் போகிறது, பார்த்து விடலாம். சௌகிதார் மண்ணைத் தட்டிக்கொண்டு எழுந்து போஸ்ட் ஆபீசுக்குப் போய் டில்லிக்கு டிரங்க் கால் புக் செய்து செய்தி சொல்வதற்குள் நான்டில்லி நிச்சயம் போய்ச் சேர்ந்து விடுவேன். அந்தஆபீசரை'ஜாய் ரைட்' அழைத்துச் செல்ல வேண்டும் முதல் காரியமாக.

சரியாக 4-45-க்கு டில்லி நகரம் தெரிந்தது. செக்ரடேரியட் கட்டடங்களிலிருந்து முடிவில்லாத சைக்கிள் வரிசைகள் சாலைகளில் பரவுவதைப் பார்த்தேன், ஆக்டோப்பஸ் போல.

கிளியரன்ஸ் வாங்கிக்கொண்டு இறங்கினேன். இறங்கி ஹாங்கருக்குத் திரும்பி வந்தபோது தயாராக ஒரு அம்பாஸடர் காத்திருந்தது.

டாக்டர் பரமேச்வரன் வெளியில் நின்று கொண்டிருந்தார். நான் விமானத்தை ஹாங்கருக்குள் நிறுத்தினேன். கார் விமானத்தை ஒட்டி வந்து நின்றது. பரமேச்வரன் உடனே வந்து மிக ஜாக்கிரதையாக அந்தக் கருவியை ஒரு இரண்டு மாதக் குழந்தையை வாங்குவது போல வாங்கிக் கொண்டார். பத்திரமாகக் காரின் பின் சீட்டுக்குள் வைத்தார். கதவை மரியாதையாகச் சாத்தினார். என்னிடம் வந்தார்.

''தாங்க்ஸ்'' என்றார். தன் பாண்ட் பைக்குள் கைவிட்டு ஒரு கவரை எடுத்தார். ''அதில் 2500 ரூபாய் இருக்கிறது'' என்றார்.

''2500 ஆ! முதலிலேயே ஆயிரம் கொடுத்து விட்டீர்கள். ஞாபகமில்லையா?'' என்றேன்.

''1500 பாக்கிப் பணம். 1000 நாளைக்கு அட்வான்ஸ்.''

''நாளைக்கா?''

''ஆம், நாளைக்கும் கொண்டு வர வேண்டும்.''

''எத்தனை மிஷின்கள் வைத்திருக்கிறீர்கள்?''

''மூன்று, தற்போதைக்கு. நாளைக்கும் இதே ஏற்பாடுகள்தான். சரியா?'' என்றார்.

''சற்றுக் கஷ்டம்'' என்றேன்.

''ஏன்?''

''அந்தக் கச்சா விமான நிலையத்தில் ஒரு சௌகிதார் இருக்கிறான். அவன் கிளம்பும்போது கலாட்டா செய்தான். 'எப்படி அனுமதி இல்லாமல் இறங்கலாம்; டில்லியின் அனுமதி வேண்டும்' என்றான். நாளைக்கு நான் அங்கே இறங்க வேண்டும் என்றால் இங்கே சொல்லி விட வேண்டும்; அனுமதி வேண்டும்.''

அவர் அவசரமாக, ''இங்கே சொல்ல வேண்டாம்'' என்றார். ''அந்தச் சௌகிதார்-அவனைக் கவனித்துக் கொள்ளச் சொல்கிறேன், அவன் இனி உங்களுக்குத் தொந்தரவு செய்ய மாட்டான்.''

''டாக்டர் பரமேச்வரன், எனக்கு அது பிடிக்கவில்லை. ஏற்கெனவே ஒரு தடவை அனுமதியை மீறி அந்த ஸ்டாப்பில் இறங்கியாகி விட்டது. சௌகிதாருடன் சண்டை போட்டாகி விட்டது, அவன் இந்நேரத்திற்கு டெலிபோன் செய்திருப்பான். ஐ க்விட்!'' என்றேன்.

COMICS
PDF TIMES
NOT FOR SALE
FAN MADE ONLY



"எந்த நாய் உன்னைக் கடித்தது என்று கண்டு பிடித்து விடுகிறேன்."

''யூ காண்ட் க்விட் நௌ!'' என்றார் சற்று அழுத்தமாக. அவர் முகத்தின் தசைகள் இறுகுவதை முதல் தடவை கவனித்தேன்.

''ஏன்?'' என்றேன்.

அவர் முகம் கோபத்திலிருந்து திடீர் என்று கெஞ்சலுக்கு மாறியது. ''பாருங்கள் காப்டன்! அந்த ஆராய்ச்சிக்கு ஏகப்பட்ட பணம் செலவழித்திருக்கிறோம். இன்றைய தினத்துடன் நிறுத்தி விட்டால் ஆராய்ச்சி அரைகுறையாகப் போய்விடும். முழுவதும் முடிக்க ஒருவிதமான 'காரிலேஷன்' கிடைக்க மூன்று ஃப்ளைட்டாவது வேண்டும். மூன்று தடவை திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும். அந்தச் சௌகிதார் இனி உங்களுக்குத் தொந்தரவு செய்யமாட்டான். நாளை பாருங்களேன். அவன் அருகில் கூட வரமாட்டான். அங்கே இருக்கவே மாட்டான்....என்ன?''

யோசித்தேன்.

'சரி' என்று கவர் பெற்றுக் கொண்டேன்.

[என்னுடைய நண்பர் சாமிநாதன் எப்படியாவது தன் பெயர் இந்தக் கதையில் வந்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சாமிநாதன்! சௌக்கியமா? திருப்திதானே. ஜூம்மு எப்படி இருக்கிறாள்?]

என்ன சொல்ல வந்தேன்? கவர்! கவர்பெற்றுக்கொண்டேன். அவர், ''குட் நைட்'' என்று காரில் பாய்ந்தார்.

இதில் ஏதோ தகராறு இருக்கிறது வாத்யாரே! என் மயிர்க்கால்களில் கூட உணர்கிறேன். இந்தச் சின்ன காரியத்திற்காக இத்தனை பணமா? இரண்டு நாட்களில் 5000 ரூபாய்! இந்திரா காந்தியின் சம்பளம்! ஸம்திங் ராங்!

ஆனால் ஜேகேயிடம் சில பிரின்ஸிபிள், குறிக்கோள், கொள்கை உண்டு. அது பிசகவே மாட்டேன். காசு! காசு தரும் கவர்ச்சிக்கு மறுப்புச் சொல்லாதே. பின்னால் என்ன ஆனால் என்ன? அடுத்த பக்கத்தைப் புரட்டுவதற்குள் நீ இறந்து போய் விடலாம்.

காசு எனக்கு எவ்வளவோ வசதிகள் தருகிறது. ரம்மி ஆடலாம். புத்தகங்கள் வாங்கலாம். சில பார்ட்டிகளைத் தேடிப் போகலாம்.

சில பார்ட்டிகள்.

COMICS PDF TIMES

முத்திரையைக் கவனித்தீர்களா? உங்களுக்கு என்ன வயசு? மேலே படிக்கலாமா? சின்னப் பையன்கள் எல்லாம் ஒரு தடவை ஜோராகக் கை தட்டிவிட்டு விலகிக் கொள்ளவும்.

விமானத்தின் காக்பிட் பாகத்தை டார்ப்பாலின் போட்டு மூடி விட்டுச் சக்கரங்களின் கீழ் கட்டைகள் அமைத்துவிட்டு, இறக்கைகளிலிருந்து பூமியில் பதிந்த வளையங்களுக்குக் கயிறு கட்டிவிட்டுக் கிளம்பி வெளியே வந்து டாக்ஸி பிடித்து— ''என்னிடம் நூறு ரூபாய் நோட்டாக இருக்கிறது''— கைலாஷ் காலனி சென்றேன்.

"ஜேகே! வாட் ஏ ஸர்ப்ரைஸ்!'' என்றாள் ஜ்யோ. முழுப் பெயர் ஜ்யோத்ஸ்னா. என் நண்பன் குமாரின் தங்கை. குமாருக்கு வயது 22. அவன் ஊரில் இல்லை.

''நான் போன் பண்ண வேண்டும் முதலில்'' என்றேன்.

''போன் பண்ணின பிற்பாடு?'' என்றாள்.

''டீ சாப்பிட வேண்டும்.''

''டீ சாப்பிட்ட பிற்பாடு?''

நான் அவளைப் பார்த்தேன். அவள் நெற்றிப் பொட்டு ஒழுங்காக இருந்தது. கலையப் போகிறது.

''டீ சாப்பிட்ட பிற்பாடு?'' என்று மறுபடி கேள்வியைக் கேட்டாள்.

''நாம் இருவரும் அந்த அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டு 'தி டிக்ளைன் அண்ட் ஃபால் ஆஃப் தி ரோமன் எம்பயர்' படிக்கலாம்'' என்றேன்.

ஜ்யோ என்மேல் சீப்பை எறிந்தாள்.

அழகாக இருந்தாள். அழகு என்பதற்கு உங்கள் அகராதியில் என்ன அர்த்தம் என்று தெரியாது. என் அர்த்தத்தைச் சொல்கிறேன். அழகு என்றால் கண் கருப்பு, சடை நீளம், காற்றில் ஆடும் கூந்தல், சின்ன உதடுகள், வரிசையான பற்கள், சிவப்பு உடம்பு, உயரம், வாளிப்பு என்று வார்த்தைகளை வீணடிக்கலாம். வெறும் வார்த்தைகள்! அவை அவள் அழகில் இருக்கும் சலனத்தை, உயிரை, வயிற்றுக்குள் திடீரென்று ஏற்படுத்தும் அழுத்தமான பிடிப்புணர்ச்சியை வெளிப்படுத்தாது. சோகம் கலக்காத அழகு அழகே இல்லை. சற்று நிதானமாக வாசிக்கவும். சோகம் என்றால் தனிமை, இரவு, ஒற்றை ராகம், இனம் தெரியாது நம் மூக்கருகே திடீரென்று தோன்றும் வாசனை என்று எவ்வளவோ சொல்லலாம்.

புரியவில்லையா? கவனிக்கவும்.

ஜ்யோவின் உடல் 5-4. 5-4 என்பது வெறும் எண். என்னெதிரே நின்றது 5-4 பெண். அவள் உடுத்தியிருந்தது என்னைப் படுத்தியது, உடுத்தாமலிருந்தது என்னை அவளருகில் போய்த் தொட்டுப் பார்த்து நிஜமானவள் என்று தெரிந்தும் மறுபடி மறுபடி தெரிந்து கொள்ளத் தூண்டியது. அவள் ஜீன்ஸ் அணிந்திருந்தாள். இடையில் பெல்ட் அணிந்திருந்தாள். அந்த பெல்ட்டின் கொக்கி— ஆள் காட்டி விரல்களைக் கோத்துக் கொள்ளவும் — அதுபோல் இருந்தது. மார்பில் அவள் அணிந்திருந்த

காரில், டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு போவதை விரும்புவார்.

'சர்ச்சில் சுருட்டு' என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும்.

பெரும்பாலும் தண்ணீருக்குப் பதில், சோடா வைத்தான் குடிப்பார். வீட்டிலும் சோடா புட்டிகள் தயாராக இருக்கும்.

சென்னையிலிருந்த போது, 'ஆட்டோ ரிக்ஷா'வில் போவதையே பெரிதும் விரும்புவார்.

பெரும்பாலும் இரவு நேரத்திலேயே எழுதுவார்; வேகமாகவும் எழுதுவார்.

உணவு வகைகளில், இவருக்குச் சைவமே பிடிக்காது. வஞ்சிரம் மீன், கோழிக்குறி மிகவும் பிடிக்கும்.

சென்னையில் நடுநாயகமான இடத்தில், ஒரு பெரிய நூலகத்தை அமைக்கப் பெரிதும் எண்ணித் திட்டமிட்டார்.

'பாண்டியன் பரிசு' படம் எடுத்தால், அதில் வரும் வருவாயைக் கொண்டு, தமிழுக்குப் பல நன்மைகள் செய்யத் திட்டங்கள் வகுத்திருந்தார்.

சொன்னவர்: பாரதிதாசன்
மாணவர் கவிஞர் பொன்னடியான்,
துகவல்: பி. வி. கிரி.

சட்டை - அது பம்பாயில் தைக்கப் படும்போதே தபஸ் பண்ணி இருக்க வேண்டும். அந்தச் சட்டையின் பித்தான்கள் எனக்காகக் காத்திருந்தன. அவள் இளமை எவ்வளவோ சாதனங்களைத் தேவையில்லாததாகச் செய்திருந்தது. அவள் செய்து கொண்டிருந்த அலங்காரத்தின் அரைகுறை அவள் தன் னம்பிக்கையையும் ஆணவத்தையும் காட்டியது. இந்த நிலைக்கு வர இங்கிலீஷ் படிப்பு, சினிமா, குடும்பத்தில் வளர்ந்த சூழ்நிலை, தரப்பட்ட சுதந்திரங்கள், சோதித்துப் பார்த்த ஆசைகள்...எல்லாம் காரணமாக இருக்க வேண்டும்.

ஜ்யோ! காஷ்மீரக் கம்பளத்தை மிதித்துப் பாருங்கள்—ஜ்யோ!

கித்தாரின் ஜி கம்பியைத் தட்டிப் பாருங்கள்—ஜ்யோ!

திராட்சைத் தோட்டத்தில் கொத்துக் கொத்தாகத் தொங்கும் திராட்சைகளில் ஒரு திராட்சையின் நுனியில் தூங்கும் பனித் துளியை நாக்கில் தொட்டுப் பாருங்கள்—ஜ்யோ!

இளங் காலையில் 80 மைல் வேகத்தில் 'புல்லெட்' மோட்டார் சைக்கிளில் சீறிச் செல்லுகையில் முகத்தில் காற்றை உணர்ந்து பாருங்கள்—ஜ்யோ!

கதையை விட்டு விட்டேனே? டெலிபோன் டைரக்டரியில் பரமேச்வரன், ஏ. பரமேச்வரன், ஸி. பரமேச்வரன், டாக்டர் எம். பரமேச்வரன், டாக்டர் வி என்று எத்தனை பரமேச்வரன்கள்? அவர்கள் ஒவ்வொருவரையும் கூப்பிடுவதா? எதற்கு?

ஜ்யோவுக்கும் எனக்கும் என்ன உறவு என்று சொல்லி விடுகிறேன். தப்பாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நான் பெண்களைப் பொறுத்தவரையில் மிகவும் யோக்கியமானவன். உங்கள் வயது வந்த தங்கைகளை என்னிடம் பயமில்லாமல் ஒப்படைக்கலாம். நம்பகமானவன்..... ஜ்யோ குமாரின் தங்கை. அவன் வெளியூர் சென்றிருக்கிறான். என்னைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி யிருக்கிறான்.

''ட்ரெஸ் பண்ணிக் கொள் ஜ்யோ! வெளியில் போய் டின்னர் சாப்பிட்டு விட்டு வரலாம். என்னிடம் ஏகப்பட்ட பணம் இருக்கிறது'' என்றேன்.

''எப்படிக் கிடைத்தது?''

''எரிச் பெனவலண்ட் அங்கிள்'' என்றேன்.

''இங்கேயே இருக்கலாம். பணம் செலவழிக்க வேண்டாம்'' என்றாள் என்னருகே!

''உன் அண்ணன் வந்தால் கத்தியை உருவிக்....''

''அண்ணன் ஊரில் இல்லை.'' அவள் என் ஜாக்கெட்டின் ஜிப்பை இறக்கினாள்.



''ஏன் இந்த இடத்தைக் காலியா விட்டிருக்கு?''

''ஜோக் போட்டால் மட்டும் சிரிக்கப் போறாங்களா என்ன!''

''ஜ்யோ இது நல்லதல்ல. ஏற்கெனவே எனக்கு ரத்த அழுத்தம் மார்ஜினல். மெடிகலுக்கு வேறு போக வேண்டும்.''

அவள், நான் பின்பக்கமாக ஊன்றி இருந்த கைகளைத் தட்டி விட்டாள். நான் அப்படியே சாய்ந்தேன்.

''டீ எப்போது வரும்?'' என்றேன்.

''பிறகு'' என்றாள்.

நான் ஒரு தமிழன். என் கற்பு என்ன ஆகிறது?

''ஐயோ, நாம் இருவரும் உணர்ச்சி வசப்பட்டுத் தன்னிலையை மறந்துவிடக் கூடாது என்று என்னுள் என் மனச்சாட்சி சொல்கிறது'' என்றேன். எந்தப் புத்தகத்தில் படித்தேன்?

''வார்த்தைகள் வார்த்தைகள்'' என்றாள் ஜ்யோ.

''இப்போது நான் பேசாவிட்டால் நிலைமை கவலைக்கிடமாகி விடும்'' என்றேன்.

''ஜேகே! காப்டன் ஜேகே! என்னை விமானத்தில் அழைத்துச் செல்கிறாயா?'' என்றாள்.

''நாளைக்குக் காலை'' என்றேன்.

''ஃப்ளை மி காப்டன்'' என்றாள்.

விமானம் புறப்பட்டு மெதுவாகச் சூடு பிடித்து மிக வேகமாக ஓடி வானத்தில் எவ்விப் பறந்தது.

—தொடரும்

சுஜாதா

சென்ற அத்தியாயத்தின் இறுதியில் நான் இருந்த நிலையை மேலே விவரிக்கத் தேவையில்லை. இதை வாசிப்பவர்களின் ஊக புத்தியில் எனக்கு நம்பிக்கை உண்டு. அப்படிப்பட்ட புத்தி குறைந்தவர்கள் இந்தக் கதையை ஒரு வாரம் இரண்டு வாரம் படித்து விட்டுத் தூக்கி எறிந்திருப்பார்கள். அவர்களைப் பசியுள்ள புலி தின்னட்டும். எனவே, ஜ்யோ இந்தக் கதையின் கதாநாயகி இல்லை. ஆனால் மறுபடி வருவாள். இந்தக் கதைக்கு கதாநாயகி என்று ஒருத்தி கிடையாது. (சில பெண்கள் வருகிறார்கள்). கதாநாயகன் ஒருவன் உண்டு. அது ஜேகே என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஃபெயில் மார்க். எனவே,

ஜ்யோவை நான் பார்க்கச் சென்றது, அவளை அழைத்துக் கொண்டு புதிய நோட்டுகளை இறைத்துச் செலவழித்து ஒரு ஓட்டலில் சுமாராகச் சாப்பிட்டு விட்டு, சினிமாப் போய் விட்டு அப்புறம்..... அவள் என்னவோ முதல் விஷயங்களை விட்டுவிட்டு, 'அப்புறம்..... நிகழ்வ' நிலையே கவனமாக இருந்தாள். அது எனக்குக் கிறக்கத்தை அளித்தாலும் அதை விவரமாகச் சொன்னால், 'அனுவசியத்துக்கு செக்ஸை நுழைக்கிறான் கட்டையை எடுத்து அடி என்பீர்கள். எனவே கூர்மையாகக் கதைக்குள் நுழைகிறேன். ஜ்யோ? அவளைப்பற்றி ஒன்றுமட்டும் சொல்கிறேன். ''கண்டு கேட்டு உண்டு யிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள'' என்று தமிழ்மறை சொல்வதை அறியாதவர் உளரோ, அறியாதாரும் உளரோ! ஜ்யோ மட்டும் என்ன! ஒரு ராஜகுமாரி பின்னால் வருகிறாள். அத்தியாயம் ஆறு என்று நினைக்கிறேன். அந்த ரா. நிஜமாகவே இருதயத் துடிப்பை நிறுத்தக் கூடியவள். காது நுனிகளில் 'சில்' என்று உணர வைக்கக் கூடியவள். அவள் மா...காத்திருங்கள் அத்தியாயம் ஆறு வரை.

அத்தியாயம் நான்கில் ஆரம்பத்திலேயே இப்படி ஜல்லியடித்துக் கொண்டிருக்கிறேனே, சித்திரைத் தேர் மாதிரி கதை நகரவில்லை அல்லவா? நகர்த்துகிறேன்.

மறுநாள்.

மறுநாள்.

மறுநாள்,

மூன்று தினங்களும் நான் பூச்சி மருந்தடிக்கச் சென்றேன். சென்ற போது மூன்று தினங்களும் மோங்காவில் இறங்கினேன். மூன்று தினங்களும் ஒழுங்காக வேலை நடந்தது. அதே துண்டு மீசை! அதே மாதிரிக் கருவியை விமானத்தில் வைத்தார்கள். அந்த சௌகிதாரின் அட்ரஸே இல்லை. டில்லியில் வந்து இறங்கினதும் உடனே பரமேச் வந்து அதைச் சேகரித்துக் கொண்டு சென்றார். மூன்றாவது நாள் மட்டும் வரவில்லை. வேறு ஏதோ ஆசாமி வந்திருந்தான். தினம் எனக்கு 2500ரூபாய் கிடைத்தது. ஒரேமாதிரி சலவை நோட்டுகள். ரம்மி ஆடினேன். ஒரு தபலா வாங்கிக்கொண்டு தட்டிப் பார்த்தேன். மேல் வீட்டுக்காரன் அரற்றினான். ஏதோ செலவழித்தேன். நிறைவப் பணம் பாக்கியிருந்தது. எப்படிச் செலவழிப்பது?

மூன்றாம் நாள் மாலை நான் ஃப்ளைட்டுக்குப் பிறகு நிரம்பக் கனைத்திருந்தேன். ஒரு பாட்டில் பீர் சாப்பிட்டால்தான் உடம்பு நிலைக்கு வரும்போல இருந்தது. டில்லியில் இது ஒரு பேஜார். மது சாலைக்குப் போனோம், (பாருக்கு) பருகினோம் (குடித்தோம்) என்று கிடையாது. கடைக்குப் போய் வாங்கி வர வேண்டும் (வாரத்துக்கு இரண்டு நாள் ட்ரை). கடையிலிருந்து வாங்கிவந்து அதை ரூமுக்கு எடுத்துச் செல்வதற்குள் பீரின் ஜில் கம்மியாகிவிடும். அப்புறம் ஒப்பனரைத் தேடவேண்டும். கஷ்ட காலம். இதனால் நான் கையில் சர்தார்கள் போல இரும்பு வளையம் மாட்டியிருக்கிறேன். இதனால் பாட்டில் திறக்க மிக சௌகரியம்.

குளித்துவிட்டு லைன் ஸ்டோருக்கு நடந்து போய் கோல்டன் ஈகிள் ஒரு பாட்டில் வாங்கிக் கொண்டு வீடு திரும்பி, கதவைத் தாளிட்டுக்கொண்டு, ஒரு கிளாஸில் ஊற்றி நுரையுடன் வாயில் டம்ளரைச் சப்புகிறேன். அந்த ஆசாமி கதவைத்தட்டுகிறார். எந்த ஆசாமி? கதவைத் திறந்தால்தானே தெரியும்? திறந்தேன்.

''குட் ஈவினிங்'' என்றார்.

''ஈவினிங்'' என்றேன்.

''நீங்கள்தான்....'' என்று பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து

முழுப் பெயரையும் வாசித்தார். என்னை நிமிர்ந்து பார்த்து ஒரு கேள்விக்குறியைச் சேர்த்தார்.

நான், ''ஆம்'' என்றேன். அவருக்கு என் வயதுதான் இருக்கும். மீசை கிசை எல்லாம் தடபுடலாக சுத்தமாக வைத்திருந்தார். செம்பட்டைத் தலையும், கறுப்புக் கண்களும், ஒன்று சேர நான் பார்த்துக் கொண்டிருக்கிற புருவங்களும், சுத்தமான கலப்படமில்லாத, 'சட்டம்' என்று அறிவிக்கும் பொதுத் தோற்றமும்....

''நான் உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறேன்.''

''எனக்குப் புரியவில்லை'' என்றேன். ஆனால் நான் ஒன்றும் அதிர்ச்சி அடைந்து விட்டத்து வரை எம்பி விடவில்லை. நான் ஒரு வேளை உள்மனத்தில் இந்தக் கைதை எதிர்பார்த்தேனா?''நீங்கள் யார்?'' என்றேன்.

''நான் ரமேஷ் வர்மா. ஸி.ஐ.பி யில் ஸ்பெஷல் இன்வெஸ்டிகேடிங் ஆஃபீசர். உங்களைக் கைது செய்ய எனக்கு வாரண்ட் இருக்கிறது. மாஜிஸ்டிரேட் கையெழுத்திட்டது'' என்று காகிதத்தை என் முன் நீட்டினார். நான் அதை அகவாரசியமாகப் படித்தேன். பாதி உருதுவில் எழுதியிருந்தது.

அன்புள்ள வாசகர்! நீங்கள் இதற்கு முன் கைதாகி இருக்கிறீர்களா? நான்கூட ஆனதில்லை. நான் பார்த்த கைதெல்லாம் இதுவரை சினிமாவில்தான். இன்ஸ்பெக்டர் இஸ்திரி பண்ணி பூனிஃபார்ம் அணிந்து பளபளக்கும் விலங்கை நீட்டுவார். பின்னணி சங்கீதம் அலறும். என் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அழகான முட்டாள்தனமான பெண் விசித்து விசித்து அழுவாள். கதாநாய் கைதாகிறான் என்று!

என் கேஸில் அப்படி இல்லை. வந்தவர் ஏதோ ரம்மி ஆட வந்தவர் போல வந்தார். காகிதத்தைக் காட்டினார். பின்னணியில் விதித பாரதியில், ஆஷா ''கர்லே ப்யார் கர்லே தோ தின் ஹை ஜெஹி'' என்றாள். நான் ''உட்காருங்கள், பீர் சாப்பிடுகிறீர்களா?'' என்றேன்.

அவர், ''நான் குடிப்பதில்லை'' என்றார், காந்தி போல.

''எதற்காக என்னை அரெஸ்ட் செய்ய வேண்டும்?''

''மூன்று காரணங்கள். ஒன்று: இண்டியன் ஏர்க்ராஃப்ட் விதிகளை மீறியது. இரண்டு கஸ்டம்ஸ் எக்சைஸ் விதிகளை மீறியது. மூன்று இண்டியன் பீனல் கோடை மீறியது'' என்றார்.

''நான் எமர்ஜன்ஸிக்காக எங்கே வேண்டுமானாலும் இறங்கலாம், தெரியுமா?''

''நான்கு நாட்கள் தினம் தினம் எமர்ஜன்ஸியா! அப்புறம் உத்தர் பிரதேசத்திலிருந்து டில்லிக்கு நீங்கள் கொண்டு வந்தீர்களே விமானத்தில்; அது என்ன?''

''அது ஒரு விஞ்ஞானக் கருவி!''

அவர் சிரித்தார்.

''ஏன்?''

''காப்டன் ஜேகே! நீங்கள்

அமெச்சூர்த்தனமாகப் பொய் சொல்கிறீர்கள்.''

''ஏன்?''

''நீங்கள் கொண்டு வந்த கருவிகளில் உள்ளே என்ன அடைத்து இருந்தது தெரியுமா?''

''சொல்லுங்களேன்.''

''ஒப்பியம்!''

''என்ன?''

''ஒப்பியம். போதைச் சரக்கு. மொத்த மதிப்பு மூன்றரை லட்சம். மிஸ்டர் ஜேகே, போலீஸ்காரர்கள் முட்டாள் அல்ல. இண்டர்போல் என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. தெரியுமா? உங்களைப் போன்ற ஆசாமிகள் எத்தனை பேரை பார்த்துக்கிறோம் தெரியுமா?''

''ஒப்பியம்!'' என்றேன். எனக்கு டாக்டர் (ராஸ்கல்) பரமேச்வரனின் ஞாபகம் வந்தது! 'அடேய், டாக்டா!' என்றுகெட்ட வார்த்தைகள் தேடினேன்.

''ஒப்பியம் கடத்துவது குற்றம் தெரியுமா? அப்புறம் மற்றொன்று சொல்லி விடுகிறேன். அந்த நூறு ரூபாய் நோட்டுக்களை இன்னும் வைத்திருக்கிறீர்களா?''

''எந்த நூறு ரூபாய் நோட்டுக்கள்?''

"நீங்கள் சென்ற தினங்களில் செலவழித்தவை. ஒரு டாக்ஸிக்காரனுக்குக் கொடுத்தது. ஒரு புத்தகக் கடையில் கொடுத்தது. ஒரு சங்கீதக் கருவிகள் கடையில் கொடுத்தது."

இவருக்கு எப்படித் தெரியும்? ''ஏன்?''

''அவை கள்ள நோட்டுக்கள். உங்கள் நன்மைக்குச் சொல்கிறேன். உங்களிடம் மீதமிருக்கும் நோட்டுக்களை சரெண்டர் செய்து விடுங்கள்.''

நான் சற்று நேரம் யோசித்தேன்.

''நோட்டுக்கள் செல்லாதா?''

''செல்லாது. ஆனால் நல்ல முயற்சி; 'வாட்டர் மார்க்'கில்தான் சற்றுக் குறை இருந்தது. அச்சகம் எங்கே வைத்திருக்கிறீர்கள்?''

நான் அவரைப் பார்த்தேன். மனதில் டாக்டர் பரமேச்வரன்! படவா! டாக்டர் பரமேச்வ! விஞ்ஞான ஆராய்ச்சியா! லிண்டிலே ஷன்கௌண்ட்டரா! தாத்தாடேய்! செல்லாத நோட்டுக்கள்! எவ்வளவு சுலபமாக ஏமாந்திருக்கிறேன்!

''ஆபீசர்! டாக்டர் பரமேச்வரன் என்று ஒருத்தர்தான் இதில் என்னைக் கூட்டிவிட்டார். எனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. வயசானவர். டூத் பிரஷ் மீசை. அவரைப் படம் போடும் போது கூட மீசை இல்லாமல் போட்டு விட்டார்கள்.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''சார்! நான் இதில் அறியாமல் மாட்டிக் கொண்டவன். எய்தவன் இருக்க அம்பை என்னவோ செய்கிறீர்கள், நீங்கள்.''

''அப்படிச் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். நேபால் எல்லையிலிருந்து சாமர்த்தியமாகக் கடத்தப்பட்ட ஒப்பியம் டில்லிக்குக் கொண்டு வர நீங்கள் உதவியிருக்கிறீர்கள். அது பற்றியும் எனக்குத் தெரியவே தெரியாது என்று சொல்லப்போகிறீர்களா?''

''இப்போது என்ன ஆகும்?'' என்றேன்.

''கைது!'' என்றார் சுருக்கமாக.

''நான் பீர் சாப்பிடலாமா?''

''சீக்கிரம் குடியுங்கள். அது குற்றமில்லை!''

மடக்கென்று குடித்தேன். சற்று தெம்படைந்தேன்.

''என்ன ஆதாரம் இருக்கிறது உங்களிடம், நான்தான் கடத்தினேன் என்பதற்கு?''

''நீங்கள் இன்று வந்து இறங்கிய போது எங்கள் ஆசாமிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெட்டி காரில் வைக்கப் பட்ட போது பார்த்துக் கொண்டிருந்தோம். காரைக் கேட்டிலேயே மடக்கி விட்டோம். அதில் இருந்த இரண்டு பேரையும் கைது செய்து விட்டோம். மூன்றாவது நீங்கள். நீங்களும் ஒன்றும் தெரியாது என்கிறீர்கள். பார்த்து விடலாமே எவ்வளவு தூரம் உங்களுக்குத் தெரியும் என்று.''

''என்ன இது?''

''என்ன என்ன இது''

''என்னை அடிக்கப் போகிறீர்களா?''

''அடிக்க மாட்டோம்.''

''பின்? லேட் அடியில் வைத்து முகத்தில் தண்ணீர் அடித்துக் கேள்வி மேல் கேள்வி கேட்கப் போகிறீர்களா? நான் அம்பேல் ஸார். எனக்கு ஒன்றும் தெரியாது. கடவுள் சத்தியமாக நான் ஏதோ சாதாரணப் பூச்சி மருந்து பைலட். பூச்சி! மருந்து! அக்ரிகல்சர்! க்ராப்ஸ்ப்ரே! விர்ர்ர்ர்ர்ர்.... விஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....'' என்றேன் அபிநயத்துடன்.

''கண்டு பிடித்து விடுவோம்'' என்றார். ''மிஸ்டர் ஜேகே. அநாவசியத்திற்குப் பொய் சொல்லாதீர்கள். உங்கள் ஆப்பரேட்டர் யார் என்று சொல்லி விடுங்கள். விட்டுவிடுவோம். உங்களைவைத்துக் கொண்டுதான் இந்தக் கூட்டத்தை பிடிக்க உத்தேசம்.''

''நீங்கள் டாக்டர் பரமேச்வரனை இன்னும் கைது செய்யவில்லையா?''

கோல்ட் நைட் பில்ஸ்

தங்க மாத்திரை

20-வது நூற்றாண்டின் இணையற்ற சித்த ஆயுர்வேத தயாரிப்பு.

நற்சாட்சிகள் ஏராளமாகப் பெற்றது. எதுவும் இதற்கு ஈடாகாது இழந்துபோன தாதுவை மீட்டெடுக்க. நசிந்து போன சக்தியை சரி செய்ய, இளைத்து உருக்குலைந்த உடல் வாகுவை மீட்டெடுக்க அபாரமான உடல் பலத்தை பெருக்க, புஜபலபராக்கிரமத்துடன் இல்வாழ்க்கை திகழ உபயோகியுங்கள். தேவையட்ட போது உடனுக்குடன் பலன் பெறவும் உபயோகிக்கலாம். தம்பதிகள் - வாலிபர்கள் - ஆடவர்கள் முழு ஆதரவு பெற்ற அற்புத மருந்து இதுவே. பத்தியமில்லை. வி. பி.யில் பெற இன்றே எழுதுங்கள். 100 பில்ஸ் ரூ. 37-50 50 பில்ஸ் ரூ. 20. போஸ்டேஜ் செலவு ரூ. 3-00, பில்ஸ், 50க்கு குறைவாக அனுப்ப இயலாது.

ராகினி மெடிகோ (D. K.) பழனி S. I.

போன் : P.P. 318 :—: தந்தி : ராகினி மெடிகோ.

''யாரது?''

''என்னைச் சந்தித்தவர். யூஸி லார்...'' என்று ஆரம்பித்து நடந்ததைச் சொன்னேன் ஒரு வரி விடாமல்... ''இதைத் தவிர வேறு ஏதும் எனக்குத் தெரியாது தெரியாது தெரியாது, ஒன்றும் தெரியாது.''

''அப்படியா'' என்றார்! அவர் முகத்தில் சொன்ன விதத்தில் துளிக் கூட நம்பிக்கை தெரியவில்லை.

''இரும் இரும். என் வக்கீலை நான் காண்டாக்ட் செய்ய வேண்டும்.''

''செய்யலாம். அரசியல் சட்டத்துக்குட்பட்ட எல்லா உரிமைகளும் உங்களுக்குத் தரப்படும். கிளம்புகிறீர்களா?''

''என்னை ஜெயிலில் போடுவீர்களா?''

''ஆம். நீங்கள் பெயிலுக்கு முயற்சிக்கலாம்.''

''நான் ஒரு லாயருடன் பேச வேண்டும்.''

''ஸ்டேஷனில் வசதி செய்து தருகிறோம். வருகிறீர்களா?''

''விலங்கு மாட்டுவீர்களா?''

''தேவையில்லை.''

''டூத் பிரஷ், டூத் பேஸ்ட் எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டுமா?''

''வேண்டாம். வாருங்கள். உங்கள் லாயரிடம் பேசி பெயில் வாங்கிக் கொண்டு, தற்காலிக விடுதலை பெற முயற்சி செய்யுங்கள்.''

நல்ல மனிதராகத் தெரிகிறார். என் மேல் கொஞ்சம் நம்பிக்கை தெரிவிக்கிறார். என்னை நம்பத் தயாராகிறார் என்பதும் தெரிகிறது.

சாக்கடையைத் தாண்டி போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அதில் பெஞ்சு போட்டு சிலர் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பெண் சத்தியமாக பத்தினி இல்லை. விசித்து அழுது கொண்டிருந்தாள். மகாத்மா காந்தி, கேப்மாரிகளின் போட்டோ ஆல்பம், புராதன மேஜை, ஸைக்கூடு, பெரிய ரிஜிஸ்டரில் உருது எழுத்துக்கள், இன்ஸ்பெக்டரின் ஸ்கூட்டர்.

அந்த இன்ஸ்பெக்டர் என்னைக் கைது செய்தவரைக் கண்டதும், ஒரு கஞ்சி போட்டுச் சலவை செய்த சல்யூட் அடித்தார். ''உட்காருங்கள்'' என்றார். என்னை இல்லை.

''நேம்?''- ''ஜேகே.''

''அவ்வளவுதானா?'' - ''அவ்வளவுதான்!''

''ஆக்குபேஷன்?''—''லைபலட்.''

''ஏஜ்?''—''33.''

''லெக்ஸ்'' - ''நிரூபிக்க வேண்டுமா?''

அவர் என்னை நிமிர்ந்து முறைத்ததில், 'தனியாகக் கவனித்துக் கொள்கிறேன்' என்பது தெரிந்தது. அந்தப் பெண் அழுகையை நிறுத்தி விட்டாள். என்னைப் பார்த்தாள், பெட்டும் பார்வை.

''டெலிபோன் செய்ய வேண்டும்'' என்றேன். அவர்கள் நான் சொல்வதைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தார்கள். காகிதங்கள் கைமாறின.

''நான் என் லாயரை கலந்து கொள்ளாமல் ஒரு வார்த்தை பேச மாட்டேன்'' என்றேன், எட்டு வார்த்தைகளில்.

''யார் உன் லாயர்?''

''எனக்குத் தெரியாது, டைரக்டரியைப் பார்க்க வேண்டும்'' என்றேன். ''டைரக்டரி தருகிறீர்களா?''

''சர்க்கார் பைலட்டாக எத்தனை நாள் இருக்கிறீர்கள்?''

நான், ''டைரக்டரி'' என்றேன்.

''சர்க்கார் பைலட்டாக எத்தனை நாட்கள் இருக்கிறீர்கள்?''

''டைரக்டரி, டெலிபோன். அப்புறம்தான் மேல் வார்த்தை. என் உரிமைகள் எனக்குத் தெரியும்.''

டைரக்டரியை என்னிடம் எறிந்தார். நான் அந்தப் பெண் அருகில் போய் உட்கார்ந்தேன். அவன் நகரப் பிரயத்தனம் செய்யவில்லை. அவர்கள் புகை பிடிக்க ஆரம்பித்தார்கள். வெளியே ஸ்கூட்டர்கள் கிழித்துக் கொண்டு சென்றன.

டைரக்டரியை எடுத்து கிளாஸி ஃபைட் லிஸ்ட்டை பச்சைப் பக்கங்களில் தேடினேன். அதில் லாயர்ஸ், வக்கீல்கள் என்கிற பகுதியில் உள்ள பெயர்களில் விரலை ஓட்டினேன். தமிழ்ப் பெயராகத் தேடினேன். நான் நினைத்தது இது. முதலில் தமிழ் தெரிந்த ஒரு வக்கீலைக் கூப்பிட வேண்டும். அவரிடம் சற்று தாராளமாகப் பேசலாம். முதலில் நான் பெயிலில் விடுதலை ஆக வேண்டும். ஜெயிலில் படுத்து எனக்குப் பழக்கம் இல்லை. எனக்கு படுக்கை சுத்தமாக இருக்க வேண்டும். தலைக்கு இரண்டு தலையணைகள் வேண்டும்... பக்கத்தில் ஒரு....

அனந்தநாராயணன்?- வேண்டாம். ரொம்ப நீளமான பெயர்.

அருள்சாமி?- வேண்டாம் பைபிளைப் பிரிக்கும்.

பாஸ்கர் ராவ் - வேண்டாம் தெலுங்காக இருந்தால்?

சிதம்பரம்-பெயர் பிடிக்கவில்லை.

சின்னசாமி ஐயர் - வேண்டாம். சுப்ரீம் கோர்ட்டு மூக்குப் பொடியாக இருக்கும்.

தீனதயாளு?எதிராஜ்..கணேஷ்...

கணேஷ்! ஓ. எஸ். கணேஷ்... சின்ன, கச்சிதமான பெயர், என் பெயரைப் போல. —தொடரும்.



COMICS PDF TIMES

டெலிபோனைச் சுழற்றினேன். எதிரே அவர்கள் நின்று கொண்டு என்னையே நோக்கிக் கொண்டிருக்க, நீண்ட நேரம் அது எதிர்ப் பக்கத்தில் அடிக்க, என் நம்பிக்கை தளர ஆரம்பித்தது.

கடைசியில் ''ஹலோ'' என்றாள் ஒரு பெண். வேறு சூழ்நிலையில் அந்தக் குரலை வர்ணித்திருப்பேன். அதில் கலந்திருந்த வரவேற்பைப் பற்றி ஒரு பாரா கூறியிருப்பேன். தற்போது சூழ்நிலை - ஞாபக மிருக்கிறதா - கைதாகப் போகிற சூழ்நிலை.

''கணேஷ் இருக்கிறாரா?''

''ஹூ இஸ் ஸ்பீக்கிங்?''

''ஐ'ம் ஸ்பீக்கிங் ஃபரம் பீக்கிங்'' என்று சொல்லியிருப்பேன் - சூழ்நிலை - ''என் பெயர் ஜேகே. என்னை அவருக்குத் தெரியாது.''

''ஜஸ்ட் ஏ மினிட் ப்ளீஸ்.''

அவள் போனைப் பொத்தி விட்டு ஏதோ சொல்கிறாள் என்பது தெரிந்தது.

''உங்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் இருக்கிறதா?''

''உன்னுடனா?''

''இல்லை, மிஸ்டர் கணேஷுடன்.''

''மிஸ்! உன் பெயர் தெரியாது. நான் அவருடன் அவசரமாகப் பேச வேண்டும்- கணேஷ் என்பவருடன்''

மறுபடி பொத்தல்.

''ஸாரி சார். அவர் கொஞ்சம் பிஸியாக இருக்கிறார். நீங்கள் உங்கள் டெலிபோன் நம்பரைச் சொன்னீர்கள் என்றால் வில் ரிங் யூ பாக்.''

''எழுதிக் கொள்ளுங்கள். துக்ளக் ரோடு போலீஸ் ஸ்டேஷன். போன் செய்து மூன்றாவது பெஞ்சில் சைட் பர்ன்ஸுடன் படுத்திருக்கும் கைதி என்று கூப்பிடுங்கள். தாங்க்ஸ்'' என்று போனை எறிந்தேன். உள்ளத்தில் எரிந்தேன். யார்யா இந்த கணேஷ், மகாப் பிடுங்கி என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். அப்பாயிண்ட்மெண்ட் வேண்டுமாம். பெயர் சொல்ல வேண்டுமாம். பெண் ஒருத்தி வைத்துக் கொண்டிருக்கிறான் சாக்லெட் கலந்து பேசுவதற்கு. கணேசா! உன்னைத் தனியாகக் கவனித்துக் கொள்கிறேன். நீ இந்தக் கதையில் வேண்டாம்.

''மிஸ்டர் ஜேகே! டெலிபோன் ஆகிவிட்டதா?'' என்றார், என்னைக் கைது செய்ய வந்த பஞ்சாபி. (பஞ்சாபிதானே சொன்னேன்?)

''ஆம்'' என்றேன்.

''லாயர் வருகிறாரா?''

''இல்லை மிஸ்டர்! எனக்கு இந்த மாதிரிக் கைதாகிப் பழக்க மில்லை. என்னை அனாவசியத்திற்கு இழுத்து உள்ளே தள்ளி இருக்கிறீர்கள். நான் இந்த விவகாரத்தில் ஒன்றும் அறியாத ஒரு வெளி ஆள். என்னை ஒரு கிழவன் வந்து பார்த்தான். நோட்டுக்களைத் திணித்தான். உத்தர் பிரதேசத்தில் ஒரு...''

''அதெல்லாம் எங்களுக்கு முழுவதும் தெரியும்.''

''பின் ஏன் என்னை இங்கு கூட்டி வைத்திருக்கிறீர்கள், நான் வரட்டுமா?''

''இல்லை. இன்றிரவு நீங்கள் இங்கேதான் தங்க வேண்டி இருக்கும். நாளைக்கு பெயிலுக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்... இன்றைக்கு நீங்கள் ஜெயிலில் இருந்தாக வேண்டும். மிஸ்டர் அரோரா! எல்லாம் எழுதியாகி விட்டதா?''

''நீங்கள் ஒரு மகத்தான தவறு செய்கிறீர்கள். நான் எச்சரிக்கிறேன். எனக்குப் பெரிய பெரிய மந்திரிகள், எம்.பி.க்கள், கவுன்சிலர்கள், ஐ.ஜி.ஆஃப் போலீஸ் எல்லோரையும் தெரியாது. ஆனால் ஒரு தனிப்பட்ட குடிமகன் என்கிற ரீதியில் நான் என் உரிமைகளுக்காகப் போராட இன்னும் இந்த நாட்டில் முடியும் என்று நினைக்கிறேன். கபர்தார்'' என்றேன்.

''ஆசாமி நன்றாகப் போட்டிருக்கிறான்'' என்றான் ஒரு கான்ஸ்டபிள்.

''கான்ஸ்டபிள் கா பச்சா! வா உனக்கும் போடுகிறேன்'' என்றேன். அவன் உக்கிரமானான். ''சார்! நான் இவனை அழைத்துச் செல்கிறேன் உள்ளே'' என்று கைகளைத் தேய்த்துக் கொண்டான்.

''கிட்ட நெருங்காதே, கிழிப்பேன்'' என்றேன்.

''மிஸ்டர் ஜேகே! டோண்ட் பி இம்பாஸிபில். நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம். சட்டப்படி நீங்கள் குற்றம் செய்தவர். எக்ஸைஸ் விதிகளை மீறி ஒப்பியம் கடத்தினீர்கள். போலி நோட்டுக்களைப் பரப்பி இருக்கிறீர்கள். சர்க்கார் உத்தியோகஸ்தனைத் தன் கடமையைச் செய்வதிலிருந்தும் தடுத்தீர்கள்...''

''இதை எல்லாம் நான் முன்பே கேட்டு விட்டேன், நான் சொல்லவது என்னவென்றால்...''

''நானும் இதை முன்பே கேட்டு விட்டேன். நாளை மாஜிஸ்டிரேட்டிடம் சொல்லுங்கள். தயவு செய்து வருகிறீர்களா?''

''மாட்டேன்.''

''கான்ஸ்டபிள்.

''நான் கவனிக்கிறேன் சார்.''

''கிட்ட வராதே. உதை படுவாய்'' என்று முஷ்டிகளைத் தயாராக வைத்துக் கொண்டேன். ஏன் இப்படிச் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறேன்? என் ரத்தம் ஏன் இப்படி அநாவசியமாகக்

பரமேச்வரனை மறுபடி சந்திக்கும் ஐந்தாவது அத்தியாயம்.

சுஜாதா

கொதிக்கிறது? ஏன் எனக்கு இருக்கும் சந்தர்ப்பங்களை அரிதாக்கி கொள்கிறேன்?...

பேசாமல் கேள்வி கேட்காமல் உள்ளே நடக்க வேண்டியவன் தானே!

கான்ஸ்டபிள் என்னருகே வந்து, நான் அவனை அடித்து, அவன் என்னைத் திரும்ப அடித்துக் கலாட்டா ஆகி... இப்படி ஒன்றும் நடக்கவில்லை. அதற்கு முன் எல்லோர் கவனத்தையும் கவரக் கூடிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது. கப்பல் போல் ஒரு கார் - இம்பாலா என்று நினைக்கிறேன் - அது வந்து போலீஸ் நிலையத்தின் வாசலில் வந்து நின்றது. அது மிக மென்மையாகத் திறக்கப்பட்டு, சாத்தப்பட்டு, ஒரு ஆசாமி இறங்கினார். நேராக உள்ளே வந்து ''ஒன் மினிட் ஆபீசர்'' என்று அந்த அதிகாரியைக் கூப்பிட்டார்.

அதிகாரி அவரைப் பார்த்ததும் உடனே நிமிர்ந்தார். ''கான்ஸ்டபிள் கொஞ்சம் இரு'' என்றார். வந்தவர் அருகில் சென்றார். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டார்கள். வந்தவர் பேச்சில் அடக்கமும் அதிகாரமும் தென்பட்டது. அவர் நல்ல உயரமாக, தொப்பை போட்டதைக் கூடச் சமாளிக்கக் கூடிய உயரமாக இருந்தார். கண்ணாடி ஃப்ரேம் தங்கம் காட்டியது. மோதிரங்கள் ஜ்யோவின் புன்னகையைப் போல மின்னின. அணிந்திருந்த கதர் இம்போர்ட்டட் ஆக இருக்க வேண்டும்.

அதிகாரி பவ்யமாக சன்னிதானத்துக்கு முன் ஜூனியர் சிஷ்யன் போலக் கேட்டுக் கொண்டிருந்தார். அடிக்கடி தலை ஆடியது.

வந்தவர் பேச்சை முடித்தார். தன் இம்பாலாவை நோக்கி நடந்தார். டிரைவர் கதவைத் திறந்து காத்திருக்க, உள்ளே நுழைந்து கொண்டார். கதவுகள் மரியாதையுடன் சாத்தப்பட்டு கார் மரியாதையுடன் கிளம்பி என் காட்சியிலிருந்து மறைந்தது.

அவரை வழியனுப்பி விட்டு வந்த அதிகாரி என்னருகே வந்தார் ''காப்டன் ஜேகே!'' என்றார்.

''எஸ்.''

''உட்காருங்கள். கோலா சாப்பிடுகிறீர்களா? ஏய் 1182! ஷர்மா கடையில் போய் ஐஸ் போட்டு கோலா ஒன்று உடைத்துக் கொண்டு வா.''

''எனக்கு வேண்டியது ஆஸ்ப்ரின். என்ன இந்தத் திடீர் மாற்றம்?''

''காப்டன் நீங்கள் இதை முன்னமேயே சொல்லி இருக்க வேண்டும்.''

''எதை?''

''அவரை உங்களுக்குத் தெரியும் என்பதை.''

''எவரை?''

விஷமமாக, கிருஷ்ண பரமாத்மா போலச் சிரித்தார். ''நீங்கள் நன்றாக நடிக்கக் கூடியவர். எனிவே ஐ'ம் வெரி ஸாரி. உங்களுக்கு இவ்வளவு சிரமம் ஏற்படுத்தியதற்கு. ஸாரி, ஸாரி - ஸாரி. கோலா எங்கேடா! - நீங்கள் போகலாம்.''

''யூ மீன்! நீங்கள் என்னைக் கைது செய்யப் போவதில்லையா!''

''கைதா! யார் சொன்னார்கள்? உங்கள் மீது குற்றம் ருசுவாகவில்லை. நீங்கள் போகலாம். யூ ஆர் ஃப்ரி!''

''வாட் இஸ் ஆல் திஸ் ஆபீசர்?''

''உங்களுக்கே தெரியுமே!''

''நிச்சயமாக எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னைக் கைது செய்யக் கூப்பிடுகிறீர்கள். திடீர் என்று ஸோடா கொடுத்துப் போடா என்கிறீர்கள். என்ன அது விளையாட்டா? அந்த இம்பாலா யார்?''

''நீங்கள் இப்போது எங்களைக் கேலி செய்கிறீர்கள். செய்யுங்கள். ஆனால் இந்த விஷயத்தைத் தயவு செய்து மேலே கிளறாதீர்கள். அது எங்கள் லெவலுக்கு மிகவும் மே
பட்ட விவகாரம். உங்களை நாங்க
அரெஸ்ட் செய்யவில்லை. எங்க
வண்டி தருகிறோம். எங்கே வே
டுமோ அங்கே கொண்டு விட்
விடுகிறோம். மன்னிப்பு வேண்
மானால் எழுதிக் கூடத் தருகிறோ
தயவுசெய்து போகிறீர்களா?''

நான் புரியாமல் வெளியே
தேன். ''ஜீப் தயாராக இருக்கி
காப்டன்'' என்றார் அதிகாரி. நா
ஜீப்பில் யோசித்துக்கொண்டே
கார்ந்தேன். ஜேகே விமானத்
டப்பா கொண்டு வருகிறான். கை



கிறான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறான் - திடீரென்று ஒரு புள்ளி விஜயம்-போலீஸ்காரர்கள் குழைந்து பிரிவுபசாரம் செய்கிறார்கள். என்ன இதெல்லாம்? என்ன இதெல்லாம் என்கிறேன்.

''எங்கே போகணும் சார்?''

''கைலாஷ் காலனி'' என்றேன்.

எனக்கு மிகவும் அமைதி தேவையாயிருந்தது. 'ஆராம்' தேவையாயிருந்தது. இளமை தேவையாயிருந்தது.

''ஜ்யோ ஐ நீட் எ ட்ரிங்க். எ ஸ்டிஃப் ட்ரிங்க்.''

''ஜேகே! எங்கே போயிருந்தாய்?''

''ஜெயிலுக்கு.''

''ஹௌ எக்ஸைட்டிங்! ஜெயிலில் ஒரு தடவை...''

''ஷட் அப். எனக்கு நிறைய விஷயங்கள் புரியவில்லை. ஜ்யோ! நான் குளிக்க வேண்டும்!''

''நான் குளிப்பாட்டுகிறேன்...''

''ஜ்யோ! டைரக்டரியில் எல்லா

பரமேச்வரன்களையும் பார். அட்ரஸ்களை எடுத்துக் கொள். நாம் வெளியே போகப் போகிறோம்!''

''பரமேச்வரன்!''

ஒரு வடிகட்டின பாஸ்டர்ட். டாக்டர் பரமேச்வரன்! அவன் சொன்னதில் கொஞ்சம் நிஜம் இருந்தது - ''ஜ்யோ ஐ வாண்ட் டு டேக் எ சான்ஸ்.''

''காப்டன் நீங்கள் சொல்வது எனக்குப்புரியவே இல்லை..விஸ்கி?''

''இல்லை...இன்னும் இல்லை.''

''ஷெல் ஐ?''

''நோ! நான் குளிக்க வேண்டும். கூட வராதே. ஒரு டவல் கொடு போதும். ரொம்ப உஷ்ணமாக உணர்கிறேன்.''

''அதற்குக் குளித்தால் போதாது.''

''ஜ்யோ யூ ஆர் எ நிம்ஃபோ.''

''ஸ்பெல்லிங்?''

''உடம்பை மூடிக்கொள். ஸ்பெல்லிங் சொல்கிறேன். ஜ்யோ நீ படித்த புத்தகங்கள் தப்பு. நீ நினைக்கும் எண்ணங்கள் தப்பு. உன்மேல் எனக்கு ஒரு பொறுப்பு இருக்கிறதல்லவா. உன்னைஒரு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து... பட் பிஃபோர் தட் பரமேச்வரன்! டாக்டர் பரமேச்வரன், உன்னைத் தேடாமல் அடுத்த வேளைச் சாப்பாடு கிடையாது எனக்கு...டவல் எங்கே!''

உஷ்ணமான வென்னீர், எக்ஸ்போர்ட் ரக சந்தன சோப்,ஷாம்பூ. மறுபடி உஷ்ணமான வென்னீர். நீராவியில் கலந்த மணம். குளிக்கும் அறையின் அத்தனை சுத்தம்... உலகத்தில் எவ்வளவு சின்னச்சின்ன இன்பங்கள் இருக்கின்றன...

''ஜ்யோ நீ வருகிறாயா இல்லையா?''

''ஒன் மினிட் காப்டன். அந்த
பட்டன்.''

''நான் போடமாட்டேன்.
க்கு சாமர்த்தியமிருந்தால்
டுக் கொள். அனுவசி
இந்தக் கதையில்
சேர்க்கிறாய். அட்
கொண்டாயா?''

''எழுதிக்
டன். இப்போது

''விடியும் வ
றேன். அப்புற
நோட்டுக்கள்.
அவைகளை?''

''எனக்கு

''மற...ஜ்

ஜ்யோ எ
க்ரீம் நிறத்
க்ரீம் நிறத்
க்ரீம் நிறத்
கரீம் நிறத்

''ஹௌ டு ஐ லுக்?''

''டிஸ்டர்பிங். என்னிடமிருந்து மூன்றடி தள்ளி வா. டாக்ஸியில் நான் முன்ஸீட்டில் தான் உட்காரப் போகிறேன்.''

''உன் இஷ்டம். நாளைக்கு குமார் வருகிறான்''

''என் அதிர்ஷ்டம்.''

சர்தார்ஜி ஜ்யோவை ஒருவிதமாகப் பார்த்தான். தன் மீசையை ஒரு தடவை தள்ளிக் கொண்டு கொடியை மடக்கினான். ''எங்கே?'' என்றான்.

உள்ளே லேட்டைப் போடச் சொல்லி முதல் விலாசத்தைச் சொன்னாள். ''போ'' என்றேன்.

க்ரீன் பார்க்கின் அமைதியில் இருந்தது அந்த வீடு. தேடிப் பிடிப்பதற்கு நிறைய நேரமாகிறது. அந்த வீட்டின் கதவைத் தட்டியதும் ஒரு நேபாளி கதவைத் திறந்தான்.

''டாக்டர் பரமேச்வரன் இங்கேதானே இருக்கிறார்?''

''அவர் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார்.''

''எந்த ஆஸ்பத்திரி?''

''ஆல் இண்டியா இன்ஸ்டிட்யூட்.''

''எதற்கு?''

''அவருக்கு ட்யூட்டி.''

''அவருக்கு எத்தனை வயதிருக்கும்?''

அவன் என்னைச் சந்தேகத்துடன் பார்த்தான். ''ஏன்?'' என்றான்.

''சும்மாச் சொல்லு. எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் பரமேச்வரனைத் தேடுகிறோம். இந்த அட்ரஸ் கிடைத்தது. அவர் தானா என்று பார்க்க வேண்டும்.''

அவன் தயங்கினான். எதிரே ஒரு இளைஞரின் படம் மாட்டி இருந்தது.

''அது யார்?'' என்றேன்.

''அதுதான் டாக்டர் சாப்.''

''ஜ்யோ நட!'' என்றேன்.

''உங்கள் பெயர்?'' என்றான் நேபாள்.

''ஜே கே. என்னை அவருக்குத் தெரியாது. வா!''

அவன் தலையை ஆட்டிவிட்டு நேபாளியில் முனகிக் கொண்டே கதவைச் சாத்தினான்.

''காப்டன் இது ஒரு விரயமான தேடல்'' என்றாள் ஜ்யோ!

''நெவர் மைண்ட்.''

''எங்கே போகவேண்டும்?'' என்றான் சர்தார்ஜி. ''அடுத்த அட்ரஸ்'' என்றேன்!

அடுத்த அட்ரஸில் கிடைத்த டாக்டர் பரமேச்வரன் ஒரு நிழலான டாக்டர். ஜ்யோவை சந்தேகத்துடன் பார்த்து, ''உள்ளே வா. கவலைப்படாதே. நான் கவனித்துக் கொள்கிறேன். எல்லாம் சரிப்படுத்தி விடலாம்'' என்றார்.

சடுதியில் கழன்று கொண்டு, ''அவன் என்ன சொன்னான்?'' என்றாள் ஜ்யோ!

''தப்புக் காரியம் செய்துவிட்டுக் கலைக்க வந்திருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டான்!''

ஜ்யோ சிரித்தாள். ''ஐ விஷ்'' என்ற அவளை ஆரம்பத்தில் வெட்டினேன்.

மூன்றாவது டாக்டர் பரமேச்வரனின் விலாசத்தில் கதவைத் தட்டியதும் தானாகவே திறந்து கொண்டது.

தயக்கத்துடன் உள்ளே நுழைந்தோம். இடது பக்கத்து அறையில் வெளிச்சம் தெரிந்தது. ''டாக்டர் பரமேச்வரன்'' என்று கூப்பிட்டுக் கொண்டே அந்த அறையை நெருங்கினோம். அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தோம்.

ஜ்யோ அலறின அலறலில் நான் சுத்தமாக ஒரு போயிங் 747 டேக் ஆஃப் செய்தேன்.

-தொடரும்

பயந்தேன்

ஒரு படத்தின் வெளிப் புறக் காட்சிகளுக்காக ஊட்டிக்குப் போயிருந்தோம். ஊட்டியில் படப் பிடிப்பு முடிந்தவுடன் கள்ளிக் கோட்டைக்குப் புறப்பட வேண்டியிருந்தது. ஒரு நாள் மாலை ஆறரை மணிக்குக் காரில் புறப்பட்டோம்.

இரவு நேரத்தில் காரில் போவது ஆபத்து என்று சொன்னார்கள். எப்படியும் இரவு பத்து பத்தரைக்குள் கள்ளிக்கோட்டையை அடைந்துவிடலாம் என்ற தைரியத்தில் புறப்பட்டோம். [illegible]ாரம் போயிருப்போம். வழி[illegible] யானைகள் வரும் என்று [illegible]தார்கள். ஆபத்து [illegible] என்றும் எச்சரித்[illegible] எனக்கு உள்ளூறப் [illegible]

[illegible]தில் யானை ஏதா[illegible]ாண்டிருக்குமோ [illegible]ாவு மணி எட்[illegible]விட்டது.

[illegible]ான் வீலென்று [illegible]னையறியாமல்.

[illegible]ய ஒட்டி ஒரு [illegible]கொண்டிருந்[illegible]ானையைப் போல [illegible]குகள் பெரி[illegible]ானை. காரை

டிரைவர் நிறுத்தி விட்டார். யானையைத் தாண்டிப் போக முடியுமா? திரும்பிப் போகலாமென்றால் குறுகலான வழி. காரோ அகலமான பென்ஸ் கார்.

ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது.

யானையும் நகரவில்லை.

காரும் நகரவில்லை.

ஒன்று இரண்டு ஐந்து பத்து நிமிடங்கள் சென்றன.

டிரைவர் காரை விட்டு இறங்கினார். 'இறங்காதே!' என்று நான் சொன்னேன்.

நேராக அவர் அந்த யானையிடம் சென்றார். நான் கண்களை மூடிக் கொண்டேன்.

டிரைவர் திரும்பி வந்தார்.

''ஏதோ பரிகாரத்துக்காக இந்தப் பகுதியில் வாழும் மலைவாசிகள் கிளைகளாலும், பழைய துணிகளாலும் செய்து வைத்த பொம்மை யானை அது!'' என்றார் அவர்.

காட்டு வழியில் இத்தனை பெரிய பொம்மை யானையா?

கே. ஆர். விஜயா கூறக் கேட்டவர்:

தஞ்சை குஞ்சிதபாதம்.

What is the middle of you?

பலர் வயிறு, மார்பு என்பார்கள்.

விடை: O

111111111

மேலே உள்ள ஒன்பது கோடுகளைப் பத்தாக மாற்றவேண்டும். வேறு ஒரு கோட்டைப் போடக் கூடாது. முடியுமா?

விடை: TEN

TEN என்பதில் உள்ள கோடுகளை எண்ணிப் பாருங்கள்.

ஜேகே தன் விருப்பத்திற்கு எதிராகப் பிரயாணம் செய்யும் ஆறும் அத்தியாயம்.

மூன்றாவது

சுஜாதா

COMICS & DIDI TIMES

டாக்டர் பரமேச்வரன் அங்கே தரையில் என்னவோ மாதிரிக் கிடந்தார்.

''ஜ்யோ! ஏன் கத்தினாய்? அந்த மனுஷன் தூங்கிக் கொண்டிருக்கலாம்..'' என்றேன்.

''ஐ திங்க் ஹி இஸ் டெட்!'' என்றாள் ஜ்யோ! ''ஜேகே, வா போய் விடலாம். நமக்கு வம்பு வேண்டாம். எதையும் தொட வேண்டாம்.''

''டோன்ட் பி ஸில்லி''—கீழே கிடந்த டாக்டர் பரமே. நான் தேடினவர்தான். அவர் கிடந்த விதம் தான் சரியாக இல்லை. தூங்குகிற மாதிரியும் இல்லை. குடித்திருந்த மாதிரியும் இல்லை. கைகால் எல்லாம் காரே மூரே என்று தினவாழ்க்கையில் நாம் முயற்சி செய்யவே முடியாத ஒரு போஸில் இருந்தன.

நான் அருகே சென்றேன்.

''ஜேகே வேண்டாம். நாம் ஓடி விடலாம்'' என்றாள்.

நான் அவளைக் கவனிக்காமல் அவரைத் தொட்டுத்திருப்பினேன். பனியனில் இருந்தார். தலை அண்ணாந்திருந்தது. முக்கு நுனி லேசாக அசைகிறதா? தெரியவில்லையே! மூச்சு இருக்கிறதா என்ன!

''டாக்டர்'' என்று லேசாக உசுப்பினேன்.

குபீர் என்று தன்னை அவிழ்த்துக் கொண்டு எழுந்தார். ஜ்யோ மறுபடி ஒரு ஸுப்பர்ஸானிக் அலறல் நிகழ்த்தினாள்.

''வாட் ஹாப்பன்ட்?'' என்றார் டாக்டர். அவர் நேராகி விட்டார். என்னைப் பார்த்தார். ''ஓ காப்டன் ஜேகே! இருங்கள். ஷர்ட் போட்டுக் கொண்டு வந்துவிடுகிறேன். யோகாசனம் செய்து கொண்டிருந்தேன். மயூராசனம். அந்தப் பெண் யார்? ஏன் அலறினாள்?''

''யோகாசனமா! உடம்பை யாரோ முடிச்சுப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று எண்ணினேன்! டாக்டர்! நான் உங்களுடன் யோகாசனம் பேச வரவில்லை. எனக்கு எத்தனையோ கேள்விகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் நீங்கள்.''

''முதன் முதலில், காப்டன் ஜேகே, உட்கார், பாப்பா! எத்தனாவது படிக்கிறாய்?'' என்றார், ஜ்யோவைப் பார்த்து.

''இவளா பாப்பா? சரியாகப் பார்த்துப் பேசும்!'' என்றேன்.

''என் கண்ணாடி அங்கே இருக்கிறது. அதை எடுத்துத் தருகிறீர்களா?''

''ஜ்யோ'' என்றேன்.

கண்ணாடி அணிந்து கொண்டு ஜ்யோவை மேலும் கீழுமாகப் பார்த்தார். ஜ்யோ தன் நகத்தை ஆராய்ந்து கொண்டு நின்றாள்.

''என் கனின் ஜ்யோத்ஸ்னா.''

''ஷி இஸ் ப்யூட்டிஃபுல்'' என்றார். ''இன்னும் ஒரு வருஷம் இரண்டு வருஷங்களில் பெருத்து விடுவாள். நான் ஒரு ஆசனம் சொல்லித் தருகிறேன், செய்கிறாயா? மார்பு நன்றாக..''

''டாக்டர்! நான் பேச வந்தது ஜ்யோவின் மார்பைப் பற்றி அல்ல. நீங்கள் என்னிடம் கொடுத்த பணம், உங்களுக்காக நான் கொண்டு வந்த அந்தக் கருவிகள்—நடந்தது தெரியுமா உங்களுக்கு...?''

''காப்டன் ஜேகே! உங்களுக்கு நான் வந்தனம் சொல்லவேண்டும். ஆராய்ச்சி மிக அற்புதமாக முடிந்தது. அந்த ஸிண்டிலேஷன் கௌண்ட்டர்...''

'ஹஹ் ஹஹ்' என்று சிரித்தேன். ''பரமேச்! இந்த வேலை வேண்டாம். கமான்! அவுட் வித் இட்.''

''என்ன?''

''ஆராய்ச்சியா? ஆராய்ச்சி எதில்? ஒப்பியம் கடத்துவதிலா? நூறு ரூபாய் நோட்டுக்கள் அச்சடிப்பதிலா? எனக்கு என்ன குடுமியா?''

''டாக்டர் அது என்ன ஆசனம் சொன்னீர்கள்?''

''ஷட் அப் ஜ்யோ!''

''ஜேகே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''இன்று மாலை நான் அரெஸ்ட் ஆனேன். ஒப்பியம் கடத்தினதற்காக, போலி நூறு ரூபாய் நோட்டுக்களை உபயோகப் படுத்தியதற்காக.''

''நீங்கள் விடுதலையாகி விட்டீர்கள் இல்லையா?''

''ஆம்.''

''நீங்கள் இப்போது சுதந்திர மானவர்தான்.''

''ஆம்.''

''அவ்வளவுதானே!''

''டாக்டர்! என்னிடம் அந்தப் போலி நோட்டுக்கள் பாக்கி இருக்கின்றன! தெரியுமா?''

''அவைகளைக் கொண்டு வாருங்கள்! மாற்றிக் கொடுக்கிறேன்.''

''டாக்டர்; நீ டாக்டர் தானே!''

''ஆம்!''

''என்ன இதெல்லாம்? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?''

''பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மாதிரி கேள்வி கேட்கக் கூடாது. கேள்வி கேட்பது கெட்ட பழக்கம்...காப்டன்! அந்த நூறு ரூபாய் நோட்டுக்களில் இரண்டோ மூன்றோ தான் போலி. பாக்கி எல்லாம் நிஜம். இந்தத் தவறு இனி நிகழாது.''

''இனி என்றால்?''

''இனிமேல் நீங்கள் எங்களுக்குச் செய்யப் போகும் காரியங்களுக்கு.''

''நீங்கள் யார்?''

''அப்புறம் சொல்கிறேன்.''

''டேய் டாக்ட். விளையாடாதே! எனக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது! சொல்லித் தான் ஆக வேண்டும். என்ன இதெல்லாம்? அரெஸ்ட் செய்கிறார்கள். கை சொடுக்கும் நேரத்தில் விடுதலை செய்கிறார்கள்!''

''காப்டன் என் சட்டையை விடுகிறீர்களா?''

''விட்டேன்.''

''காப்டன் உங்களுக்கு நிறையப் பணம் செய்ய ஆசையா?''

''அச்சடித்தா?''

''இல்லை. ரிஸர்வ் பாங்க் பணம். உண்மையான பணம். அவள் இளமையைப் போல உண்மையானது. ஸாவிட் காஷ்!''

''எனக்கு வேண்டியது பணம் இல்லை. பதில்கள்.''

''கிடைக்காது!''

''என்ன?''

''நீங்கள்கேட்கும்கேள்விகளுக்குப் பதில்கள் கிடைக்காது. உங்களுக்கு உங்கள் ஆரோக்கியத்தில் நம்பிக்கையிருந்தால்,கவலை இருந்தால் கேள்வி கேட்கக் கூடாது. சொல்கிற சில சிம்பிளான காரியங்களைச் செய்ய வேண்டும். செய்தால் பலன் தரும். தங்கம் சொரியும்.''

''என்னை முட்டாளாக்கியதை நான் மறக்க முடியாது. பரமேச்வரன், நான் வருகிறேன்! ஜ்யோ!'' என்றேன்.

''டாக்டர் அந்த ஆசனம்....''

''ஆசனம் நான் கற்றுத் தருகிறேன்; முன்னூறு விதங்களில். வா!''

எர்ணாகுளம்

குடும்பத் திட்ட விழாவில் கடந்த இருபத்தைந்து நாட்களில் சுமார் நாற்பத்து ஐந்து ஆயிரம் ஆண்கள் கருத்தடை அறுவை செய்து கொண்டார்கள். இது உலக ரிகார்ட். ஒரே நாளில் 2750 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. சுமார் நூறு டாக்டர்கள் இங்கு பணியாற்றுகிறார்கள்.

புதுடில்லி

தினந்தோறும் சுமார் ஆயிரம் தடவைகள் ரயில் வண்டிகளில் அபாயச் சங்கிலி இழுக்கப்படுகிறது. 1970-ம் ஆண்டில் வட கிழக்கு ரயில்வேயில் 1,05,127 தடவைகளும், தென் பகுதி ரயில்வேயில் 3853 தடவைகளும் இழுக்கப்பட்டதாம். வடக்கு இழுக்கிறது, தெற்கு தயங்குகிறது!

''இருங்கள். எதற்காக இப்படி பாப்கார்ன்மாதிரி வெடிக்கிறீர்கள்? என்ன நிகழ்ந்து விட்டது? சற்று சிரமம்; அவ்வளவுதானே. ஒரு ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டீர்கள். திருப்பிக் கொண்டு விடப்பட்டீர்கள். அவ்வளவுதானே!''

''என்னை ஏன் விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றெல்லாம் ஏமாற்றினீர்கள்?''

''மறுபடி கேள்வி.''

''நான் உன்னைக் கவனிக்கிற விதத்தில் கவனிக்கிறேன். வா ஜ்யோ!''

''மறுபடி சந்திக்கலாம்'' என்றார். ''மிஸ்! ஆர் யூ ஷ்யூர்? அந்த ஆசனத்தைக் கற்றுக் கொள்ள விருப்பமில்லையா? காப்டன் போகட்டுமே!''

''ஜ்யோ!'' என்றேன்.

நான் கிளம்ப அவள் தயக்கத்துடன் என் முன் சென்றாள். பின்னால் ஒரு தடவை டாக்டரைத் திரும்பிப் பார்த்தாள். ''டாட்டா'' என்று என் முதுகில் கேட்டது. எனக்கு மிகவும் குறையாக உணர்ந்தேன். தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொள்ளவில்லை...

''உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். ஹிப் பாத் எடுத்துக் கொண்டால் நல்லது...'' என்றார் டாக்டர்.

வெளியே டாக்ஸி காத்துக் கொண்டிருந்தது. ''லெடஸ் கோ ஹோம்'' என்றேன்.

''ஜேகே எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

''எனக்குக் கூடத்தான். தப்பாக உன் அருகில் உட்கார்ந்து கொண்டு விட்டேன்.''

அருகில் உராய்ந்தாள். ''ஜேகே! ஹிப் பாத் என்றால் என்ன?'' என்றாள்.

''காட்டுகிறேன்'' என்றேன்.

நகலாஷ் காலனியில் அவளை விட்டுவிட்டு அவசரமாக விடை பெற்றுக் கொண்டேன். அவள் விடை தர மறுத்தாள். சர்தார்ஜி சலித்துக் கொண்டான்.

''நீ போ!'' என்றாள், அவனிடம் பதினைந்து ரூபாயைக் கொடுத்து விட்டு. டாக்ஸி விலகியது.

நான் வாசலில் நின்றேன். மணி இரவு 11-30 ஆகி இருந்தது. ஜ்யோ கதவைத் திறந்தாள். சென்றோம். நான் நாற்காலியில் பாய்ந்தேன்.

''அங்கே உட்காராதே'' என்றாள். நான் எழுந்திருக்கவில்லை.

''ஜேகே! குமார் வரப் போகிறான்'' என்றாள்.

''ஸோ?''

''நேரம் அதிகமில்லை.''

''ஸோ?''

''முட்டாள், முட்டாள்! முட்டாள்! பாசாங்கு செய்கிறாயா?''

''ஜ்யோ! நான் யார்? ஒரு உபரி பைலட். என்னைச் சக்கையாக ஏமாற்றுகிறார்கள். என் நண்பர்கள் எல்லாம் போயிங்கில் போகிறார்கள். எனக்கு எவ்வித கௌரவமும் சௌக்கியமும் இல்லை. மருந்து அடிக்கிறேன். அந்தக் கிழவன் கொடுத்த போலி ரூபாய்க்குக் குற்றங்கள் செய்கிறேன். என் பொறுப்பில் இருக்கும் பெண்ணிடம்... பெண்ணிடம் பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்கிறேன். நீ என் குழந்தை மாதிரி.உனக்கு இருக்கும் இளமை ஒரு விதமான சொத்து. உன் கன்னிமை ஒரு சொத்து. அதை இந்த மாதிரி நீ தயாராக இழப்பதில் ஆர்வம் காட்டுவதில் உன்மேல் எனக்கு மோகம் போய் விடும் தெரியுமா! இவ்வளவு நேர்த்தாக்குதல் செய்யக் கூடாது. பிகு செய்து கொள்ள வேண்டும். தொட்டால் சிணுங்க வேண்டும்.கைகளை

விலக்க வேண்டும். நகத்தால் கீற வேண்டும். கதவுகளைத் திறக்கக் கூடாது. உடைகளை எளிதில் களையக் கூடாது. நீ அசட்டுப் பெண். ஏன் இப்படி இன்ஸ்டன்ட் காஃபி மாதிரி தயாராகிறாய்?''

''ஜேகே நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளட்டுமா...''

''எப்பொழுது?''

''இப்பொழுது! ஏதாவது ஆபீஸ் திறந்திருக்காதா? யாரையாவது எழுப்பலாமே. லைடஸ் மாரி!''

சிரித்தேன். ''ஜ்யோ! நீ என்ன விரும்புகிறாய்?''

''ஃப்ரீ லவ். வார்த்தைகள் இல்லாமல்.''

''நீ பிகு செய்து கொள்ளாவிட்டால் நான் பிடிவாதம் பிடிக்கப் போகிறேன். ஜ்யோ நாம் செய்வது குற்றம். நான் என் அறைக்குப் போகிறேன்.''

''என்னைப் பார் ஜேகே!''

அவளைப் பார்த்தேன். ஜ்யோவின் கண்கள் கேட்டன. அவள் அங்கே இருந்த உண்மைப் பரிமாணம், வாசனை, இயக்கம், அவள் மூச்சு எல்லாம் கேட்டன.

''நோ!'' என்று எழுந்தேன். ''ஐ டோன்ட் ஃபீல் லைக் இட்.''

''ஏன்?'' என்று கேட்டுவிட்டு மற்றொரு கேள்வி கேட்டாள்.

''அப்படி இல்லை'' என்றேன். ''என்னை மன்னித்துக்கொள். நான் ஒன்றும் காந்தி இல்லை! ஆனால் இன்றைக்கு இந்தச் சூழ்நிலையில் இது தப்பு என்று படுகிறது. மற்றொரு நாள் மற்றொரு சூழ்நிலையில் மாறலாம்! குட்நைட்'' என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து அவளைக் கவனிக்காமல் கிளம்பி விட்டேன்.

வெளியே வந்த எனக்குத் திடீரென்று பசி தோன்றியது. இப்பொழுது கனாட் ப்ளேஸில்தான் கடைகள் திறந்திருக்கும். அங்கே போய்க் கூட்டத்தில் சங்கீதத்தின் நடுவில் கரண்டி முள் குத்தி அறுத்துச் சாப்பிட விருப்பமில்லை. எனக்கு டாக்ஸி இப்போது கிடைக்காது. கார் இல்லை.

மெதுவாக நடந்தேன். எல்லா வீடுகளும் தூங்கிக் கொண்டிருந்தன. திடீரென்று பகல் வெளிச்சமாக்கி எல்லா வீடுகளின் சுவர்களை மட்டும் [illegible] மறைய [illegible] ஆச்சரியங்கள் தெரியும் என்று யோசித்துப் பார்த்தேன். ஒரு பெண் படுக்கையில் விம்மிக் கொண்டிருப்பாளா? கரங்கள் விளையாடுமா? உடல்கள் பின்னுமா.... உடல்கள்! உடல்கள்!

ஜ்யோ சற்றுமுன் என்முன் நின்றது எனக்கு இடுப்புப் பிரதேசத்தில் ஞாபகம் வந்தது. ஜ்யோவிடம் இருந்த வேங்கைப் புலியின் 'ஸ்லீக்' அமைப்பு என்னுள் பாய்ந்தது.

என்ன முட்டாள் நான்! நின்றேன். திரும்பினேன். மறுபடி அவளை நோக்கி நடக்க முற்பட்டேன்.

அப்போது என் அருகே ஒரு கார் வந்து நின்றது. அதில் யார் உட்கார்ந்திருந்தார்கள் என்பது இருளில் தெரியவில்லை.

இருட்டிலிருந்து ''ஜேகே'' என்று குரல் கேட்டது. ''யெஸ்'' என்றேன், மிகுந்த ஆச்சரியத்துடன்.

''காருக்குள்ளே வாருங்கள்.''

''எதற்கு?''

''கேள்விகள் வேண்டாம். உள்ளே வா'' என்று ஒரு கட்டைக் குரல் கேட்டது. டிரைவரின் முகம் தெரிந்தது. எனக்குப் பரிச்சயமில்லாத முகம்

''நீங்கள் எல்லாம் யார்?''

''உன் நண்பர்கள். ஏறு காரில்!''

''முடியாது'' என்றேன். ஓடத் தயாராக இருந்தேன்.

"காலம் கடந்திடும் முன்னே"

(Before the time passes)

சம்பத், மோகன் இவர்கள் இருவரும் சகோதரர்கள். ஆட்டையார்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அந்தக் கிராமத்தில் பாடசாலை கிடையாது. இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு பட்டணத்தில் இருவரும் படித்து வந்தனர்.

ஒருநாள் மாலை பாடாசலை முடிந்து இருவரும் தங்கள் கிராமத்திற்கு நடந்து வந்துகொண்டு இருந்தனர். வரும் வழியில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒருபெரிய கட்டிடத்தைப் பார்த்தனர். மூங்கிலால் சாரம் போட்டிருப்பதைப் பார்த்த சிறுவர்களின் உள்ளத்தில் 'அதில்' ஏறி விளையாட வேண்டும் என்ற உற்சாகம் எழுந்தது.

அந்தக் கட்டிடத்தின் அருகில் தங்கள் பைக்கட்டுகளை வைத்துவிட்டு மூங்கில் கணையின் மேல் ஏறி, 'தாவி தாவி' விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வாறு விளையாடும்போது மோகனுக்கு கை வழுக்கி விட்டது. எதிர்பாராத விதமாக தொங்கிக் கொண்டிருந்த அண்ணனின் காலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தான்.

''ஐயோ....! அம்மா!!....'' என்று அபயக் கூக்குரலிட்டனர். மாலை நேரமானதால், கட்டிடத்தில் வேலை செய்தவர்கள் அவரவர் வீட்டுற்குப் போய்விட்டனர். அவர்களைக் காப்பாற்ற ஒருவருமில்லை. இந்த சிறுவர்களின் உள்ளங்களிலே பெரிய போராட்டம் எழுந்தது. என்ன செய்வோம் என்று புரியாத நிலையில் தொங்கிக்கொண்டு மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தோ! பரிதாப நிலைமை!

''தம்பி! நாம் இன்னும் சிறிது நேரத்தில் மரித்து விடுவோம். நமக்கோ அப்பா கிடையாது. நம் அம்மாவோ ஏழை. நம் இருவரால்தான் அம்மா சந்தோஷத்தோடு ஜீவிக்கின்றாள். ஆ...ஐயோ....! கை வலிக்கிறது. கைப்பிடியை விட்டு விடட்டுமா?''

''அண்ணா! கைப்பிடியை விட்டுவிடாதே! உன் கைப்பிடியை விட்டுவிட்டால் நாம் இருவரும் ஒரே சமயத்தில் மரித்துப் போவோம். நம்முடைய பிணத்தைக் கண்டால் அம்மாவும் உடனே வாழ்க்கையை வெறுத்து இந்த இடத்திலே தற்கொலை செய்து கொள்வார்கள்.''

தன்னுடைய ஜீவன் பெரியதா?
அண்ணனுடைய ஜீவன் பெரியதா?
அம்மாவின் ஜீவன் பெரியதா?

என்ற மூன்று கேள்விகளை மோகன் தன் மனதில் எழுப்பி சிந்தித்தவாறே தொங்கிக்கொண்டிருக்கிறான்! 'அண்ணனுக்காகவும், அம்மாவுக்காகவும் நான் மரித்துப் போனால் பரவாயில்லை. உயிரோடிருக்கிற அண்ணனைப் பார்த்தவாறு அம்மாவின் மனம் ஆறுதலடையும்.

''அண்ணா! அம்மாவைக் காப்பாற்றிக் கொள். நீ உன் கைப் பிடியை விட்டு விடாதே! எனக்குக் கை வலிக்கிறது'' என்று கூறி முடிக்கவே கீழே விழுந்தான் அல்லவாதான்.

மோகன் தன் குடும்பத்திற்காகவே தன் ஜீவனை விட்டான். ஆனால் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ இந்த பூலோகத்திலுள்ள மானிடர் யாவரையும் இரட்சிக்கவே, மீட்கவே, சிலுவைப்பாடுகளை ஏற்றுக்கொண்டார். அக்கிரமங்களின் நிமித்தமும் வசை மொழிகளால் வையப்பட்டார், குட்டப்பட்டார், வாரினால் அடிக்கப்பட்டார், ஈட்டியால் விலாவில் குத்தப்பட்டார், முட் கிரீடத்தால் சூட்டப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.

''இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்புண்டாகாது'' என்பதற்கிணங்க பழுதற்ற ஆடாக தம்மை ஒப்புக் கொடுத்தார். பரலோக மேன்மையைக் கலைந்து பாவத்தைப் பரிகரிக்கவும், சாத்தானின் தலையை நசுக்கவும் கல்வாரிச் சிலுவையில் அவர் திரு இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். சிலுவைப் பாடுகளினால் நம்மை மீட்டு நமக்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுத்த நம் அருமை இரட்சகர் இயேசு திருமறையின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

நேற்றும் இன்றும் மாறாத ஜீவனுள்ள தேவனின் திரு இரத்தத்தால் நீ கழுவப்பட்டு இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வாயா? உன் பாவத்தை அறிக்கையிட்டு இலவச இரட்சிப்பைப் பெற்றுக்கொள். காலத்தை நழுவ விடாதே! காலம் கடந்திடும் முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள். மரணம் உன்னைச் சந்திக்கும் முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள். உன் வயதாகும் முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள். இருள் சூழும் காலம் வரும் முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள். திறவுண்ட வாசல் அடைபடு முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள். அகால நேரம் அண்டு முன்னே நீ இரட்சிப்பைப் பெற்றுக்கொள்! இன்றே இரட்சண்ய நாள்!

இந்த இரட்சிப்பை இன்னும் தெளிவாக விளக்கமாகத் தெரிய வேண்டுமானால், கீழ்க் காணும் முகவரிக்கு எழுதுங்கள்: இலவசமாகப் பிரதிகள் அனுப்புவோம்.

"கைப்பிரதி பிரிவு"
இம்மானுவேல் மெதடிஸ்ட் ஆலயம்,
13, ஜெரமயா ரோடு, வேப்பேரி,
சென்னை-7.

தொலைபேசி எண்: 34939
(Message inserted by Emmanuel Methodist Church, Madras-7).

''ட்ரிட்மெண்ட் கொடு'' என்றது இருட்டு. காரின் முன் கதவுகள் தோகை விரித்தன. இரண்டு பேர் சிக்கனமாக என்னிடம் வந்தார்கள். என் புஜங்களைப் பிடித்து இழுத்தார்கள். நான் திமிர, மற்றொருவன் - அவனும் முன் சீட்டிலிருந்து வந்தவன் - சேர்ந்து கொண்டு என்னைக் காருக்குள் திணித்தார்கள். என் உடல் முழுவதும், என் முகத்தில், என் மார்பில் கைகள், முரட்டுக் கைகள்.

''ஜேகே ஏதாவது சப்தம் போட்டுத் திணறும் நோக்கம் இருந்தால் சொல்! உடனே இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்துக்கு நினைவு திரும்பாத வகையில் உன்னைச் செய்ய முடியும்.''

''வேண்டாம்'' என்றேன்.

''நல்ல பிள்ளையாக இரு, உனக்கு ஒன்றும் நிகழாது. பயப்படாதே.''

மிக வேகமாகக் கார் சென்றது. அதன் கண்ணாடிகளில் கறுப்பு ஏறியிருக்க வேண்டும், வெளியே தெரு விளக்குகள் மிகக் கருமஞ்சளாகத் தெரிந்தன. ரிங் ரோடில் போவது போலிருந்தது. அதிகம் டிராஃபிக் இல்லாத சில ரோடுகள் கடந்து மறுபடி சாணக்கியபுரிப் பக்கம் செல்வது போலிருந்தது. நான் சாய்ந்து கொண்டேன். திடீரென்று என் பயங்கள் விலகிவிட்டன. என்ன தான் ஆகிறது பார்த்து விடலாமே! என் உயிருக்கு ஏதும் ஆபத்தில்லை. சில ஆசாமிகளுக்கு நான் தேவையாக இருக்கிறேன் என்று தெரிகிறது. எதற்கு என்பது தெரியவில்லை. இருந்தும் அது தெரியாத வரை அந்த ஆர்வம் தரும் ரத்தத் துடிப்பில், எதிர்பார்ப்பில் ஒரு ஆனந்தம் கூட ஏற்பட்டு விட்டது. எது வேண்டுமானாலும் நடக்கட்டும். நான் செலுத்தப்படுகிறேன். இதெல்லாம் நீட்டாக அமைக்கப்பட்ட கட்டட வேலைபோல் தெரிகிறது. எல்லாம் நேரம் பார்த்து அளந்து செய்வது போல் தெரிகிறது. முதலிலிருந்து எல்லாமே! பார்த்து விடலாம். முடிவு வரை பார்த்து விடலாம்.

கார் மெலிதாகத் தெரிந்த காம்பவுண்டுக்குள் நுழைந்து ஒரு பெரிய வீட்டைச் சுற்றி வந்து அதன் பின்புறத்தில் நிற்பது தெரிந்தது. நின்றதும் கதவு திறந்ததும் என்னைச்சிறிய எட்டுப்படிகளை ஏறச் சொன்னார்கள். ஒரு கண்ணாடிக் கதவை சாவி போட்டுத் திறந்தார்கள். திறந்து மெலிய இருட்டில் உட்சென்று ஒரு திரையை விலக்கி என்னை அழைத்துச் சென்றார்கள். மாடிப்படி ஏற வைத்துச் செங்கல் சிவப்பில் கம்பளம் அமைத்த ஒரு ஹாலின் நடுவே நிறுத்தி, அவர்கள் விலகிக் கொண்டார்கள். நான் சுற்று முற்றும் பார்த்தேன். நின்றேன்.

''வெல்கம் காப்டன் ஜேகே!''

சரேல் என்று திரும்பினேன்.

—தொடரும்

ஜேகே

சுஜாதா

ஜேகே பெரும்பாலும் ஒருவருடன் இரவில் பேசிக் கொண்டிருக்கும் ஏழாம் அத்தியாயம்.



திரும்பிப் பார்த்ததும் தெரிந்தவரை நான் முன்பே சந்தித்திருக்கிறேன். போலீஸ் நிலையத்தில் கப்பல் காரில் வந்திறங்கி என்னைச் சடுதியில் விடுவித்துக் கழன்று கொண்டவர்.

''ஹலோ காப்டன்...'' என்றார்.

''ஹலோ! என்னை அந்த மாதிரி பலாத்காரமாய் அழைத்துக் கொண்டு வந்ததை நான் மிகவும் ஆட்சேபிக்கிறேன்...உங்களை நான் சந்தித்திருக்கிறேன்'' என்றேன்.

அந்த அகலமான ஹாலில் தேசத் தலைவர்கள் யாவரும் தொங்கினார்கள், படமாக. விட்டம் சற்று உயரமாகவே இருந்தது. மின் விசிறிகள் இல்லை. மிக சுத்தமாக விலைஉயர்ந்த எளிமையாக இருந்தது. ஒரே ஒரு புலிமட்டும் சுவரிலிருந்து கழுத்து நீண்டு ஸர்க்கா 1948-ல் உறைய வைக்கப்பட்ட உறுமலை இன்னும் காட்டிக் கொண்டிருந்தது. பக்கத்தில் டாக்டர் பரமேச்வரனின் தலையை வைத்தால் எப்படி இருக்கும் என்று யோசித்தேன். அதற்கு, பரமேச்வரன் உறுமினால் எவ்விதம் இருக்கும் என்று யோசிக்க வேண்டியிருந்தது.

''உட்காருங்கள்'' என்றார் அவர்.

நான் உட்கார இடம் தேடினேன். சுவரின் அருகில் முதுகு பதியவைத்து எட்டு நாற்காலிகள் வரிசையாக இருக்க, அதில் ஒன்றில் உட்கார்ந்தேன். முழங்காலில் [illegible]ப் பதிய வைத்துக் கொண்[illegible]வர் ஹாலின் மத்தியில் [illegible]ருடையநிழல் நீண்டு [illegible] விளக்குகளினால் குழப்பமாக விசித்திரமாக அவரைத் தொடர்ந்தது.

ஒரு ஆள் உள்ளே வந்து அவரிடம் ஒரு ஃபைலைக் கொடுத்தான். அவர் அதைப் புரட்டினார். ஒரு பக்கத்தில் நின்றார். கண்ணாடி மாற்றிக் கொண்டார். படித்தார்.

'ஜேகே. 33. ஏ லைசென்ஸ், மெட்ராஸ் ஃபிஷிங் கிளப், அப்புறம் எம்.பி. எஃப்.ஸி., டில்லி ஃபிஷிங்கிளப். 26வது வயதில் பி. மணமாகவில்லை. அனுபவம் ஏழு வருஷம். மூன்று விபத்துக்கள். ஒன்று இரவில் நடந்த விபத்து. கலிங்காவில் தாற்காலிக பைலட். அஸ்ஸாமில் ஒரு விபத்து. உயிர்ச்சேதமில்லாமல் தப்பியதற்குக் கம்பெனியிலிருந்து சர்டிபிகேட். பெரும்பாலும் காண்ட்ராக்ட் வேலை. அக்ரிகல்ச்சர்பைலட். பீச் க்ராஃப்ட், சிப்பங்க், எச்.டி.2. பொனான்ஸா, ஸென்னா, எக்ஸ்பிடைட்டர், டக்கோட்டா எல்லாவற்றிலும் எண்டார்ஸ்மெண்ட், மொத்தம் பறந்த நேரம்....'

என் பறக்கும் வாழ்வின் ஜாதகம் முழுவதும் வாசித்தார். நான் கேட்டுக் [illegible]ண்டே இருந்தேன். என் கைக்[illegible] யாரத்தைப் பார்த்தேன். மணி [illegible]வு பன்னிரண்டை நெருங்கிக் [illegible]ண்டிருந்தது. படக் என்று ஃபைலை மூடினார். என்னைப் பார்த்துச் சிரித்தார். ''சொல்லுங்கள்'' என்றார்.

''நீங்கள்தான் சொல்லவேண்டும். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''

''ஜேகே, இன்று நீங்கள் கைது செய்யப்பட்ட குற்றத்திற்கு மூன்று

வருஷமாவது நிச்சயம் சிறைத் தண்டனை கிடைத்திருக்கும். உங்களுக்குத் தெரியுமா?''

''நான் அதில் அனுவசியமாக மாட்டிக்கொண்டேன். நான் அதில் கொஞ்சமும்சம்பந்தப்படவில்லை.''

''நீங்கள் விடுதலையானது எதற்கு என்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது. எல்லாம் ஏதோ தூக்கத்தில் நடப்பதுபோல் நடக்கிறது. யாரோ வந்தார்கள். கைது செய்தார்கள். எனக்கு அடியிலிருந்தே கதை புரியவில்லை. அப்புறம நீர் வந்தீர். விடுவித்தீர். அப்புறம் காரில் கோழிக்குஞ்சுபோலஎன்னைப் பொறுக்கிக்கொண்டு இங்குநிறுத்தி வைத்து என் சரித்திரத்தை இரவு பன்னிரண்டு மணிக்குப் படிக்கிறீர்கள். வாட் இஸ் ஆல் திஸ்?''

''உங்களை விடுவித்ததற்கு நீங்கள் எனக்கு நன்றி கூடச் சொல்லவில்லையே!''

''நன்றி! எதற்காக விடுவித்தீர்கள்?''

''எனக்கு நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்.''

''இந்த லைன் அடிக்கடி வருகிறது. இப்படித்தான் அந்தப் புரொபஸர் கேட்டார். காரியம் செய்தேன். என்னஆயிற்று? விலங்கு, போலி நோட்டு, கஞ்சா, என் பெட்ரூமெல்லாம் போலீஸ்காரர்கள்.''

''நான் உங்களைக் கேட்கப் போவது நம் தேசத்துக்காக.''

''அதேதான் அந்தக் கிழவரும் சொன்னார். வெளியே போகும் வழி எது?''

''அவசரப் படாதீர்கள், நீங்கள் முதலில் செய்தது கள்ளக்கடத்தல். இப்பொழுது செய்யப் போவது தேச சேவை.''

''டெல் மி அனதர். வெளியே போகும் வழி எது என்று கேட்டேனே. ஸார்! உங்கள் பெயர் என்ன?''

''என் பெயர் முக்கியமில்லை.''



COMICS PDF TIMES

''பஞ்சாபகேசன் என்று வைத்துக் கொள்ளட்டுமா?''

''நான் மதராஸி அல்லவே!''

''உங்களைப் பார்த்தால் என் [illegible] பஞ்சாபகேசனைப் போல [illegible] நீங்கள்யார்?

''அதுவும் முக்கியமில்லை.''

நான் சுற்று முற்றும் தேசத் தலைவர்கள் படத்தைப் பார்த்தேன். ''நீங்கள் சர்க்கார்தானே?''

''இருக்கலாம்.''

''போலீஸா?''

''இருக்கலாம்.''

''ஸிவில் ஏவியேஷனு? என் வான ஜாதகத்தைக் கடகடவென்று ஒப்பித்தீர்களே?''

''மேலே கேளுங்கள்.''

''உள்துறை மந்திரி சபையா?''

''இருக்கலாம்.''

''மந்திரியா?''

''இல்லை'' என்று சிரித்தார். ''மந்திரி யார் என்று கூடத் தெரியாதவரா நீர். பேப்பர் படிக்கிற வழக்கமில்லையா?''

''படிப்பேன். கிராஸ்வோர்ட்ஸ், மற்றும் ஸ்போர்ட்ஸ் மட்டும். நிறையமந்திரிகள் இருக்கிறார்களே, அவர்களில் சில்லறை மந்திரியாக இருக்கலாம் என எண்ணினேன். டில்லியில் ஒரு அரைச்செங்கல்லை எந்தத் திக்கில் எறிந்தாலும் ஒரு மந்திரியை அடிக்கலாம் என்று ஒரு ஜோக் உண்டு.ஸார்..ஸார், சிரிக்க மாட்டீர்களா? பரவாயில்லை. ஆனால் உங்களிடம் மந்திரி களை இருக்கிறது.''

''அப்படி என்று ஒரு களை இருக்கிறதா என்ன?''

''ஆம். வந்தால் போலீஸ்காரர்கள் விழுந்து சேவிக்கிறார்கள். இம்பாலா கார். கதர், தேசத் தலைவர்கள் படங்கள். அந்த ஃபைல். இளந்தொந்தி. பாலிஷ் உடம்பு... விஷயத்தைச் சொல்லுங்கள்.''

''ஜேகே, நீங்கள் வெளியே பார்ப்பது இதெல்லாம். உள்ளே நான் வேறு விதமானவன். நான் சோகமானவன். நான் யார் என்பதெல்லாம் முக்கியமில்லை. ஆனால் நான் உங்களைத் தப்பாக சட்ட விரோதமாக எதுவும் செய்யச் சொல்ல மாட்டேன். நான் உங்களை விடுவித்ததற்குக் காரணம் உங்களைப் போல ஒரு பைலட் ஒரு முக்கியமான காரியத்திற்கு எங்களுக்குத் தேவையாக இருக்கிறது. அந்தக் கூட்டம், உங்களைக் கடத்தலுக்கு உபயோகப் படுத்திய கூட்டம், ஒரு சுண்டைக்காய்க் கூட்டம். அவர்களை விட்டுப் பிடிக்கலாம். எப்போது வேண்டுமானாலும் பிடிக்கலாம். ஸ்மால் டைமர்ஸ். சிக்கன் ஃபீட். அவர்கள் எல்லோரையும் எங்களுக்குத் தெரியும். ஒரு டெலிபோன் பேச்சில், ஒருகைச் சொடக்கில் அத்தனை பேரையும் வளைத்து விடலாம். மூன்றரை லட்சம் ஒப்பியம் எங்களுக்கு நொறுக்குத் தீனி. கோடிக் கணக்கில் சுருட்டுபவர்கள், அரசாங்கத்தை ஏமாற்றுபவர்கள் இருக்கிறார்கள். வரி கட்டாதவர்கள். எல்லா ஸ்டாக் முழுவதையும் மடக்கிக் கறு[illegible]கள். எக்ஸ்சேஞ்ஜ் விதிகளில் சிறிய சிறிய தவறுகளில் பெரிய பெரிய லட்சங்கள் பண்ணுகிறவர்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் தருகிறவர்கள். அண்டர் இன்வாய்ஸ் பண்ணுகிறவர்கள் என்று எத்தனையோ ரகங்களில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் துரோகமெல்லாம் சிறிய துரோகங்கள். மற்றொரு துரோகம் இருக்கிறது பெரியது. மிகப் பெரியது.. ஜேகே! உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை உண்டா?''

''ஜனநாயகத்தைப் பற்றி நினைப்பதற்கு எனக்கு நேரமில்லை.''

''இந்த தேசம் ஒன்று என்று நினைக்கிறீர்களா? இந்த தேசம் ஐக்கியமாக நிலைக்கும் என்று நினைக்கிறீர்களா?''

நான் அவரை நிதானமாகப் பார்த்தேன். அவர் என் பதிலில் தான் இந்தியாவின் எதிர்காலமே தொங்குகிறது போல் ஆவலுடன் காத்திருந்தார். நான் கனைத்துக் கொண்டேன். சொன்னேன்.

''நம் தேசத்தை ஐக்கியப் படுத்துவது ஒன்றே ஒன்று; அது அயோக்கியத்தனம். அது தேசம் பூராவும் இருக்கிறது. இந்தியில், குஜராத்தியில், தமிழில், பெங்காலியில், மலையாளத்தில் எல்லாவற்றிலும் நடப்பது அயோக்கியத்தனம். என் நண்பன் ஒருவன் இருக்கிறான், பைலட். அவனுடன் பல இடங்களுக்குப் போயிருக்கிறேன், பல மொழிப் பிரதேசங்களுக்கு. ஏரோ

''தீப்பெட்டி வாங்கிய உடனே குச்சிகளை எண்ணிச் சரி பார்க்கிறாயே; எதற்கு?''

''அதிகமாக இருந்தால் திருப்பிக் கொடுப்பதற்கு!''



புருவினால் மட்டும்தான் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க முடியும்.

ட்ரோமில் போய் இறங்கியதும், அவர்களுள் தெரிந்த ஒரு ஆளைக் கூப்பிட்டு, ''உங்கள் பாஷையில் 'விளக்கை அணை', என்பதற்கு எப்படிச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொள்வான். தலை வாரிக் கொள்வான். கிளம்பி விடுவான். அவனுக்கு மொழித் தகராறு எப்பொழுதுமே இருந்ததில்லை. சில பித்தலாட்டங்களுக்கு மொழியே தேவையில்லை. தேசிய ஒருமைப்பாடு விபசாரத்தில்தான் இருக்கிறது. பம்பாய்க்குச் சென்று பாருங்கள். குஜராத்தியா, மராத்தியா, டமிலா, பெங்காலியா, எந்த மொழி வேண்டும் உங்களுக்கு? பஞ்சாப ஸிந்து குஜராத மராடா திராவிட உத்கல வங்கா!....'' என்றேன்.

''ஸ்லீப்பிங் ஜேகே!''

''பின் ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் காரில் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து கேட்டால் அப்படித்தான் சொல்வேன்...உங்கள் ஃபைலில் என்னைப் பற்றி எழுதி இருக்குமே! 'குடிப்பேன்' என்று. கிவ் மி எ ட்ரிங்க்.''

''ஆரஞ்ச் ஜூஸ் தருகிறேன்.''

''இரவு 12 மணிக்கா? ஆர் யூ க்ரேஸி?''

''ஸாரி, அதை விட ஸ்ட்ராங்காக என்னிடம் எதுவும் இல்லை.''

''கவனியுங்கள் இந்தக் கதையில் எல்லோரும் சுற்றி வளைத்துப் பேசுகிறார்கள். நான்கு வார்த்தைகளில் சொல்லுங்கள். என்ன வேண்டும் உங்களுக்கு. முடியும், முடியாது என்று சொல்லி விடுகிறேன்.''

''முடியாது என்று உங்களால் சொல்ல முடியாது.''

''ஏன்?''

''திரும்ப ஜெயிலுக்குப் போக விருப்பமா?''

''ஓஹோ, அப்படியா செய்தி? நான் மாட்டேன் என்றால் நாளைக் காலை மறுபடி அர்ர்ர்ரெஸ்டா!''

''ஆம்.''

''ஹாப்ஸன்ஸ் சாய்ஸ்.''

''ஆம்..''

''என்ன வேலை?''

''ஸென்னு விமானம் ஓட்டியிருக்கிறீர்கள் அல்லவா நீங்கள்?''

''ஓ எஸ். ஸென்னு! நல்ல விமானம். பூ கணக்கா ஒரு இஷ்டமுள்ள வளைந்து கொடுக்கும் பெண்போலப் பறக்கும். எனக்குப் பெண் பிறந்தால் ஸென்னு என்று பெயர் வைப்பேன்.''

''நாளைக் காலை ஒரு ஸென்னு விமானத்தை எடுத்துக் கொண்டு ஒரு இடத்திற்குச் சென்று ஒரு... ஒரு... ஆசாமியை டில்லிக்கு அழைத்துக்கொண்டு வர வேண்டும்.''

''அவ்வளவுதானு?''

''அவ்வளவுதான்.''

''இதில் ஏதும் சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லையே?''

''சிக்கல் இருக்கிறது. சொல்கிறேன்.''

''எந்த இடம்? எந்த ஆசாமி?''

''சொல்கிறேன்.''

''செய்ய முடியும் என்று நினைக்கிறேன். ரொம்ப சிம்பிளாகத்தான் என்னைப் பொறுத்தவரை படுகிறது.''

''மிக ரகசியமாகச் செய்யவேண்டும்.''

''அதைப் பற்றி ஏப்பம் கூடவிட மாட்டேன்.''

''நீங்கள் கிளம்புவது பற்றியோ, நீங்கள் திரும்ப வருவது பற்றியோ, ஒருவருக்கும் தெரியக் கூடாது.''

''தெரியாது.''

''உங்களுக்காக நாளை எல்லாம் தயாராக இருக்கும். நீங்கள் செல்ல வேண்டிய அந்த விமான நிலையத்தின் பெயர் பன்னுகர். தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும். நான் ஒரு தடவை இறங்கியிருக்கிறேன். கல்கத்தா அருகில் இருக்கிறது. ரன்வே மிக ரொம்ப மோசம்.''

''நடுவில் பெட்ரோலுக்காக நீங்கள் லக்னேவில் இறங்கிக் கொள்ளலாம்.''

''சரி.''

''மறுபடி திரும்பி வருகையில் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு நேராக இரவு டில்லியில் வந்து இறங்கும்படியாக அமைக்க வேண்டும்.''

''கம் கெய்ன். அந்த ?''

''பெண். சின்னப் பெண். அவளைத்தான் நீங்கள் அழைத்து வரவேண்டும்.''

''வயது?''

''இன்னும் இருபது ஆகவில்லை. காப்டன் ஜேகே, நீங்கள் மா ட்ஸே துங் படித்திருக்கிறீர்களா?''

''ராத்திரி பன்னிரண்டு மணிக்கு 'மாவ் திங்க்' பற்றிக் கேட்கவா என்னைக் கூப்பிட்டீர்கள்? ஏன் இப்படி அடிக்கடி ஸப்ஜெக்ட் மாறுகிறீர்கள்? முதலில் இருபது வயதுப் பெண். அப்புறம் சேர்மன் மாவ்! ஐ டோன்ட் ஸீ தி கனெக்ஷன்.''

அவர் சொன்னார்:

"Whenever there is struggle there is sacrifice and death is a common occurance. But we have the interests of the people and the sufferings of the great majority at heart and when we die for the people it is a worthy death."

'பக்கத்து வீட்டிலே என்ன சார் விசேஷம்?''

''காணமல் போன ஒரு பையன் ஒரு மாசம் கழிச்சுந் திரும்ப வந்திருக்கானும்! அதைத் தான் கொண்டாடுறுங்க!''

''இதற்குக் கூட விழா கொண்டாட வேணுமா, என்ன?''

''பின்னே? அவன் காணமல் போன வகையிலே விளம்பரத்துக்கு என்று ஒரு பைசா செலவு செய்யவில்லை அவன் அப்பா.''

''சரி..''

"அப்புறம் தேடிப்போக ஆள் அனுப்புகிற செலவு, போலீஸ் கம்ப்ளெயிண்ட் எழுதி வைக்க மாமூல் செலவு, ஜோதிடம் மாந்திரீகம் இந்த மாதிரி வகையறுக்களுக்குக் கால் காசு கை விட்டுப் போகல்லே...''

''இருக்கட்டுமே...''

''அவன் இப்படி ஓடிப் போகாமல் வீட்டிலேயே தங்கியிருந்தால் இந்த ஒரு மாசத்திலே கிட்டத்தட்ட 300 ருபாய் வரைக்கும் அவனுக்காகச் செலவாகி இருக்கும். அது மிச்சம் தானே?''

''ஓகோ!''

''அதைத்தான் இப்படித் தடபுடலா விழா மாதிரிக் கொண்டாடி செலவழிக்கிறுங்க! புரிஞ்சுதா?''

கலாசாமி

''சபாஷ் நன்றுகச் சொன்னீர்கள்!''

''சொன்னது நானில்லை, மா ட்ஸே துங்!''

''மாவ் அப்படிச் சொன்னுரா? குட் ஒல்ட் மாவ். நன்றுக நீந்கவாராம். ஆனுல், ஆனுல் மாவ் இங்கு எப்படி வருகிறுர் என்பதுதான் புரியவில்லை.''

''அந்தப் பெண் அபாயகரமானவள்.''

''எல்லாப் பெண்களுமே அபாயகரமானவர்கள். எல்லோர் உள்ளேயும் டி.என்.டி. இருக்கிறது. அந்தப் பெண் மா ட்ஸே துங் உட்கொண்டவளா?''

''அவள் இறப்பதைப் பற்றி அஞ்சாதவள்.''

''யார் இறப்பதைப் பற்றி? தானு? பிறரா?''

''இரண்டு விதத்திலும் அஞ்சாதவள். அவளை நீங்கள் தனியாக விமானத்தில் கொண்டு வரவேண்டும்.''

''கவலைப் படாதீர்கள். கொணர்கிறேன். பெண்கள் என் ஸ்பெஷாலிட்டி.''

''காப்டன் ஜேகே, சமீபத்தில் கல்கத்தாவில் எட்டு இளைஞர்கள் கைதானுர்கள். அவர்கள் மொத்தம் ஒன்பது அரசியல் கொலைகள் செய்தவர்கள். ஒரு பிரின்ஸிபாலை முதுகில் குத்தியிருக்கிறுர்கள். ஒரு 'பான் அமெரிக்கன்' பஸ்ஸை வெடி வைத்துத் தகர்த்திருக்கிறுர்கள். ஒரு போலீஸ் ஆபீஸர் மேல் அமிலம் எறிந்து அவர் முகத்தைப் பார்க்க முடியாதபடி செய்திருக்கிறுர்கள். ஒரு மாணவனை ஏரியில் மிதக்க விட்டிருக்கிறுர்கள். ஒரு சர்வகலாசாலையில் மாலடாவ் காக்டெய்ல், ஒரு ரெஸ்டாரண்டில் வெடி மருந்து, ஒரு.....''

''போதும். தினசரி பேப்பரில் வரும் பட்டியல்தான்....சமீபத்தில் சற்று அடங்கி யிருந்தது என்று நினைத்தேன்.''

''அந்த எட்டுப் பேரில் ஒருத்தி பெண்.. அந்தப் பெண், வயது பத்தொன்பது. பெயர் நிஷா. அவளைத் தான் நீங்கள் டில்லிக்குக் கொண்டு வரப் போகிறீர்கள்...''

''அவளுடைய 'டைப்' புரிகிறது. கிராப் வைத்துக் கொண்டு காலைச் சாப்பாட்டுக்கு எதேச்சாதிகாரிகளின் ரத்தம் கேட்கும் தீவிரச் சிவப்பு... எனினும் ஒரு பெண் தானே! பெண்கள் எப்பொழுதுமே சற்று இன்ஃபீரியர்! அதிருக்கட்டும். அவளைமட்டுமாடில்லிக்குக்கொண்டு வரவேண்டும்?''

''அவளை மட்டும்.''

''ஏன்?''

''அவள் என் பெண்!'' என்றுர்.

—தொடரும்

லேட் நைட்

சுஜாதா

ஜே கே நிஷாவைப் பற்றி அறிந்து கொள்ளும் எட்டாம் அத்தியாயம்.

என்னைக் காப்பாற்றியவரும் என்னை நள்ளிரவில் தன் அகல மான வீட்டுக்கு அழைத்துச் சென்று, 'பன்னுகர்' என்கிற இடத்திலிருந்து ஒரு பெண்ணை இட்டுக் கொண்டு இரவில் டில்லி வந்து சேர வேண்டும் என்று கேட்டுக் கொண்டவரு மான அந்த உயரமான மனிதர் கடைசியில் சொன்னது எனக்கு ஆச்சரியம் தந்தது. அரசியல் கைதி களில் ஒரு இளம்பெண் இருப்பது ஆச்சரியமில்லை. இந்தக் காலத்தில் இளம்பெண்கள் எத்தனையோ புதிது புதிதாகச் செய்கிறார்கள். சுருட்டுக் குடிக்காதகுறை (அதுகூட எனக்குத் தெரியாமல் குடிக்கிறார்களோ என் னவோ) மற்றபடி சகலமும் நடக் கிறது! ஆதலால் அரசியலில் ஒரு பெண் தீவிரமாக ஈடுபடுகிறாள் என் றால் அதில் எனக்கு ஆச்சரியம் ஏற் படாததில் உங்களுக்கு ஆச்சரி யம் ஏற்படாது. ஆனால், இது அவர் மகள் என்பதை என்னால் செரிக்க முடியவில்லை. இவர் ஒரு 'டிப்பிகல்' அரசாங்க உயர் அதிகாரி. பெரிய காரர், போலீசிடம் செல்வாக்கு, சுகவாசம்... இதற்கும் 'எங்கேயோ பெங்காலில்' சிறைப் பட்டு பன்னு கருக்கு இழுத்துச் செல்லப் படும் யுவதி அவர் பெண் என்பதற்கும் எப்படி முடிச்சு? நம்ப மாட்டேன் என்றது என் மூளை.

''ஸார் நம்ப முடியவில்லை'' என்றேன். அவர் தன் பெண் பிறந்து வளர்ந்ததையும், வளர்ந்த சூழ்நிலையையும் 1500 வார்த்தை களில் சொன்னார். அவள் எப்படி மாறிப்போனாள் என்பதை விவரித் தார். அதைப் பகுதி பகுதியாக இந்தஅத்தியாயத்தில் இறைத்திருக் கிறேன். ஒரே யடியாகக் கொடுத் தால் ரம்பம் படம் போட்டு ஆசிரி யருக்கு 'தேனி—பால கோபாலன்' என்று லெட்டர் எழுதுவீர்கள். எனவே மேலே நிகழ்ந்த நிகழ்ச்சி களைச் சொல்லிக் கொண்டே போகி றேன். இடைவெளிகளில் அந்தப் பெண் நிஷாவைப் பற்றி அவர் தந்த தகவல்களையும் தருகிறேன். சம்மதமா வஸந்தி?

மறு நாள் காலை எனக்காக ஒரு புத்தம் புது 'ஸென்னா' விமானம் காத்திருந்தது. அலுமினியம் பள பளக்க நின்றது. அதன் ரிஜிஸ்ட்ரே ஷன் எழுத்துக்கள் ஆங்கிலத்தில் ஆரம்பித்ததிலிருந்து அது அமெ ரிக்காவில் பதிவான விமானம் என்று தெரிந்து கொண்டேன். எம்பஸியைச் சேர்ந்ததாக இருக் கலாம். அல்லது நாடெங்கும் பரவி இருக்கும் எத்தனையோ அமெரிக்க ஸ்தாபனங்களின் நபர்களில் ஒன் றின் கமா ஒருவரின் விமானமாக இருக்கலாம். அதைப் பற்றி நான் கவலைப் படவில்லை.

அந்த ஸென்னா மிகப் புதிதாக இருந்தது. ஓட்டுவதற்கு எல்லா சவுகரியங்களும் இருந்தன. சின்ன விமானம்தான். ஆனால் வி.ஓ.ஆர்., ஐ.எல்.எஸ்,,வி.எச். எஃப் போன்ற ரேடியோ வசதிகள் யாவும் இருந் தன. ஆட்டோ பைலட் வசதி இருந்தது. எனக்கு இந்த ஜில் வேலை எல்லாம் ஒத்து வராது. பைலட்டைச் சோம்பேறியாக்கும் சாதனங்கள் இவை. நான் பறப்பது உட்காரும் இடத்தில் அல்லது பிருஷ்ட பாகத்தில் ஏற்படுகிற அழுத்தத்தை வைத்துக்கொண்டு. எனக்கு, 'த்ராட்டில்' கண்ட்ரோ லும் மற்ற ப்ரைமரி கண்ட்ரோல் களும் போதுமானது. ஃப்ளாப் இருந்தால் உசிதம். இறக்கை வைத்த டப்பா போதும் எனக்கு.

'க்ளியரன்ஸ்' எல்லாம் கையெ ழுத்தாகித் தயாராக இருந்தது. மெயின், ஆக்ஸிலியரி இரண்டு டாங் குகளும் பெட்ரோல் நிரம்பி இருந் தன. என் ஃப்ளைட் ப்ளான் லக்னோ வழியாக பன்னுகர் போவதற்குத் தயாராக இருந்தது. வானிலை சுத்த மாக இருந்தது. எனக்காக எல்லா ரும் காத்திருந்தார்கள். நான் வந் ததும் மௌனமாக, திறமையாகத் தரை வேலைகள் நடந்தன. ஒரு போலீஸ் ஆபீசர் பச்சையாக ஷேவ் செய்துகொண்டு என் அருகில் வந்து. ''காப்டன் ஜேகே!'' என் றார்.

''ஆம்'' என்றேன்.

''நீங்கள் துப்பாக்கி உபயோகப் படுத்தி இருக்கிறீர்களா?'' என்று கேட்டார். நான், ''இல்லை'' என் றேன். நான், ''ஏன்'' என்றேன். அவர், ''ஒன்றுமில்லை கேட்டேன்'' என்றார். அவர், ''தேவை இருந் தால் ஒரு துப்பாக்கி தருகிறேன். தற்காப்புக்கு'' என்றார். நான், ''தேவையில்லை. என்னை எவரும் கற்பழிக்கப் போவதில்லை'' என் றேன். அதை அவர் ரசிக்க வில்லை.

விமானத்தின் ரேடியோ சுத்த மாகக் கேட்டது. துடிப்புடன் விரலை வைத்ததும், இன்ஜின் புறப்பட் டது. ரன்வேயில் ஒரு சிறு ஓட் டம். ஒரே தூக்கல்! என்ன டாப் கிளாஸ் விமானம் அய்யா! விமான மில்லை. இறகு பொருந்திய தேவதை ஸென்னா.

தேவதையை 15,000 அடி வரை கூடக் கொண்டு செல்லலாம். 'ஸிலிங்' உயரம் என்று ஒன்று உண்டு. 8,000; 9000 அடி எல்லாம் சுலபமாகப் பறக்கலாம். சற்றுக் குளிரும், அவ்வளவுதான்.

அதிகாலை டேக் ஆப் ஆகி, டில்லி- கல்கத்தா 'ஏர்வே' யைப் பிடித்துக் கொண்டேன். ஏர்வே என்பது வானத்தில் அமைந்திருக் கும் ராஜ பாட்டை. கண்ணுக்குத் தெரியாத ரேடியோ அலைகளைக் கொண்டு வானத்தில் விரிக்கப்பட்ட

வரவேற்புக் கம்பளம் போல.பூமியில் நூற்றுக் கணக்கானவர்கள் ஒத்துழைத்து உதவி செய்யும் வரவேற்பு அது. அதை விட்டு விலகுவது விமானிக்கு நல்லதல்ல. பூமியில் இருப்பவர்களுக்கும் நல்லதல்ல. டில்லி வி.ஓ. ஆரைத் திருகித் தொட்டுக் கொண்டேன். விமானம் பூவை விழுங்கியது போல் சென்றது.... நிஷா!

அவள் சிறு வயதில் மிகவும் சாதுவான குழந்தை. தன் ஐந்தாம் வயதில் தாயை இழந்தாள். நான் ஒரு தவறு செய்து விட்டேன். அவளிடம், ''உன் அம்மா செத்துப் போய் விட்டாள்'' என்று நேராகச் சொல்லியிருக்கலாம். அதற்குப் பதில், ''ஆஸ்பத்திரிக்குப்போயிருக்கிறாள்; நாளை வருவாள், அடுத்தமாதம் வருவாள்' என்று பொய் சொல்லிக்கொண்டே ஒரு வருஷத்தில் மறக்க அடித்து விடலாம் என்று நினைத்தேன். அது அவள் மனத்தைப் பாதித்திருக்க வேண்டும்- அந்த ஒரு வருஷ எதிர்பார்ப்பும் ஏமாற்றமும். அவளே ஒருநாள் என்னைக் கேட்டாள்: ''அம்மா செத்துப் போய்விட்டாளா?'' என்று.

என்னுடைய டில்லி- லக்னோ பிரயாணம் சம்பவமில்லாதாக இருந்தது. ஒரு வி.ஐ.பி. பிரயாணம் போல எல்லோரும் ஒத்துழைக்க காற்றுக்கூட எனக்கு வாகாக பின்புறத்திலிருந்து வீச, நான் எதிர்பார்த்துக் கணக்கிட்டதற்கு அரை மணி முன்பே லக்னோவைத் தொட்டு விட்டேன். மணி சுமார் ஒன்பதிருக்கும். பெட்ரோலுக்காக இங்கே இறங்க வேண்டிய தேவையே இல்லை. ஆனால் எனக்குக் கொடுத்திருந்த செயற் குறிப்பின்படி நான் லக்னோவில் இறங்கியாக வேண்டும். எனக்கு மேல் விவரங்கள் சில அங்கு கிடைக்கும் என்று சொல்லி இருந்தார்கள். எனக்கு யாவுமே தெளிவில்லாமல் இருந்தது. எனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது நான் பன்னுகர் போக வேண்டும். ஒருபெண்ணைப்பொறுக்கிக்கொண்டு டில்லி வரவேண்டும். அஷ்ட்டே!

லக்னோவில் இறங்குகையில், ரேடியோவிலேயே சொன்னார்கள். நேராக ஹாங்கர் நம்பர் இரண்டிற்குச் செலுத்தும்படி. அவ்விடம் சென்று இன்ஜினை அணைத்ததும், சிலர் வந்து தனியாக ஒரு சிறு அறைக்கு அழைத்துச் சென்று, டீ கொடுத்தார்கள். டீ அருந்தினேன். அப்புறம் அருமையான பைன் ஆப்பிள் கேக் கொடுத்தார்கள். அதை நான் மௌனமாகச் சாப்பிட்டேன். அவர்கள் என்னையே பார்த்துக்கொண்டிருக்க எனக்குச் சாப்பிடுவதில் ஒரு விதத் தயக்கம் ஏற்பட்டது. நான் சாப்பிடும்போது செய்யும் சில சப்தங்கள்கூட அந்த மௌனத்தில் பெரிதாகத் தெரிந்தன. ''ம்! ஏன் எல்லோரும் மௌனமாக இருக்கிறீர்கள்? ஏதாவது ஹர்த்தாலா?''

அவர்கள் மேலும் மௌனமாக இருந்தார்கள். ''கம் ஆன்! ஸ்பீக்! லேஸ் ஸம்திங்'' என்றேன், முதல் பழக்கம் ஏற்படும் பெண்ணிடம் சொல்வது போல.

''இன்னொரு கேக் வேண்டுமா?''

''வேண்டாம். நான் பன்னுகர் போகிறேன். ஏதாவது செய்தி இருக்கிறதா எனக்கு?''

''இல்லை. சோப்ரா அவர்கள் இனிமேல்தான் வருவார். கார் வரும் வரை மற்றொரு கப் டீ சாப்பிடுகிறீர்களா?''

நிஷா சின்ன வயதில் விளையாட மாட்டாள். கொஞ்சம் பூஞ்சையாக இருந்தாள். எட்டு வயதில் அவளுக்கு டான்ஸில்ஸ்



கவனிக்க எனக்கு நேரமும் இருந்ததில்லை. எப்பொழுதாவது அவள் என்ன படிக்கிறாள் என்று பார்ப்பேன். பொதுவாகவே தன் வயதுக்குச் சற்று அதிகமான புத்தகங்களே படிப்பாள். ஷி வாஸ் வெரி கொய்ட். ஆனால் அவள் ஆபரேஷன் செய்வித்தேன். அதன் பின் அவள் வேகமாக வளர்ந்தாள். ஆனால், அவள் எப்போதுமே அதிகம் பேச மாட்டாள். புத்தகங்கள் படிப்பாள். பள்ளிக்கூடத்தில் தேவைக்கு மட்டுமே படிப்பாள். கிளாஸில் முதலிலும் இல்லை, கடைசியிலும் இல்லை. எனக்கு அவள் படிப்பினால் கவலையைத் தந்ததில்லை. அதை

சின்ன வயதில் கொஞ்சம் கூட அவளிடம் 'வயலன்ஸ்' இருந்ததில்லை. அதுதான் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. எறும்பைக் கூடத் தன்னிலிட்டு நடக்கக் கூடியவள். எனக்கு நினைவிருக்கிறது. ஒருநாள் 'ஷெட்'டில் பூனைக்குட்டியை, கிடாப்பூனை குதறிவிட்டுப் போய்விட்டது. அதன் வயிற்றுப் பாகத்தில் சிவப்புக் குதறலுடன் குற்றுயிராய்க் கத்தக்கூட ஜீவனற்றுக் கிடந்தது பூனைக்குட்டி. அதை உயிர்ப்பிக்க நிஷா எவ்வளவு பாடுபட்டாள் தெரியுமா? எதிர்வீட்டு டாக்டர் மாமாவை எழுப்பி இன்ஜெக்ஷன் குத்த வைத்து, பாண்டேஜ் போட வைத்து, பூனைக் குட்டிக்கு!

அது பிழைக்கவில்லை.

சோப்ரா என்கிறவர் வந்ததும் என்னுடன் சிரிக்காமல் கைகுலுக்கினர். (நாற்பது வயதிருக்கலாம். காதோரத்தில் மட்டும் நரை. ஒருகாலத்தில் அழகாக இருந்திருக்க வேண்டியவர்). என்னைத் தோளில் பதிய அணைத்துத் தனியாய் அழைத்துச் சென்று, "இன்னும் அரைமணியில் டேக் ஆஃப் செய்தால் எத்தனை மணிக்கு பன்னுகர் போவீர்கள்?" என்று கேட்டார். நான், "சுமார் நாலுமணி ஆகும்" என்றேன். "உடனே பார்ட்டியுடன் திரும்ப லக்னோ வாருங்கள்" என்றார். "அங்கே இறங்கியதும் உங்களுக்கு எல்லாப் பாதுகாப்பும் செய்விக்கிறோம். பன்னுகரில் இறங்கியதும் பிஸ்வாஸ் என்கிற எஸ். பி. உங்களைச் சந்திப்பார். அவர் அந்தப் பெண்ணுடன் தயாராக இருப்பார். அவளை விமானத்தில் ஏற்றி விடுவார்கள். நீங்கள் விமானத்தை விட்டு இறங்க வேண்டியதில்லை."

"ஒன் மினிட் சோப்ரா. அந்தப் பெண் என் பக்கத்தில் உட்காரப் போகிறாள் இல்லையா?"

"ஆம்!"

"நான் ஓட்டும்போது கலாட்டா செய்து, திமிறி, ஏதாவது செய்ய முற்பட்டால், விமானத்தில் அது ஆபத்தாயிற்றே."

"அது நடக்காது. இரண்டு முறைகளில் அதைச்சமாளிக்கலாம். அவளுக்கு ஸெடேட்டிவ் கொடுத்து அரைத் தூக்கத்திலேயே கொண்டு வரலாம். அல்லது அவளைக் கட்டி விடலாம். கைகளைப் பின்னுக்கு மடக்கி விலங்கிட்டு விடலாம். சீட் பெல்ட் மாட்டி இருக்கும். கால்களைச்சேர்த்துப் பிணைத்துவிடலாம். நகர்த்த முடியாமல் செய்துவிடலாம். நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படிச் செய்வார்கள். மேற்கொண்டு எந்தவிதமான பத்திரங்கள் தேவையோ அவைகளைச் செய்ய பிஸ்வாஸுக்கு எல்லாம் தெரியும். பெண் நகர முடியாது. மேலும் பெண்தானே!"

"மாட்ஸே துங் படித்த பெண். அவளை டில்லிக்குக் கொண்டு வருவதன் அர்த்தம் என்ன?"-தெரிந்தே கேட்டேன்.

"எனக்குத் தெரியாது" என்றார் சோப்ரா.

நான் மறுபடி விமானத்தைக் கிளப்பியபோது 'பெஸ்ட் ஆஃப் லக்' என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டினர்.

நிஷா சற்று வேறுவிதமான பெண் என்று நான் தாமதமாகத்தான் தெரிந்து கொண்டேன். நான் மறு விவாகம் செய்து கொள்ளவில்லை. அரசாங்க ஃபைல்களிலேயே மூழ்கி இருந்தேன். அவளைக் கவனிக்க ஒரு பெண் வைத்திருந்தேன். நிஷாவை மிக நல்ல பள்ளிகளுக்கே அனுப்பினேன்.

சிம்லாவில் உள்ள ஒரு பப்ளிக் ஸ்கூலுக்கு அனுப்பினேன். அவள் அங்கே சில வருஷம் படித்தாள். என்ன படித்தாள் என்று கவனிக்க முடியாமல்

காஞ்சிபுரத்திற்கு விஜயம் செய்யுங்கள்

நவராத்ரி, தீபாவளி விசேஷ விற்பனை

காஞ்சிபுரம் பட்டு ஜரிகை சேலைகள், பாவாடைகள், சோளிகள், மற்றும் பெனாரஸ், தர்மாவரம், ஆரணி பட்டுச் சேலைகள் வாங்க நம்பிக்கையான இடம்

போன்: 512

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் சன் சங்கரன் &

A. அருணாசல முதலியார்

பட்டு சரிகை சேலைகள் & மில் ஜவுளி வியாபாரம்

181, காந்தி ரோட் :: காஞ்சிபுரம்-1.

N. B. புதிய ஜவுளி ஷோரூம் எங்கள் கடை எதிரில் விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய வரவுகள்: காவேரி, கவிதா. புதிய டிஸைன்: டெம்பிள்.

போய்விட்டது. எனக்கும் அவளுக்கும் அன்யோன்யம் ஏற்பட்ட அம்மா என்கிற இடைச் சங்கிலி இல்லாததால் அதிக வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது. அவள் பள்ளிப் படிப்பு முடிந்ததும் என்னை கல்கத்தாவுக்கு மாற்றினார்கள். அவளை அங்கே மெடிக்கல் காலேஜில் சேர்த்தேன். முதல் இரண்டு வருஷங்கள் துடியாகப் படித்தாள். அதற்குள் என்னை மறுபடி டில்லிக்குக் கூப்பிட்டுவிட்டார்கள். அவளை ஹாஸ்டலில் சேர்த்தேன். அப்பொழுதே நான் அவளை இழந்துவிட்டேன். அந்த ஹாஸ்டலில் என்னதான் நிகழ்ந்ததோ அவளுக்கு!

லக்னே விமான நிலையத்தை விட்டு நான் கிளம்புகையில், பிற்பகலாகிவிட்டது. என் கடிகாரத்தைக் கண்ட்ரோல் டவரில் 'டைம் செக்' வாங்கித் திருத்திக் கொண்டேன். பிற்பகல் மேகங்கள் பஞ்சுப் பொதிகளாகத் திரண்டுகொண்டிருந்தன. தூரத்தில் ஒரு பகல் மின்னல் பளிச்சிட்டது. அதன் இடியோசை எனக்குக் கேட்கவில்லை. எனக்கு அளிக்கப்பட்ட உயரத்திற்கு வந்து விமானத்தின் திராட்டிலை சீரமைக்க, அதன் விர்ர்ர் எனக்கு மிக இனிய நாதமாகக் காதில் விழுந்தது. நேரடி க்ளியரன்ஸைப் பயன்படுத்தி, லக்னே வி. ஓ. ஆர். உதவி கொண்டு பன்னகர் நோக்கிச் செல்கிறேன். அந்த மேகங்களின் ஊடே செல்ல எனக்கு விருப்பமில்லை. விமானம் சிறியது. குலுக்கல் அதிகம் இருக்கும். சற்றுப் பாதையிலிருந்து விலகி, மேகங்களைக் கடந்ததும் மறுபடி பாதையில் சேர்ந்து கொண்டேன். என் விமானத்தைப் பார்த்தேன். பக்கத்து சீட் காலியாக இருந்தது. அதில் ஒரு பெண் வரப்போகிறாள். என் இதயம் ஜாஸ் சங்கீதத்தில் ஸின்க்கோபேஷன் போல ஒரு துடிப்பை விட்டு விட்டு மறுபடி சேர்ந்துகொண்டது. என்னில் பயமா?

என் பைக்குள் அந்தத் தந்தை கொடுத்த சிறிய புத்தகம் ஒன்று இருந்தது. சிவப்புப் புத்தகம். அதை எடுத்துப் புரட்டினேன். நிஷாவைப் பற்றிய புத்தகம்...

'எல்லோரும் இறந்தாக வேண்டும். ஆனால் சாவுக்கு மதிப்பு மாறலாம். ட்ஸுமா சின் என்கிற பழைய சீன எழுத்தாளர் சொன்னார்: ''சாவு எல்லா மனிதர்களுக்கும் ஏற்பட்டாலும், அது தாய் மலையைவிடக்கனமாக இருக்கலாம். அல்லது ஒரு இறகைவிடக் கனமற்றதாக இருக்கலாம்''. மக்களுக்காக இறப்பது தாய் மலையை விடக் கனமானது. எதேச்சாதிகாரிகளுக்கும் ஏகாதிபத்தியக்காரர்களுக்கும் அடி

அவள்: எங்க அம்மாவும் அப்பாவும் காதலிச்சுக் கல்யாணம் செய்துகொண்டவர்கள்தான்.....

அவன்: அதனாலே.. ?

அவள்: அதனாலேதான் நாம் ரெண்டு பேரும் காதலிச்சுக் கல்யாணம் பண்றதை ஒருக்காலும் அனுமதிக்க மாட்டாங்க...!

ழைப்படுத்துபவர்களுக்கும் இறப்பது ஒரு சிறகைவிடக் கனமற்றது!'

அவள் எப்படி மாறினாள்! எனக்குக் கடிதம் எழுதுநின்றது. ஒரு தடவை தந்தியடித்தேன். அதற்குப் பதில் வரவில்லை. வேலைத் தொந்தரவுக்கிடையில் ஒரு தடவை அவசரமாகக் கல்கத்தாவுக்குப் பறந்து சென்றேன். அவளைப் பார்த்தேன். அவள் மாறுதல் உடம்பில் தெரியவில்லை. அவள் மனம் எனக்கு விளங்கவில்லை. எத்தனை விஞ்ஞானங்களைப் பதிய வைத்துக்கொண்டு நான் கேட்ட கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தைகளில் ஆம், இல்லை என்று பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்! அவள் பார்வை என் மேல் படவில்லை. தூரம் பார்த்தது! மிகக் கொஞ்சம் பேச்சு. நிஷா உனக்கு உடம்பு சரியில்லையா? ஊஹூம். டில்லிக்கு வந்துவிடுகிறாயா? வேண்டாம். நிஷா' ஆர் யூ ஆல்ரைட்? ஆம்.

ஷி வாஸ்ன்ட் ஆல்ரைட். அடுத்த மாதம் ஹாஸ்டல் அதிகாரியிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது 'நிஷா ஹாஸ்டலில் இல்லை. அவளைக் காணோம்' என்று. நான் மேற்கு வங்காளத்தின் பிரதம போலீஸ் அதிகாரியுடன் பேசினேன், அவளை எப்படியாவது கண்டு பிடித்துத் தரவேண்டும் என்று. கல்கத்தா அக்கிரமச் செயல்களில் கொதித்தது. முதுகுகளில் குத்தினார்கள். வெடி வைத்தார்கள். சடலங்கள் மிதந்தன. சர்க்கார் வண்டிகள் எரிந்தன. பர்த்வான் அருகில் சில இளைஞர்கள் கைதானார்கள். என் மகள் அதில் ஒருத்தி. அஸன்ஸால் சிறைக்கு அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ''அவளை என்ன செய்வது? அவள் உங்கள் மகள் என்பதை இதுவரை வெளியிடவில்லை.''

அவளை டில்லிக்குக் கொண்டு வரவேண்டும். அவள் கொண்டு வரப்படுவது ஒருத்தருக்கும் தெரியக்கூடாது. பத்திரிகைகளுக்குத் தெரியக்கூடாது ஜேகே! எனக்கு என் செல்லப் பெண் திரும்ப வேண்டும். அவள் எனக்கு வேண்டும். எனக்கு வேண்டும்! தகப்பன் என்கிற கடமை நான் தவறியதில்லை. அவள் என் ஒரே பெண். நான் உயிர் வாழ்வதன் அர்த்தம் அவள் அம்மாவின் பிம்பம். அவளை நான் இழக்கக்கூடாது. இழக்கமாட்டேன். அரசாங்க மெஷின் முழுவதையும் நகர்த்தி எத்தனையோ செலவுகள் செய்து, எத்தனையோ ரிஸ்க் எடுத்துக்கொண்டு என் பெண்ணுக்காகக் காத்திருக்கிறேன். அவள் எனக்குப் பத்திரமாக வேண்டும். அவள் நெஞ்சில் பதிந்திருக்கும் அத்தனை ரத்தக் கறைகளைத் துடைத்து, அவளைப் புதுப்பிக்கப் போகிறேன். அவளைக் கொண்டு வா! உனக்கு நான் எவ்வளவோ செய்வேன். நான் பெரிய அதிகாரி என்பதை மறந்து விடு. ஒரு தந்தை, அவள் என் மகள். என் ரத்தம். அவள் மனதைக் கெடுத்த அத்தனை பேரையும் சுவரில் பதிய வைத்து மெல்லக் குறி பார்த்துச் சுடவேண்டும். டுமீல்! டுமீல்! டுமீல்! அது அப்புறம். முதலில் என் மகள் என் மகள்....என் மகள்.....

பனாகரில் நான் இறங்கினேன். ரன்வேயின் மத்தியிலிருந்து வலது பக்கம் விலகச் சொன்னார்கள். தூரத்தில் ஒரு ஹாங்கொட்டகை தெரிந்தது. அங்கே ஒரு ஆள் எனக்குச் சைகை காட்டி வரவேற்றார். பக்கத்தில் ஒரு வான் தெரிந்தது. அதன் அருகே சற்று விலகி நான்கு போலீஸார் துப்பாக்கி தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். நான் அருகே செல்வச்செல்வ அந்த அதிகாரி வானின் முன் பக்கத்திலிருந்து இறங்கி வெளிவருவது தெரிந்தது. இன்னும் அருகே செல்ல அவர் தோளில் டபிள்யூ. பி. ப்பி. என்கிற பித்தளை எழுத்துக்கள் தெரிந்தன. வண்டியின் பின் கம்பி அடைப்புக்குள் வட்டத்துக்குள் ஒரு முகம் தெரிந்தது. நான் விமானத்தைக் கொண்டு வந்து அருகில் நிறுத்துவதை சிரத்தையில்லாமல் பார்த்துக்கொண்டிருந்த முகம்.

நிஷா!

—தொடரும்

ஒரு சீறு சீறிவிட்டு விமானத்தை நிறுத்தினேன். பிஸ்வாஸ் என் அருகில் வந்து ப்ரொபல்லர் நிற்கிற வரைக்கும் காத்திருந்து விட்டுக் கதவைத் திறந்து என் கையைக் குலுக்கினார். ''பெட்ரோல்போட வேண்டுமா?'' என்றார். ''வேண்டாம்'' என்றேன்.

பிஸ்வாஸ் பெங்காலி என்பதைச் சுலபமாகச் சொல்ல முடிந்தது. பெங்காலிகளுக்கு என்று சில அடையாளங்கள் உள்ளன. சதுர முகம், சாதாரணமாகவே வகிடு எடுக்கப்படாத பின்தள்ளி வாரப்பட்ட தலை மயிர். கண்கள் சற்று, சற்றுத் தான், மங்கோலியத்தனம் காட்டும். அவர்கள் சாப்பிடும் மீன், அவர்கள் மொழி, அவர்கள் கலாசாரம், எளிதில் சூடாகும் ரத்தம் எல்லாமே எப்படியோ வார்த்தைகளில் அகப்படாத விதத்தில் அவர்கள் தோற்றத்தில் பிரதிபலித்து விடுகின்றன. அவர்களைச் சொல்வது சுலபம். தோற்றத்தில் தெரியவில்லை என்றாலும் அவர்கள் இங்கிலீஷ் பேச்சிலிருந்து நிச்சயம் கண்டுபிடித்து விடலாம். 'வோல்ட்' என்று சொல்லச் சொல்லுங்கள்; 'போல்ட்' என்பார்கள். 'போல்ட்' என்று சொல்லச் சொல்லுங்கள். 'வோல்ட்' என்பார்கள்.

பிஸ்வாஸ், ''காப்டன், கொஞ்சம் தனியாக வருகிறீர்களா?'' என்றார்.

நான் அவருடன் சில கெஜங்கள் நடந்தேன். அவர் என் மிக அருகே வந்து 'ரூப் தேரா மஸ்தானா' என்று காதில் மெலிதாகப் பாடியிருந்தால் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். ''அவளை எப்படிக் கொண்டு செல்வதாக உத்தேசம்?'' என்றார். மற்றவர்கள் காத்திருந்தார்கள்; என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் சொல்லுங்கள்'' என்றேன்.

''நீங்கள் சொல்லுங்கள், உங்கள் பத்திரம் முக்கியம்'' என்றார்.

''அவள் விலங்கிடப் பட்டிருக்கிறாளா?''

''ஆம்.''

''எப்படி?''

''கைகள் பின்பக்கமாகப் பூட்டப்பட்டிருக்கின்றன.''

''விலங்குக்குச் சாவி இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''அது எனக்கு வேண்டும். நான் அவளை முதலில் சந்திக்கிறேன்'' என்றேன். வான் பக்கம் நடந்தேன். அந்த முகம் என்னையே தொடர்ந்து கொண்டிருந்தது. அவர் என்னுடன் வந்தார். ''திற'' என்றார்.

வானின் பின் பக்கத்துக் கதவுகள் திறக்கப்பட்டன. நிஷா தனியாக உட்கார்ந்திருந்தாள். அவள் கைகளைப் பின்பக்கம் கோர்த்துக்கொண்டு முழங்கால்கள் சாய உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

மிக இளம் பெண். மிக மிக. அவள் ஆண்கள் சட்டை ஒன்று அழுக்கான நீலத்திலும், அழுக்கான, கலர் லேசில் சொல்ல முடியாத ஒரு பாண்டும் அணிந்திருந்தாள். காலில் செருப்பு இல்லை. முகம் அழுக்காக இருந்தது. தலை மயிர் பரட்டையாக இருந்தது. தொள தொளவென்று சட்டை. அதில் ஒரு ஸேஃப்டி பின் ஒரு பட்டனுக்குப் பதிலாக மாட்டியிருந்தது.

கொஞ்சம் கூடப் பவுடரோ, ஏதாவது ஒருவகை அலங்காரமோ இல்லாத பெண்களை நான் அதுவரை பார்த்ததில்லை. அந்தப் பழக்கம் சுமார் 72 வயதில்தான் அவர்களுக்குப் போகும் என நினைக்கிறேன். நிஷா ஒரு பையனைப் போல இருந்தாள். நிஷாவை ஒரு பெண் என்று சொன்னவை அவள் கட்டையான திரளான கூந்தலும் மெலிதாகத் தெரிந்த அவள் மார்பகப் பரிமாணமும்தான்.

''அவுட்'' என்று அதட்டினார் பிஸ்வாஸ். ''ஹலோ'' என்றேன் நான். அவள் என்னை ஒருதடவை அலட்சியமாகப் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டாள்.

அவள் கண்களில் இன்னும் குழந்தைத்தனம் இருந்ததா? அவள் நிறம் பஞ்சாப் கோதுமை

கரை

சுஜாதா

ஜேகே நிஷாவை விமானத்தில் அழைத்துச் செல்லும் ஒன்பதாம் அத்தியாயம்.

யின் நிறமிருக்கலாம். அவள் உதடுகள் மெலியதாக இருந்தன. கன்னத்தில் மெலிய ரத்தக்கோடு தெரிந்தது. நகக் கீறல் போலத் தெரிந்தது.

''வெளியே கொண்டு வாருங்கள்'' என்றேன். இரண்டு போலீஸ்காரர்கள் உள்ளே நுழைய முற்பட, அவளே நகர்ந்து வந்து வெளியே குதித்தாள். குதித்த போது எனக்கு ஒன்று புலனாயிது. அவள் வெறும் சட்டை மட்டும் அணிந்து கொண்டிருக்கிறாள்; உள்ளுடை ஏதும் அணியவில்லை என்பது. புழுதியாக இருந்தாள்.

''நிஷா! நீதான் நிஷாவா?'' என்றேன்.

''அவள் பேச மாட்டாள்'' என்றார் பிஸ்வாஸ். நானும் அவரும் ஒருவரை ஒருவர் எதிர் எதிர் பார்த்து நின்று கொண்டிருந்தோம். அவள் இப்போது என்னைத் தயக்கமில்லாமல் நேர்ப் பார்வை பார்த்தாள். அவள் தலை சற்றுச் சாய்ந்திருந்தது. அவள் கண்கள் என்ன உணர்ச்சி காட்டின என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவள் ஐந்தடி மூன்று அங்குலம் இருப்பாள். அவள் இடுப்பின் அளவை அவள் சட்டை மறைத்தது. அவள் பார்வையில் கேலி இருந்ததா? அலட்சியமா, ஆர்வமா அல்லது பரிதாபமா, அல்லது.....

''சாப்பிட்டாளா?'' என்றேன், அவளைப் பார்த்த பார்வையை மாற்றாமல்.

''இல்லை, சாப்பிட மாட்டாள்.''

நான் அவள் அருகில் சென்றேன். அவள் என்னையே பார்த்தாள். நான் அவளைச் சுற்றி வந்தேன். பின் பக்கம் அவள் கைகள் விலங்கிடப்பட்டிருந்த இடத்தில் கன்னிப் போயிருந்தது. அவள் கைகளை உயரத் தூக்கி ஆராய்ந்தேன்.

நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவள் வேகமான சுற்றுச்சுற்றி விலங்குக் கைகளுடன் என் விலாப் பக்கத்தில் மோதினாள். இரும்பு பட்ட இடத்தில் வலி தெரிந்தது.

பிஸ்வாஸ் சொன்னார்: ''அவள் அபாயகரமானவள்.''

நான் சற்று விலகிக் கொண்டு அவளைப் பார்த்தேன். அவள் என்னைத் தயக்கமில்லாமல் பார்த்தாள்; நீ வேறு ஜாதி, வேறு ஜெனரேஷன்; வேறு சமூக மட்டம் என்று சொல்வது போலப் பார்வை. அவள் அடித்த இடத்தில் எனக்கு நிச்சயம் வலித்தது. ''நீ அதற்குத் திரும்பப் பெறப் போகிறாய்'' என்றேன்.

''அவள் நிறைய அடி தாங்கக் கூடியவள்'' என்றார் பிஸ்வாஸ்.

''அடிக்கமாட்டேன்'' என்றேன்.

''வாயைக் கட்டி விடலாமா? கடித்தாலும் கடிப்பாள்'' என்றார்.

''வேண்டாம்'' என்றேன். ''கொண்டு செல்லுங்கள்.''

அவளை இரண்டு கான்ஸ்டபிள்கள் தள்ளிச்செல்ல நான் பின்னால் வந்தேன். அவள் விமானத்தில் ஏறத் தயங்கினாள். முரண்டு பிடித்தாள். கான்ஸ்டபிள்கள் பிஸ்வாஸைப் பார்த்தார்கள். பிஸ்வாஸ் என்னைப் பார்த்தார். நான், ''வாருங்கள்'' என்று அருகில் சென்று கதவைத் திறந்து, ஒரு கான்ஸ்டபிளைப் பிடித்துக் கொள்ளச் சொன்னேன். சற்று வேடிக்கை பார்க்கிறதுபோல் பார்த்துத் திடீரென்று ஒரே வாவாக வாவி அவளை உள்ளே நிணித்து அமுக்கி உட்காரவைத்து முழங்கால்களின் மேல் ஸீட் பெல்டை இறுக்கிச் செருகி விட்டேன். ஏதோ ஒரு கன்றுக் குட்டியை லாரியில் ஏற்றுவது போல நடந்தது.

அவள் உட்கார்ந்திருந்த ரீதியில் இருந்து ரட்டர்பெடலை அல்லது கண்ட்ரோல் காலத்தை உதைக்க

''உன்னிடம் அறிவை விடப் பணம்தான் அதிகமாக இருக்கிறது.''

''இல்லையே; என்னிடம் பத்து பைசாதானே இருக்கிறது.''

''நானும் அதைத்தான் சொல்கிறேன்.''

முடியும் என்று எனக்குத் தெரிந்தது. பிஸ்வாஸிடம் இன்னும் கயிறு கேட்டு கணுக்கால்களில் கட்டுப் போட்டு அதை இரண்டு பாகங்களாகப் பிரித்து இடது வலது பக்கம் அகப்பட்ட கொக்கிகளில் கட்டிக் கால்களின் கீழ்ப் பாகத்தையும் நகர விடாமல் செய்து விட்டோம்.

''ஒரு இன்ஜெக்ஷன் கொடுத்து விடலாமா?'' என்றார் பிஸ்வாஸ்.

''வேண்டாம்'' என்றேன்.

அவள் நேர்ப்பார்வை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

எப்படிப்பட்ட பெண் இவள்? பிடிவாதமா? பைத்தியமா? ஒரு விதமான ஸ்கிட்ஸோ ஃப்ரீனியாவா? இல்லை, பயமே கலக்காத ஒரு மன அமைப்பா?

நான் விமானத்தில் ஏறிக் கொண்டு கதவைச் சார்த்திக் கொண்டு ஜன்னல் வழியாகப் பார்த்தேன். பிஸ்வாஸ் அருகில் வந்து, ''ஜாக்கிரதை ஜாக்கிரதை'' என்றார்.

''கவலைப்படாதீர்கள்.''

''இன்னும் கொஞ்சம் கட்டலாமா?'' என்றார்.

''வேண்டாம்.''

''அவள் பத்திரமாக டில்லி போய்ச் சேர்ந்து விடுவது உங்கள் பொறுப்பு.''

''ஷி வில்'' என்றேன்.

''பெல்ட் ஆஃப் லக்!''

''தாங்க்யூ'' என்று ஒரே சீறில் விமானத்தைக் கிளப்பி, ரன்வேயை அடைந்து மிகச் சிக்கனமாக டேக் ஆஃப் செய்து இடதுபக்கம் கூர்மையாக விமானத்தை மடித்தேன். அவள் எல்மேல் சாய்ந்தாள். ஒரே தூக்குத் தூக்கினேன் விமானத்தை. அவள் வயிறு சுருண்டு கொள்ளும். சுருளட்டும்.

விமானத்தை நேர்ப்பட வைக்க நான் அவசரப்படவில்லை. அவள் விலாவில் மோதினது இன்னும் வலித்தது. என் பக்கத்தில் நேராகப் பார்த்துக் கொண்டிருந்த நிஷா

ஒரு விவசாயி மிருக வைத்தியரிடம் ஆலோசனை கேட்டார். ''என் மாடு ஒரு சமயம் சரியாக நடக்கிறது; ஒரு சமயம் நொண்டுகிறது. என்ன செய்யலாம்?''

''சரியாக நடக்கும் போது விற்று விடுங்கள்'' என்றார் வைத்தியர்.

-ராமுசாமி

லைப் பார்த்தேன். அவள் எதிலும் ஆர்வம் இல்லாமல் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு ஆணும் பெண்ணும் தனியாகச் சந்திக்க எத்தனை விநோதமான சூழ்நிலை!

''அமார் பாரி, துமார் பாரி, நொக்ஷல் பாரி'' என்றேன் ஞாபகத்தில்.

அவள் முகம் மாறவே இல்லை. அதே வெற்றுப் பார்வை.

''நிஷா உனக்குக் காது கேட்குமா?'' என்றேன். பதிலில்லை. ''உனக்குக் காது கேட்கும் என்று நினைத்துக்கொண்டு சொல்கிறேன். நீ இந்த விமானத்தில் ஒன்றும் செய்ய முடியாது. முழுவதும் என் ஆதிக்கத்தில் இருக்கிறாய். உன்னால் நகர முடியாது. எதுவும் முட்டாள் தனமாக முயற்சி செய்தால் நீ மரணமடைவாய் என்னுடன். அனாவசியமான மரணம்..... மரணம் என்பது தாய் மலை போல உயர்ந்ததாக இருக்க வேண்டும்....'' என்றேன். அவள் உதடோரம் சற்று விரிந்தது. என்னைப் பார்க்கவில்லை.

''நாம் இருவரும் பிரயாணிகள் போல. டில்லிக்குப் போனதும் உனக்கும் எனக்கும் தொடர்பு முடிந்து விடுகிறது. நான் ஒரு கவிக்காரன். நீ ஒரு...நீ யார்?'' என்றேன்.

ம்ஹூம்...பதிலில்லை.

''உன்னைப் பேசவைக்க முடியாது என்று நினைக்கிறாயா?'' திடீரென்று த்ராட்டிலை முன் தள்ளி விமானத்தை ஆயிரம் அடி சரித்தேன். அவள் மூளைப்பக்கம் ரத்த ஓட்ட வித்தியாசம் ஏற்பட்டு ஜீ சக்திகள் வயிற்றில் பாய அவள் கண்களில் சற்று வேதனை தெரிந்தது. ''சமர்த்தாக வா. நீ பேசும் வரை நான் இப்படியே செய்து கொண்டிருப்பேன். ஐ கன் மேக் யூ. ஃபீல் மிஸரபிள்;'' நான் மறுபடி த்ராட்டிலில் கை வைத்தேன்...

''என்ன பேச வேண்டும்?'' என்றாள்.... (எனக்குத் தெரியும் அப்படிச் சரிவது மகாக் கொடுமை) அவள் குரல் மெலிதாக இருந்தது.

''எது வேண்டுமானாலும் பேசு! ஏதாவது சாப்பிடுகிறாயா?''

''வேண்டாம்'' என்றாள்.

''என்னை ஏதாவது கேள்விகேள்'' என்றேன்.

''நீ யார்?'' என்றாள்.

''நான் ஒரு பைலட்.''

''அரசாங்கமா?''

''காண்ட்ராக்ட்.''

''என்னைக் கொண்டு செல்வதற்கா?''

''ஆம்.''

''எங்கே?''

''டில்லி. உன் அப்பா உனக்காக மிகவும் கவலைப்பட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்''

''உனக்கு என்ன வயது?'' என்றாள், அவள் அப்பாவைப் பற்றி நான் சொன்னதை முழுவதும் புறக்கணித்துவிட்டு.

''நீ பிறக்கும்போது நான் ப்ளேட்டோ படித்துக் கொண்டிருந்தேன்'' என்றேன்.

அவள் உதடு ஓரத்தில் சற்று, சற்றுத்தான், மலர்ந்தது.

''வாட் ஆர் ஆல் தீஸ் நிஷா?''

''எது?''

''இந்தக் கலவரம், கொலை, புரட்சி!''

''நன் ஆஃப் யுவர் பிஸினஸ்.''

''நிஷா! நீ கொன்றாயா?''

''நீ பேப்பர் படிக்கிறாயா?''

''ஆம்.''

''ஆஷிம் என்பவரைப் பற்றி ஏதாவது செய்தி வந்ததா?''

''ஆஷிம் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டு மார்ச்சுவரியில் ஐஸில் இருக்கிறான்'' என்றேன், முன்தினம் நான் படித்த செய்தியின் ஞாபகத்திலிருந்து.

''அது ஆஷிம் இல்லை'' என்றாள்.

''அதுதான் ஆஷிம் என்று பலர் அடையாளம் காட்டினார்கள். நீ ஆஷிமின் வாரிசா?''

அவள் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். மாலை மங்கிக் கொண்டிருந்தது. கீழே அழுக்குப் பச்சைச் சதுரங்கள் மெதுவாக உருண்டு கொண்டிருந்தன. மேற்கே

வெண் புள்ளிகள்

இந்த நோய் சமீப காலத்தில் அதிகமாக காணப்படுகிறது. இதைக் குணப்படுத்த வேண்டிய முயற்சிகள் எந்த வைத்தியத்திலும் சரிவர நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே சித்தவைத்திய மருந்துகள் மூலம் இதைக் குணப்படுத்த முயன்று வருகிறோம். கடந்த இரண்டு வருடமாக அநேகருக்கு மருந்துகள் கொடுத்ததில், வயதில் குறைந்தவர்களுக்கும், நோய் அதிகமில்லாதவர்களுக்கும் விரைவில் பலன் ஏற்படுகிறது. எப்படியும் 2 மாதம் மருந்து சாப்பிட நோய் பரவாமல் தடுக்கலாம். நோயாளிகள் நேரில் சந்திக்க விரும்பினால் எமது பிரதம வைத்தியர் திரு R. சங்கரநாராயணன், B. A. B. L. அவர்களை எமது சென்னைக் கிளையில் பிரதி மாதம் 8, 9, 10 ஆகிய மூன்று நாளும், இதர நாட்கள் பழனியிலும் சந்திக்கலாம். பதில் தேவைக்கு கடிதம் விவரமாக பழனிக்கு எழுதவும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஆனந்தா வைத்தியசாலை

"வெற்றி நிலையம்"

புது தாராபுரம் ரோடு, பழனி
(தமிழ் நாடு)

சென்னைக் கிளை:- 22-A, கச்சேரி ரோடு,
மைலாப்பூர். சென்னை-4.

மாடர்ன் ஆர்ட்டிஸ்ட் தீட்டிய ஆரஞ்சுப் படுதா போல வானம்.

''பசி இல்லையா உனக்கு?'' என்றேன்.

''இல்லை'' என்றாள்.

நான்விமானத்தின் பானர்விளக்குகளைப் போட்டேன். அதன் பிரதிபலிப்பு அவள் முகத்தில் தெரிந்தது.

''எத்தனை மீட்டர்கள்''என்றாள்.

''நீ நிரம்ப அழுக்காக இருக்கிறாய்'' என்று என் பையிலிருந்து கர்ச்சிஃப்எடுத்து அவள் முகத்தைத் துடைத்தேன்.

''தண்ணீர் இருக்கிறதா?'' என்றாள்.

நான் பின்புறத்தில் இருந்த ஃபெல்ட் மூடிய கான்டீனை எடுத்து அவள் வாயில் ஊற்றினேன். அவள் சட்டை நனைந்தது. ''போதும்'' என்றாள்.

''நீ எவ்வளவு நாட்களாகப் பட்டினி, உண்ணாவிரதம்?'' என்றேன்.

''நேற்றிலிருந்து.''

''ஏதாவது சாப்பிடுகிறாயா?''

''நோ'' என்றாள்.

''சிகரெட் பழக்கம் உண்டா?'' என்றேன்.

''இல்லை'' என்றாள்.

''எனக்கு உண்டு.''



மழைத்துளி என்றில்லை; சாதாரணமாக ஏதாவது தூசியோ, அழுக்கோ சிப்பிக்குள் சென்று விட்டால், அதனுடைய மென்மையான உறுப்புகளை அந்தத் தூசி உறுத்தத் தொடங்கும் அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சிப்பி அந்தத் தூசியைச் சுற்றி ஒரு திரவத்தைப் பரப்புகிறது. பல வருடங்களில் அது கெட்டிப்பட்டு முத்தாக மாறுகிறது.

-ப்ரியா

அவள் மௌனமானாள, சற்று நேரம்.

''டில்லிக்கு இன்றிரவே போகிறோமோ?'' என்றாள்.

''ஆம்.''

''என் நண்பர்கள் என்ன ஆனார்கள்?''

''நண்பர்கள்?''

''என்னுடன் கைதானவர்கள்.''

''அவர்கள் உன்னுடன் சிறையில் இல்லை?''

''இல்லை அவர்கள் வேறு எங்கோ கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களைச் சுட்டிருப்பார்கள், இந்நேரம். நான் தப்பித்தேன். நான் ஏன் தப்பித்தேன்?சர்க்கார் அதிகாரி மகள்! எனவே, ஷேம்!'' என்றாள். சற்று நேரம் கழித்து, ''ஜோம்பீஸ்! ப்ராமினென்ட் ஜோம்பீஸ்'' என்றாள். எனக்கு அந்தப் பிரயோகம் பிடிபடவில்லை.

''நிஷா!'' என்றேன்.

''எஸ் டிரைவர்!'' என்றாள்.

''உன்னைப் பற்றிச் சொல்லேன்'' என்றேன்.

''பார்ன் 1952, நாட் ஃப்ரீ எட்'' என்றாள்.

திடீரென்று என்னைப்பார்த்தாள். ''காப்டன்! ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாமா?'' என்றாள்.

''சொல்'' என்றேன்.

''என்னை விடுவித்து விடேன்'' என்றாள்.

''அதற்குப் பதில்?''

''அதற்குப் பதில், அதற்குப் பதில், நான்...''

அவள் அந்த வாக்கியத்தைமுடிப்பதற்குள் நான் சற்றும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி அங்கே நிகழ்ந்தது.

—தொடரும்.

நிறைமணச் செல்வம்

நாசீன்

காபி

Criterion NC 2602 TMB

இந்தத் தொடர்கதை முடிய இருந்து நப்பித்த பத்தாம் அத்தியாயம்

மைக்கேல்

சுஜாதா

அப்பொழுது விமானம் சற்று விநோதமாக நடந்து கொள்ளத் துவங்கியது. [illegible] எனக்கு அதிகப் பழக்கம் [illegible]ாத விமானம். ஒரே சீராகப் [illegible]ய்க் கொண்டிருந்தது திடீ[illegible]ன்று 'கக் கக்' என்று இரும ஆரம்பித்தது. கம்பஸ்சன் சரியில்லை என்றால் சில சமயம் 'பீஸ்' ஆகுமே அது போல. நான் உடனே கொஞ்சம் அதிகமாக திராட்டில் கொடுத்துப் பார்த்தேன். பதில் கிடைத்தது. வேகம் அதிகமாகியது. ஆனால் சற்று நேரம் கழித்து மறுபடி இருமல். கொஞ்சம் அதனால் வேகம் குறைவதால் 'சடக்' என்று தூக்கிப் போட ஆரம்பித்தது. சற்று நேரம் கழித்து மறுபடி தானே சரியாகி விட்டது. ''ட்ரபிள்'' என்றேன். நிஷாவிடம் அல்ல, எனக்கே சொல்லிக் கொண்டேன்.

''ஆர் வி கோயிங் டு க்ராஷ்?'' என்றாள் நிஷா. ''இல்லை'' என்றேன். சற்று நேரம் கழித்து, ''இன்னும் இல்லை'' என்றேன். விமானம் மிக ஒழுங்காக, பஞ்சாகப் போய்க் கொண்டிருந்தது. இது தான் பேஜார். இந்த மாதிரி பழுதுகளில் 'டெவலப்பிங் ஃபால்ட்' என்று சொல்வார்கள். அடுத்த தடவை எப்பொழுது ஏற்படும் என்று காத்திருக்க வேண்டும். சரியாகஓடிக் கொண்டிருக்கிறது, திடீர் என்று புத்திலையக் காட்டுகிறது. எதனால் என்று கண்டு பிடிப்பதற்குள் மறுபடி சரியாகி விட்டால் என்னத்தைச் செய்வது!

இதோ மறுபடி! விமானம் சுத்தமாக அணைந்து விட்டது. என் வயிற்றுக்குள் ஒரு பய சூன்யம் திடீரென்று ஏற்பட்டது. 'க்விக். ஏதாவது செய்' என்று மூளையின் செய்தி கைகளுக்கு எட்டுவதற்குள் சரியாகி விட்டது.

''யூ ஸ்டுப்பிட் இடியட்!'' என்றேன்.

நிஷா என்னை முறைத்தாள்.

''உன்னை இல்லை, விமானத்தை'' என்றேன்.

''பயமா?'' என்றாள்.

''ஆம்'' என்றேன்.

''எனக்குப் பயமில்லை.''

''குறுக்கே கடக்கும் கன்றுக் குட்டிக்கு டிராஃபிக் பயம் கிடையாது'' என்றேன். மறுபடி எல்லா முட்களையும், எல்லா விளக்குகளையும், எல்லா மீட்டர்களையும் கவனித்தேன். மிகச் சீராக, ஆரோக்கியமாகத்தான் இருந்தது.

நான் வெளியே பார்த்தேன். இருட்டு. வெல்வெட் இருட்டு. சுத்தமாக ஒரு நட்சத்திரம் தெரியாத இருட்டு, எந்த நேரமும் விமானம் நின்றுபோகும். எப்பொழுது நிற்கும் என்பது சொல்ல முடியாது. இப்பொழுது நிற்கலாம். அல்லது

பத்து வரி தள்ளி அப்பொழுது நிற்கலாம். இந்த நிலையில் நீர் என்ன செய்வீர்? சொல்லுங்கள், நான் என்ன செய்யவேண்டும்..? விமானம் ஓடிக்கொண்டிருக்கும் போதே அடுத்த தடவை நிற்ப தற்குள் பேசாமல் இறங்கித் தரை தொட்ட பின் என்ன 'ட்ரபிள்' என்று பார்க்க வேண்டும். இந்த இருட்டில் எங்கே இறங்குவது? பக் கத்தில் ஒரு கட்டிப் போட்ட பெண். பொறுப்பில்லாத விமா...

மறுபடி! 'ஜிவ்' என்று கீழே சரிந்தது. மிகப் பிரயத்தனப் பட்டுக் கீழே பாயும் விமானத்தை மாற்றினேன். மறுபடி விர்ர்..உயிர் வந்து விட்டது. சரியாகி விட்டது.

''இறங்கவேண்டும்; இறங்கித் தான் ஆகவேண்டும்'' என்றேன்.

''எங்கே? இந்த இருட்டிலா?''

''மாவ் படித்திருக்கிறுயே, எல்லா விதமான ஆபத்திற்கும் மாவ் வழி சொல்லியிருப்பாரே! இந்த விமா னத்தைச் சரிசெய்ய என்ன சொல் லியிருக்கிறார்?''

''உனக்குப் பயம். அதுதான் உளறுகிறுய்.''

''நான் யோசிக்க வேண்டும்.''

''இன்ஜின் பூரா அணைந்து விட்டால் என்ன ஆகும்?''

''நாளைக்குச் செய்தித் தாளில் ஒரு ஓரத்தில் நாலு வரி செய்தி வரும். இந்தக் கதை இத்தோடு 'முற்றும்' போட்டு விடுவார்கள்.''

ஜம்ஷெட்பூரைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. அலஹாபாதைக் கூப்பிட்டேன். லக்னே, கல்கத்தா எல்லாரையும் ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டேன். அவர்கள் எல்லா ரும் தூங்கிக் கொண்டிருக்க வேண் டும். அல்லது என் ரேடியோ பழுதாகி இருக்கவேண்டும். பதில் கிடைக்கவில்லை.

நல்ல இருட்டு. எங்களைக் கரைத்து விழுங்கக் காத்திருக்கும் இருட்டு...

இப்பொழுது விமானம் அடிக்கடி பாயைப் பிராண்ட ஆரம்பித்தது. உற்சாகமாகப் போய்க் கொண்டே இருக்கும் இன்ஜின் நின்று போய்த் தூக்கிப் போடும். மறுபடி பற்றிக் கொள்ளும்.

நிஷா நான் செய்யும் தகிடுதத் தங்களை ஆர்வத்தோடு தான் பார்த் துக் கொண்டிருந்தாள். பயத் தோடு அல்ல. கவலையோடு அல்ல. எனக்குத்தான் வியர்த்தது. நாக் கெல்லாம் உப்புக் கரித்தது. அல் லது அவள் பயம் அந்த மெலிய வெளிச்சத்தில் எனக்குப் புலப்படா மல் இருக்கலாம்.

''கன் ஐ ஹெல்ப்?'' என்ருள், என் உதவியற்ற நிலையைப்பார்த்து.

> தங்களுக்கு வயதாகி றது என்பதை அறிந்து வேதனைப்படும் பெண்கள் அந்தச் சமயத்தில் தன்னை விட வயதானவர்களுடன் அரட்டை [illegible] வேண் டும். அரட்டை முடிந்த தும் 45 வயதான பெண் மணி தனக்கு 28 வயதைப் போல உணர்வாள்.
>
> —ப்ரியா.

''நோ!'' என்றேன். ஒருவழியாக நின்றுவிட்டாலும் பரவாயில்லை என்று தோன்றியது. தப்பு. ஒருவழி யாக நின்று போனுல் 'கோவிந்தா' தான். இருந்தும் இந்த மாதிரிக் கண்ணைக் கண்ணைக் காட்டிவிட்டுச் செல்லும் தப்பு எனக்கு எரிச்சல் தந்து என்னை எதிலும் கவனம் செலுத்த முடியாமல் செய்தது. பகலாக இருந்தால் பாதகமில்லை. எங்கேயாவது சமதளம் பார்த்து இறங்கிவிடலாம். இரவு. நல்ல இருட்டு. மேகப்போர்வை. எந்தப் பயலும் ரேடியோவில் பதில் சொல்லமாட்டேன் என்கிருன். ஸில்லி!

மெதுவாக த்ராட்டிலை குறைத்துப் பார்த்தேன். அதிகரித்துப் பார்த் தேன். 'மிக்ஸ்சர்' கண்ட்ரோலை 'ரிச்' ஆக்கினேன். 'லீன்' ஆக்கி னேன். ம்ஹூம். எல்லாவற்றுக்கும் 'பெப்பே' என்றது. திடீர் திடீர் என்று பத்தியைக்காட்டிக்கொண்டு தான் இருந்தது. எவ்வளவு நேரம் தாங்கும்! இறங்கித்தான் ஆகவேண் டும். இருட்டிலா? என் ரேடியோ வேறு சரியில்லை. அதனுல் நம் அதிர்ஷ்டத்தின் மேல் நம்பிக்கை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் போக முடியும்?

மறுபடி விமானம் ஞாபகப் படுத்தியது. நின்றது; சரிந்தது; நேர்ப்பட்டது.

''அதிகநேரம் தாங்காது. அடுத்த தடவை பூரா நின்றுவிடும். நிஷா உன் கடைசி ஆசை என்ன?'' என் றேன்.

''இது அமெரிக்க விமானமா?''

''ஆம்'' என்றேன்.

''யாங்கி பாஸ்டர்ட்ஸ்!''

''நல்ல விமானம் இது. ஒரு கம்யூனிஸ்ட்டை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது'' என்றேன்.

''மாவ் பற்றி என்ன சொன்னீர் கள் காப்டன்?''

''எதற்கும் மாட்டுமே துங் மருந் திருக்கிறது என்று உன் போன்றவர் கள் சொல்கிருர்களே! இந்த நிலைக்கு மருந்து இருக்கிறதா?''

''இருக்கிறது. நம்மை அவர் தான் காப்பாற்றப் போகிருர்.''

''எப்படி?''

வெண் புள்ளிகள்

இந்த நோய் சமீப காலத்தில் அதிகமாக காணப்படு கிறது. இதைக் குணப்படுத்த வேண்டிய முயற்சிகள் எந்த வைத்தியத்திலும் சரிவர நடைபெறுமல் இருக்கிறது. ஆகவே சித்தவைத்திய மருந்துகள் மூலம் இதைக் குணப் படுத்த முயன்று வருகிறோம். கடந்த இரண்டு வருடமாக் அநேகருக்கு மருந்துகள் கொடுத்ததில், வயதில் குறைந்த வர்களுக்கும், நோய் அதிகமில்லாதவர்களுக்கும் விரைவில் பலன் ஏற்படுகிறது. எப்படியும் 2 மாதம் மருந்து சாப்பிட நோய் பரவாமல் தடுக்கலாம். நோயாளிகள் நேரில் சந் திக்க விரும்பினுல் எமது பிரதம வைத்தியர் திரு R. சி காநாராயணன், B. A. B. L. அவர்களை எமது சென்னைக் கிளையில் பிரதி மாதம் 8, 9, 10 ஆகிய மூன்று நாளும், இதர நாட்கள் பழனியிலும் சந்திக்கலாம். பதில் தேவைக்கு கடிதம் விவரமாக பழனிக்கு எழுதவும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஆனந்தா வைத்தியசாலை

"வெற்றி நிலையம்"

புது தாராபுரம் ரோடு, பழனி

(தமிழ் நாடு)

சென்னைக் கிளை:- 22-A, கச்சேரி ரோடு,

மைலாப்பூர், சென்னை-4.

''ஸில்லி ஃபூல்! அங்கே பார்'' என்றாள்.

அவள் காட்டிய இடது பக்கத்தில் ஜன்னலுக்கு வெளியேபார்த்தேன்.

என் உள்ளே பிரவாகமாக ஆனந்தம் பாய்ந்தது. ''ய்ய்ய்ய் யிப்பி!'' என்று கத்தினேன். இடது பக்கம் தூரத்தில் ஒரு வெள்ளை விளக்கு பளிச்சிட்டது. சற்று நேரத்தில் ஒரு பச்சை விளக்கு கண் சிமிட்டியது. ஒரு விமான நிலையத்தின் பீக்கன் விளக்கு! பக்கத்தில் மிக மெல்லிய மஞ்சளில் இரட்டையாக ரன்வேயின் விளக்குச் சரம்.

''நிஷா! யூ ஆர் கிரேட்!''

''மாவ்! அவர்தான் க்ரேட்.''

''லாங் லிவ் மா ட்ஸே துங்! நான் உன்னை முத்தமிட அவர் அனுமதிப்பாரா?''

''செருப்பால் அடிப்பார்.''

''எனக்கு இந்த ரன்வேயைக் காட்டினதற்கு உனக்கு ஒரு சீனத்து கொக்கோகோலா! லாங்லிவ்சைனா. அவர்கள் செய்யும் பேனா நன்றாக வேலை செய்கிறது.''

''உங்கள் வர்க்கமே டிஜெனரேட். இறங்குவதற்கு ஆன வேலைகளைப் பார்.''

இனி என்ன! இப்பொழுதே நின்றால்கூடச் சமாளித்துவிடுவேன். மிதந்து இறங்கி விடலாம். இது என்ன விமான நிலையம் என்று தெரியவில்லை...

என் காதிலிருந்து கழற்றியிருந்த ஹெட்ஃபோன் முணுமுணத்தது. மாட்டிக் கொண்டேன்.

''....டிராஃபிக் ஸர்க்யூட். ஸேயுர் கால்ஸைன் அண்ஐடெண்டிஃபை யுர் ஃப்ளைட்.'' என்னைத்தான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். துல்யமாகக் கேட்டது. ரேடியோ கூட இப்பொழுது வேலை செய்கிறது.

நான் பன்னாகரிலிருந்து லக்னோ செல்லும் விமானி. நடுவில் விமானத்தில் கோளாறு ஏற்பட்டதால் அங்கே இறங்க அனுமதி கேட்டேன். அவர்கள் உடனே அனுமதி தந்தார்கள். அது ஒரு விமானப் படையின் விமான நிலையம். பெயர் சொல்லமாட்டேன். சற்றுக் கட்டுப்பாடு ஜாஸ்தி இருக்கும். ஆனால் ஆபத்தில் எந்த விமான நிலையமும் உதவி செய்யத் தயங்கமாட்டார்கள்.

''ராத்திரி இங்கே தங்கப் போகிறாயா?'' என்று கேட்டார்கள் டவரிலிருந்து.

''ஆம்'' என்றேன். ரன்வேயில் தரை தொட்டுப் படிந்ததும் எனக்குத் தெம்பு வந்தது. 'நைட் பார்க்கிங்' ஏரியாவுக்குச் செலுத்தச் சொன்னார்கள். மார்ஷலரை நோக்கிச் செல்லச் சொன்னார்கள். தூரத்தில் இரண்டு டார்ச் வைத்துக்கொண்டு ஒரு ஆள் எனக்கு வரவேற்பு செய்தான்... அவனை நோக்கி ஊர்ந்தபோது நிஷாவிடம் சொன்னேன்: ''நிஷா நான் உன்விலங்கை எடுக்கப்போகிறேன். இது விமானப்படை நிலையம். நான் வேலை கவனத்தில் இருக்கும் போது எங்கேயாவது ஓடிப்போக முட்டாள்தனமாக முயற்சிக்காதே. எனக்கும் நன்றாக ஓடவரும். 100 மீட்டர் 11 செகண்டில் ஓடுவேன். மேலும் இது பூரா காவல் காக்கப்பட்ட விமான நிலையம். அதிகாரிகளிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும். துருவித் தீர்த்து உன்னைப் பொறுக்கிக் கொண்டு வந்து விடுவார்கள். அதிக தூரம் ஓட முடியாது.''

''பார்க்கலாம்'' என்றாள்.

''அப்படியானால் நீ தப்பிக்க முயற்சிப்பாயா?''

''எனக்கு மூளை கிடையாதா? இவ்வளவு நேரம் ஒரே மாதிரிக் கட்டிப்போடப்பட்டு உட்கார்ந்திருந்த பின் எனக்கு இருக்கிற உடற் களைப்பில் என்னால் நடக்க முடிவதே சந்தேகம். ஓடவா போகிறேன்?''

''இருந்தும் முயற்சிக்காதே!''

விமானத்தை அணைத்த பின் நான் நிஷாவின் விலங்குப் பூட்டை விடுவித்தேன். அவள் கால் கட்டை அவிழ்த்தேன். அவள் துடை பெல்ட்டை விலக்கினேன். விமானப் படையைச் சேர்ந்த கார்ப்ரல் ஒருவர் என்னிடம் நேராக வந்தார். ''நீங்கள் நேராகச் சென்று ட்யூட்டி வாரண்ட் ஆபீசரைப் பார்த்து விடுங்கள்'' என்றார். நிஷா, ''நீ தான் என்னைத் தூக்க வேண்டும்'' என்றாள். ''எழுந்திருக்க முடியவில்லை''



தான் காணும் பொருளின் அளவைப் பெரிதாக்கிக் காட்டும் தன்மை யானைகளின் கண்களுக்கு உண்டு. புலியையோ, மனிதனையோ பார்க்கும்போது அந்த உண்மையான உருவத்தை விடப் பெரிதாக யானைக்குத் தெரியும்.

யானைகளுக்குப் பிடிக்காத நிறம்— வெள்ளை.

என்றாள். நான் இறங்கி அந்தப் பக்கம் சென்று கதவைத் திறந்து அவளை அப்படியே மார்போடு அணைத்து வெளியே கொண்டு வர வேண்டியிருந்தது. அவள் வெளியே தொய்ந்தாள். என்னைப் பிடித்துக் கொண்டு கால்களை உதறிக் கொண்டாள். கைகளை உதறிக் கொண்டாள். இடுப்பைப் பிடித்துக் கொண்டு பின் பக்கம் சாய்ந்தாள்; நொண்டி நொண்டி நடந்தாள்.

அவளையும் கார்ப்ரலையும் முன்னால் போகவிட்டு விட்டு நான் சற்றுப் பின்னால் நடந்தேன். தூரத்திலிருந்த ஸர்ச் லைட்டின் வெளிச்சத்தில் எங்கள் மூவரின் நிழல்களும் நீண்டு எங்களுடன் வர, கார்ப்ரல் நிஷாவிடம் சிநேகிதம் தேட அவளை ஏதோ கேட்டுக் கொண்டே நடந்தான்.

நிஷா தலை ஆட்டங்களிலேயே பதில் கொடுத்து வந்தாள்.

வாரண்ட் ஆபீசரின் அறைக்குச் சென்று நான் என் பையிலிருந்த ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து, ''நான் டில்லிக்கு டெலிபோன் செய்ய வேண்டும். மிக அவசரம்'' என்றேன். நிஷாவை உட்காரச் சொன்னேன். அவளை என் பார்வையிலிருந்து விலக்காமல் பேசவேண்டியிருந்தது. அவர்களிடம் அவள் யார் என்று சொல்லக்கூடாது.

டில்லியில் ''இன் கேஸ் ஆஃப் ட்ரபிள்'' என்று சொல்லிக் கொடுக்கப்பட்ட டெலிபோன் நம்பரை நான் கூப்பிட விரும்பினேன். அவர்களிடம், ''ட்ரங்க் காலுக்கு ஆகும் கட்டணத்தைக் கொடுக்கிறேன். மிக அவசரம். எனக்காக சர்க்கார் அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். எல்லாம் டாப் சீக்ரெட்'' என்று எத்தனையோ வாதாடின பின் என்னைப் பேச அனுமதித்தார்கள்.

''ஹலோ!''

''ஐம் காப்டன் ஜேகே. அங்கே யார் பேசுவது?''

''காப்டன்! எங்கே அவள்? வந்து விட்டீர்களா?''

''இல்லை. விமானம் பழுதாகி விட்டது. நடுவில் ஒரு விமானப் படை விமான நிலையத்தில் எமர்ஜன்ஸிக்காக இறங்கி இருக்கிறேன். காலை என்ன ஃபால்ட் என்று கண்டுபிடித்து நாளைக் காலைதான் டில்லி வரமுடியும்!''

''அவள்! நிஷா! எப்படி இருக்கிறாள்?''

''ஷி இஸ் ஓகே!''

''அவள் தப்பி விடுவாள். மிக ஜாக்கிரதையாக இருங்கள்!''

''கவலைப்படாதீர்கள்! நாளைக் காலை கிளம்புமுன் போன் செய்கிறேன்.'' வைத்து விட்டேன்.

''தாங்க் யூ ஆபீசர்'' என்று ஆபீசரைப் பார்த்துச் சிரித்துவிட்டு, ''வா நிஷா'' என்று திரும்பினால்—

நிஷா இல்லை.

—தொடரும்

ஜேகே

ஜேகே அந்த விமான நிலையத்தில் இரவைக் கழிக்கும் பதினோராம் அத்தியாயம்

இந்தக் கதையை மேலே தொடர்வதற்கு முன் எனக்கு வரும் விதவிதமான கடிதங்களில் இரண்டு உதாரணங்கள் தருகிறேன். உலகத்தில் உள்ள எத்தனையோ சின்னச் சின்ன சந்தோஷங்களில் பிறர் கடிதங்களைப் படிப்பதும் ஒன்றல்லவா!

முதல் கடிதம் சைதாப்பேட்டையிலிருந்து ஒரு கணவன்-மனைவி தம் குழந்தைக்கு அரவிந்தன் அல்லது ஷயாம்சுந்தர் என்று பெயர் வைப்பது பற்றி என் அபிப்ராயத்தைக் கேட்பதற்கு முன், ''எத்தனையோ விஷயங்களில் சண்டை போட்டுக் கொள்ளும் நாங்கள், தங்களின் கதையைப் படிப்பதிலும் விமரிசிப்பதிலும் ஒற்றுமை'' என்கிறார்கள். என் பதில்: ''வந்தனம், அரவிந்தன்.''

மற்றொரு கடிதம் வத்தலகுண்டு டெலிபோன் எக்ஸ்சேஞ்சிலிருந்து ஒரு சினேகம் நிரம்பிய 'ஹல்லோ'. ப்ரொப்பெல்லர் விமானத்தில் ஆட்டோ பைலட் வசதி இருக்குமா என்று சந்தேகித்திருக்கிறார் இவர். பதில்: இருக்கும். இருக்கிறது.

சுஜாதா

சற்று கவனக் குறைவாக இருந்த போது காணாமற் போய் விட்டாளா என்ன? அந்த அறையைவிட்டு விருட் என்று வெளி வந்தேன். வந்த இடம் ஒரு மாதிரியான அரைவட்ட ஹால் என்று சொல்லலாம். நாற்காலி, மேஜை போட்டுச் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். சுவர் எங்கும் சர்க்குலர்கள். நோடிஸ் டு ஏர்மன்ஹெட் குவாட்டர்ஸ் சிக்னல்ஸ். விமானம் ஓட்டுவதன் பத்திரத்தைப் பற்றிய வாக்கியங்கள் தொங்கின, விமானப் படை ஆசாமிகள் இரண்டு மூன்று பேர் அலைந்துகொண்டிருந்தார்கள். அவளைக் காணவில்லை. அங்கு இருந்த வாரண்ட் ஆபிசரின் அருகில் ஒழுங்காக அடுக்கியிருந்த துப்பாக்கி வரிசை என் கண்ணில் பட்டது. 'எடுத்துக்கொள்' என்றுவரவேற்கும் வரிசை. திடீரென்று என்னுள் பயம் ஏற்பட்டது. சற்று அலட்சியமாக இருந்து விட்டேன். என்ன செய்யப் போகிறேன்? ''நிஷா!'' என்று சற்று உரக்கவே கூப்பிட்டுப் பார்த்தேன். ஒரு ஃப்ளைட் லெஃப்டினண்ட் திரும்பிப் பார்த்தார். அந்த ராணுவச்சூழ்நிலையில், அந்தஇரவில், ஒரு பெண் பெயர் உறுத்தி இருக்க வேண்டும்.

அவர் என் அருகில் வந்தார். ''வாட்டு யு வாண்ட்?'' என்றார்.

''ஒரு பெண்! என்னுடன் வந்தாள். அவளைக் காணவில்லை.''

''அவள்அந்தப்பக்கம் சென்றாள்'' என்று வெளியே கண்ணாடிக்கதவை காட்டினார். ''டாய்லெட் எதுஎன்று கேட்டாள். அங்கே பெண்களுக்குத் தனி இடம் கிடையாது என்றேன்'' என்றார். நான் அந்தக் கதவை நோக்கி ஒரு கைப்பிடியைத் திருகித் திறந்ததும் நிஷாவின் மேல் மோதிக் கொண்டேன்.

''ஈஸி'' என்றாள்.

''நிஷா! ஓ தேர் யு ஆர்! எங்கே போயிருந்தாய்?''

''சொல்லித்தான் ஆக வேண்டுமா? நான் இன்னும் தப்பிக்க...''

''சரி! சரி! நான் விமானப்படை முழுவதையும் உனக்குப் பின் அனுப்ப யோசித்திருந்தேன்! என்னுடன் இருக்க வேண்டும். என்னை விட்டு விலகக்கூடாது தெரியுமா!''

''நான் தப்பித்து ஓடிவிட்டேன் என்றுதானே நினைத்தாய்.''

''ஆம்.''

''அதற்கு இன்னும் சமயம் வரவில்லை.''

''சமயம் இனி வராது! மேலும், இந்த இடத்தில் நீ தப்பிக்க முடியாது! பூரா மிலிட்டரி! சூழ்ந்து கொள்வார்கள். கைதி என்று அவர்களுக்குத் தெரியாது. உன் கை விலங்கை விடுவித்ததற்கு நன்றியுடன் இரு. சொன்னால் ராத்திரி பூராஉன்னைஅடைத்து வைப்பதற்கு டப்பாக்கள்இருக்கின்றன இங்கே.''

''இந்த இடத்தின் பெயர் என்ன?'' என்றாள். சொன்னேன்.

''மிலிட்டரி விமான நிலையம்.''

''ஆம்.''

''நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மறுபடி இங்கு வரப் போகிறேன்'' என்றாள்; ''எப்பொழுது டில்லி போகப் போகிறோம்?''

''நாளைக் காலை'' என்றேன்.

''ராத்திரிக்கு?''

''இங்கேதான் தங்கவேண்டும்.''

''காப்டன் ஜேகே'' என்று வாரண்ட் ஆபிசர் என்னைக் கூப்பிட்டார். ''என்னுடன் வா'' என்று அவளையும் இழுத்துக் கொண்டு சென்றேன்.

அவர் கையில் ஒரு டெலிபிரிண்ட்டர் செய்தி இருந்தது. அதன் வாசகங்கள் என் கண்ணில் பட்டன.

''அன்கிளாஸிஃபைட். மேரா விடமிருந்து க்ரூப் காப்டன் தாமஸுக்கு: காப்டன் ஜேகே க்கும் பிரயாணிக்கும் எல்லா வசதிகளும் ஏற்படுத்தவும்.''

''உங்களுக்கு மெஸ்ஸிலிருந்து சாப்பாடு வந்திருக்கிறது. இரவு தங்குவதற்கு ரெஸ்ட் ரூமில் ஏற்பாடு ஆகி இருக்கிறது. உங்கள் லக்கேஜ் எங்கே?'' என்றார்.

''அவள் ஒருத்திதான்'' என்றேன்.

''நாளைக் காலை உங்களுக்கு உதவி செய்வதற்கு இரண்டு மெக்கானிக்குகளை அனுப்புகிறேன். பெட்ரோல் நிரப்பவும் வசதி செய்கிறேன்.''

''மற்றென்றும் செய்யுங்கள். டில்லிக்குக் காலை ஒன்பதுமணி சுமாருக்கு ஈ..ட்டி.டி போட்டுக் கிளியரன்ஸ் வாங்கி வையுங்கள்.''

''நோ ப்ராப்ளம்'' என்றார்.

''கம் நிஷா'' என்றேன். சாப்பிட்டோம். ஒரு எல்.ஏ.ஸி. எங்களுக்கு வழி காட்ட, நாங்கள் இருட்டில் நடந்தோம்.

''உன் அப்பா மிகவும் செல்வாக்குள்ள ஆசாமி. உடனே கமாண்டிங் ஆபீசருக்கு சிக்னல் வந்துவிட்டதே!'' என்றேன். அவள் பேசவில்லை. நல்ல இருட்டு.

நிஷாவின் புஜத்தைப் பிடித்து இழுத்துச் சென்றேன். தவளைகள் திருகித் திருகிக் கத்திக் கொண்டிருந்தன. ஒரு நட்சத்திரம் தென்படவில்லை. தூரத்தில் ஓநாய்கள் கைக் குழந்தைகள் போல ஓலம் இட்டுக் கொண்டிருந்தன.

தனியாகப் பார்க்கப் போலிருந்த ஒரு கட்டடத்திற்கு அழைத்துச் சென்று மூலையில் இருந்த அறையின் பூட்டைத் திறந்து விளக்குப் போட்டான். உள்ளே சுத்தமாக இருந்தது. கொசுவலை மாட்டிய கட்டில் ஒன்று இருந்தது. தம்ளர் தொப்பி போட்ட ஒரு மண் கூஜா, சுவரில் இந்திரா காந்தியின் படம். நிஷா சற்று

நேரம் அப்படத்தை வெறித்துப் பார்த்தாள்.

கூட வந்தவன், ''பாத்ரூம் இங்கே இருக்கிறது'' என்று திறந்து காட்டினான்.

அவன் தலைமேல் சில பூச்சிகள் எலெக்ட்ரான்கள் போலச் சுற்றின.

ஃபான் ஓடுகிறதா என்று கவலையுடன் போட்டு, ஓடுவதைப் பார்த்ததும் அவன் முகம் சற்று மலர்ந்தது. (மலையாளத்து ஆசாமி)

''எனிதிங் ஸார்?'' என்றான்.

''ஏன் கட்டில் கால்களுக்கு அடியில் தண்ணீர் டப்பா வைத்திருக்கிறது?'' என்று கேட்டேன்.

''பாம்பு அதிகம்'' என்றான்.

நிஷா, அசுவாரசியமாக நின்று கொண்டிருந்தாள்.

''ஆபீஸர்ஸ் மெஸ் திறந்திருக்குமா?'' என்று கேட்டேன்.

அவன் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''ஸாரி ஸார்'' என்றான்.

''மற்றொரு கட்டில் வேண்டுமே'' என்றேன்.

''ஸாரி ஸார்'' என்றான்.

''அந்தப் பூட்டைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்'' என்றேன். கொடுத்தான், சாவியுடன்.

''காலை என்னை எழுப்ப வேண்டும்'' என்றேன்.

''சரி'' என்று சொல்லி விட்டு விறைப்பாக சல்யூட் அடித்துச் சென்றான்.

நான் கதவைத் தாளிட்டு உள் பக்கம் இருந்த கொக்கிகளுக்குள் பூட்டை மாட்டிப் பூட்டிக் கொண்டேன்.

நிஷா கொசு வலையை விலக்கினாள். படுக்கை சுத்தமாக இருந்தது. ஒரு தலையணை எடுத்துக் கொண்டாள்.

கீழே போட்டாள். ''நான் தரையில் படுத்துக் கொள்கிறேன்'' என்றாள்.

''வேண்டாம், நீ கட்டிலில் படுத்துக் கொள்ளலாம்'' என்றேன்.

அவள், ''சென்ற பதினைந்து தினங்களாகத் தரையில் படுத்துப் பழக்கமாகி விட்டது. மெத்தையில் படுத்துக் கொள்வதற்கு இன்னும் நேரம் வரவில்லை'' என்றாள்.

நிஷா, தரையில் உட்கார்ந்து, தன் காலை ஆராய்ந்தாள்.

''காலில் என்ன?'' என்றேன்.

''முள்'' என்றாள்.''

''நான் பார்க்கவா?'' என்றேன்.

''வேண்டாம்'' என்றாள். அவள் கால் சிவந்துதான் இருந்தது.

நான் கட்டிலில் உட்கார்ந்தேன். என் ஜாக்கெட்டைக் கழற்றினேன். என் சட்டையைக் கழற்றினேன். ஷூவைக் கழற்றினேன். அசதியும் அதிகமிருந்தது. சாவியைப் படுக்கையில் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தேன்.

''நிறைய இடம் இருக்கிறது. நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். ஐ பிராமிஸ். வா!'' என்றேன்.

''நோ'' என்றாள் சிக்கனமாக. எனக்கு மெத்தையில் படுப்பது குற்ற உணர்ச்சி தந்தது. அவள் இன்னும் தன் காலை ஆராய்ந்து கொண்டிருந்தாள். சின்னப்பெண்! இவளை எந்த வேகம், எந்த ஆவேசம் உந்துகிறது? இவளுக்கும் எனக்கும் நிறைய தூரம் இருப்பதாக எனக்குப் பட்டது. பேச மாட்டாள். இவளிடம் ஒரு பிடிவாதம். ஒரு மறைமுகமான குறிக்கோள் இருக்கிறது. அது சமயம் வரும் போது தப்பிப்பதா? நான் சாவியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். தூக்கம் என் கண்களைக் கெஞ்சியது. ''போர்வை வேண்டுமா?'' என்று கேட்டு வைத்தேன்.

''வேண்டாம்'' என்றாள். அரைத் தூக்கத்தில் அவளைப் பார்த்தேன். ஜ்யோவின் ஞாபகம் வந்தது. ஒரு கம்யூனிஸ்ட் பெண்ணுடன் படுக்கையில் போராடினால் சுவாரசியமாக இருக்கும் என்று திடீரென்று

தோன்றிய எண்ணத்தைச் சிரமத்துடன் தள்ளி வைத்தேன். ''நிஷா! நீ படுத்துக் கொள்ளும்போது விளக்கைஅணைத்துவிடு'' என்றேன். அவள், ''ம்'' என்றாள். பாத்ரூமில் வெளியே செல்ல வழி கிடையாது. ஒரே கதவைத் தாளிட்டுப் பூட்டி, சாவி பத்திரமாக வைத்திருக்கிறேன். ஜன்னல்கள் சிறியவை. கம்பி போட்டவை. கவலை வேண்டாம்...

நான் கண்ணை மூடினேன். தூக்கம் எங்கோ கொண்டு சென்றது.

எப்போதோ சடக்கென்று கண் விழித்தேன். நிஷா இன்னும் உட்கார்ந்திருந்தாள். விளக்கு அணைக்கப்படவில்லை. நிஷா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நிஷா'' என்றேன்.

அவள் திரும்பினாள்.

''நீ இன்னும் தூங்கவில்லையா?''

''ஓ எஸ்'' என்று அப்படியே மல்லாந்து படுத்தாள் அவள்.



சட்டை உயர்ந்திருந்தது. வயிறு தெரிந்தது.

நான் எழுந்து சென்று தண்ணீர் குடித்தேன்.

''தண்ணீர் வேண்டுமா?''

''ஆம்.''

தண்ணீர் கொடுத்து அவள் அருகில் உட்கார்ந்தேன். அவள் எதிரே பார்த்துக் கொண்டே குடித்தாள். என்னிடம் தம்ளரைக் கொடுத்து, ''தாங்க்ஸ்'' என்றாள்.

''கால் எப்படி இருக்கிறது?'' என்றேன். அவள் பாதத்துக் காயத்தைப் பார்த்தேன். அவள் பாதம் மிகவும் சேதமாக இருந்தது. ''நாளைக்கு எம். ஐ. ரூமுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். வேறு எங்கே காயம்?'' என்றேன்.

''வாட் டு யூ வாண்ட்?'' என்றாள்.

''பார்டன்?'' என்றேன்.

''நீ வேண்டுவது என் உடல் தானே?''

''சே!''

''தெரியும். என் உடலைத் தொடத் தான் நீ முஸ்தீபு செய்கிறாய். உங்கள் ஜாதியை எனக்கு நன்றாகத் தெரியும். பணம், அடல்ட்டரி.... நீ கல்யாணமானவன் தானே?''

''இல்லை.''

''உனக்கு என்ன வேண்டும்? ஒரு இலவச டிக்கெட். ஒரு பெண் இருக்கிறாள். எதிரே இருக்கிறாள். சுமாராக இருக்கிறாள். சுலபம். சப்தம் போட மாட்டாள். திமிறினால் சமாளிக்கலாம். திமிறினால் அதில் இன்னும் ஆனந்தம் அதிகம் அல்லவா? கமான் காப்டன். உண்மையைச் சொல். உன்முறை எனக்குத் தெரியும். முதலில் காலில் முள் பார்ப்பாய். அப்புறம் வேறு எங்கே முள் எடுத்து விடுகிறாய், சொல். கமான். என்னைத் தொடு. என் சட்டையைக் கழற்று. என் உடம்பெங்கும் பரவு. உன் சமுதாயத்தில் பெண் ஒரு ரசனைப் பொருள். சீப்பர் தேன் ஏர் கண்டிஷனிங்! வா. என்னை வர்ணி. என் மார்பைத் தொட்டு அதன் மென்மைக்குக் கவிதைகளைக் கூப்பிடு. என் இடுப்புக்காக ஆயிரம் போர் செய்யலாம் என்று சொல். என்னுடன் காதல் என்று சொல். அந்தக் கடைசி உற்சாகத்துக்கு எத்தனை உயரம் என்னை அழைத்துப் போவாய், சொல். நாங்கள் எதற்கு இருக்கிறோம்? உங்களுக்குக் களைப்பாக இருக்கும்போது உங்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்குத் தானே! பக்கத்தில் அலங்காரம் செய்து, இடுப்பைக் காட்டி, மார்பைக் காட்டி, நடனமாடி, சிறிய சிறிய அறைகளில் 'கஜல்' பாடி, ஆயிரம் நகைகள் அணிந்து சிரித்துப் படுத்துத் துடித்து இனவிருத்திக்குத்தானே இருக்கிறோம். மெஷின்களைக் கையாண்டுவிட்டு வீட்டுக்கு

ஈயும் இமுகியும்

''ஜ''

பிரபல பீட்டில் பாடகர்களில் ஒருவரான ஜான் லென்னனின் மனைவியான யோகோ ஓனோ டாக்குமென்டரிப் படங்களை எடுப்பதில் வல்லவர். (ஆனால் அவை சற்று 'ஏ'ரகம் தான்)

அவர் எடுத்த படங்களில் ஒன்று 'பாட்டம்' (நிர்வாணப் பின் பக்கங்களை மட்டுமே காட்டிய படம்) மற்றொன்று புன்னகை. தொண்ணூறு நிமிட்ப் படத்தில் ஜான் லென்னனின் புன்னகை மட்டும் தான் இருந்தது.

இப்போது இவர் 19-நிமிடப் படம் ஒன்றை எடுத்திருக்கிறார். பெயர்: ஈ. ஆடை யின்றிப் படுத்திருக்கும் பெண்ணின் உடம்பில் மேலும் கீழுமாக ஒரு ஈ போய்வருவதுதான் படத்தில் காட்டப்படுகிறது. இதில் நடிக்கப் பெண்கள் நிறையப் பேர் வந்தாலும் ஈ மெதுவாக நடக்கும் போது உடம்பை சிலிர்த்துக்கொண்டவர்களை யெல்லாம் நீக்கி விட்டார் திருமதி ஓனோ. ஒரு பெண்ணைக் கடைசியில் தேர்ந்தெடுத்தார்.

அடுத்த பிரச்னை ஈ! 25 சென்ட் வீதம் சுமார் 200 ஈக்களை வர வழைத்தார். சொன்னபடி ஈக்கள் நடிக்க மறுக்கவே, சில ஈ நடிகர்களை லேசாக மயக்க வாயுவை முகரச் செய்து பெண்ணின் உடலில் வைத்துப் படம் எடுத்தார். படம் முழுதும் பின்னணி: ஓனோவே செய்த 'ஹம்'. லென்னன் கிட்டாரில் போட்ட தாளத்தை டேப் ரிகார்டரில் பதிவு செய்து அதை 'ரிவர்ஸில்' போட்டுப் படத்திற்கு ரிகார்டு செய்திருக்கிறார்.

படம் நன்றாக அமைந்து விட்டதாக ஓனோ பெருமைப் படுகிறார்!

பின் குறிப்பு: இந்தப்படத்தில் நிர்வாணமாக நடிக்கும் பெண்ணின் பெயர்: மிஸ் லஸ்ட்

வரும் உங்களுக்கு ஒரு மெத்தை தானே நாங்கள்! வா ஆன் மிருகமே! வா!'' என்றாள்.

''நிஷா, என்னைத் தப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறாய் நீ. என் மனதில் உன்னை பற்றிய கவலை தான். உன்மேல் வேறு ஏதும் நோக்கமில்லை. உன் அப்பாவை நான் சந்தித்தேன் அவருக்காக பரிதாபப் பட்டேன். அவரிடம் உன்னைச் சேர்த்ததும் நான் விலகுகிறேன். அத்தனை பெரிய பேச்சு விரயமான பேச்சு. படுத்துக்கொள். நான் உன்னைத் தொடமாட்டேன். மேலும் தொடுவதற்கு எனக்கு நினைவு...''

இவளிடம் ஏன் சொல்ல வேண்டும்? மறுபடி லெக்சர் அடிப்பாள். 'கோ டு ஹெல்' என்றுசொல்லிஎழுந்துவந்து படுத்துவிட்டேன். சற்று சற்று நேரத்தில் விளக்கை அணைத்தாள். சற்று நேரத்தில் நான் தூங்கி விட்டேன்.

காலை அவள்தான் என்னைத் தட்டி எழுப்பினாள். ''எழுந்திரு'' என்றாள். நான் அவள் முகத்தில் விழித்தேன். தலையைச் சற்று ஒழுங்கு பண்ணி இருந்தாள். முகத்தை அலம்பி இருந்தாள். ''குட் மார்னிங்'' என்றாள் சிரிப்புடன்.

எதற்குச் சிரிக்கிறாள்?

''குட் மார்னிங்'' என்று தலையணைக்கடியில் சாவியைத் தேடினேன்.

''சாவியா! என்னிடம் இருக்கிறது'' என்று என் மேல் எறிந்தாள். நான் ஆச்சரியத்துடன் பிடித்தேன்.

''சாவியைத் திருடினாயா?''

''எடுத்துக்கொண்டேன், நீ குறட்டைவிட்டுத் தூங்கிய தூக்கத்தில், உன் சட்டை பாண்ட்டைக் கூடக் கழற்றி இருக்கலாம்.''

நான் சற்று அவமானத்துடன், ''தப்பிக்காமல் இருந்ததற்கு தாங்க்ஸ்'' என்றேன்.

எங்களுக்காகக் காலை டீ வந்தது. அப்புறம் ஆம்லெட், கார்ன்பிளேக் எல்லாம் வந்தது....

அவளை இட்டுக் கொண்டு விமானத்தின் பக்கம் சென்றேன். எனக்காகஇரண்டுமெக்கானிக்குகள் காத்திருந்தார்கள். ஜெட் விமானங்கள் பயிற்சிக்காகச் சீறிக் கொண்டிருந்தன. எங்கும் கெரோஸின் வாசனை விரவியிருந்தது.

நான் விமானத்தைக் கவனிக்க ஆரம்பித்தேன். ''நிஷா வேடிக்கை பார்த்துக் கொண்டு இரு. எங்கும் போய் விடாதே'' என்றேன்.

''சாவி ஞாபகமில்லையா?'' என்று கேட்டாள்.

அந்த மெக்கானிக்குகளின் உதவி கொண்டு விமானத்தின் முன் பக்கத்து இன்ஜினின் கௌலிங்குகளைத் திறந்த உடனே எனக்குத் தலைகால் புரியவில்லை. முற்றிலும் பழக்கமில்

லாத புதிய விமானம். இதில் எப்படி நான் ரிப்பேர் பார்க்கப் போகிறேன்.

''கார்ப்பரல்! உனக்கு ஸென்ஞ விமானம் பழக்க முண்டா?''

''நோ ஸார். நான் 'வாம்பெயர்' ஆசாமி'' என்ருர்.

என்ன செய்வது என்று புரியாமல் கேபின்களையும் பலவிதமான வால்வுகளையும் மானிஃபோல்ட்களையும் தொட்டுக் கொண்டே வந்தேன். கண்ணில்லாதவன் 'ப்ரெய்ல்' படிப்பது போல. என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு கேபிள் லூஸாக இருந்தது. இன்ஜினின் உள் பாகத்துக்குச் செல்லும் இடத்தில் ஒரு அடாப்டர் போட்டு இணைத்திருந்த கேபிள். அடாப்டரின் சிலமறைகள் லூஸாகி இருந்தன. ஆட்டிப் பார்த்தால், லேசாக ஆடியது. கழற்றிப் பார்த்தேன். எலக்ட்ரிக்கல் ஜெனரேஷன் சிஸ்டத்தில் ஒரு கேபிள்தான் அது. அதை மறுபடி பொருத்தி விட்டு, அடாப்டரை இறுக்க மூடிவிட்டு ஸ்பானரால் இறுக்கினேன். இன்ஜினைக் கிளப்பி ஒரு அரை மணி ஓட விட்டுப் பார்த்தேன். சீராக ஓடியது!



கேள்வி: தலையில் முன் பக்கம் இரண்டு கண்கள் இருப்பதுபோல, பின் பக்கமும் இரண்டு கண்கள் இருந்தால் எப்படி இருக்கும்?

பதில்: படத்தையும், படம் பார்க்க வந்தோரையும் ஒரே நேரத்தில் பார்க்கலாம்!

அணைத்து விட்டு, ''ஃபால்ட் கிளியராகி விட்டது. நிஷா!'' என்று கூப்பிட்டேன். அவள் என்னை நோக்கி வர, அந்தக் கார்ப்பரல் என்னை ஒரு ஜால வித்தை செய்தவன் போல மரியாதையுடன் பார்க்க, ''சரியாகி விட்டது'' என்றேன்....

நான் எதிர்பார்த்த ஒன்பது மணிக்கு ஒரு மணி முன்னுலேயே நாங்கள் அந்த விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டு விட்டோம். பக்கத்தில் நிஷா உட்கார்ந்திருந்தாள். விலங்கு மாட்டவில்லை. கட்டவில்லை. எனக்கு அவளிடம் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. நேராக டில்லிக்கே செல்வதற்கு பெட்ரோல் நிரப்பி இருந்தேன். விமானம் சீராகப் போய்க் கொண்டிருந்தது. நிஷா தான் பேசவே இல்லை. ஒற்றை வார்த்தை பதில்கள்தான்.

டில்லிக்கு ஒரு மணி முன்னதாகக் கிளம்பியதால், பிற்பாடு ஏற்படப் போகும் மகத்தான சிக்கல்கள் எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

—தொடரும்.



இந்த சிறு தொகை
நாளைய பெரு மூலதனம்
தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்கின்
ரேக்கரிங் டெபாஸிட்டுகளில்
12, 24, 36, 48, 60 மற்றும்
74 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
குறைந்த பட்ச டெபாஸிட் ரூ. 1/-
இன்றே இத்திட்டத்தில் சேருங்கள்.

1-7-71 முதல்

மாதாந்திர டிபாசிட்	காலவரை முடியும் தருவாயில் கொடுக்கப்படும் பணம்					
மாதங்கள்	12 ரூ. பை	24 ரூ. பை	36 ரூ. பை	48 ரூ. பை	60 ரூ. பை	74 ரூ. பை
ரூ. 1-/	12-45	25-80	40-10	56-00	72-60	93-25
ரூ. 2-/	24-90	51-60	80-20	112-00	145-20	186-50
ரூ. 5/-	62-25	129-00	200-50	280-00	363-00	466-25
ரூ. 50/-	622-50	1290/-	2005/-	2800/-	3630-00	4662-50
ரூ. 100/-	1245/-	2580/-	4010/-	5600/-	7260/-	9325

THE TANJORE PERMANENT BANK LTD. ESTD. 1901

தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்க் லிமிடெட்,
பதிவு அலுவலகம்: 1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்
D. லெக்ஷ்மிநாராயண்—சேர்மன்
B. K. மாதவன் —செக்ரட்டரி

VSK-TPB-8

சட்டை உயர்ந்திருந்தது. வயிறு தெரிந்தது.

நான் எழுந்து சென்று தண்ணீர் குடித்தேன்.

''தண்ணீர் வேண்டுமா?''

''ஆம்.''

தண்ணீர் கொடுத்து அவள் அருகில் உட்கார்ந்தேன். அவள் எதிரே பார்த்துக் கொண்டே குடித்தாள். என்னிடம் தம்ளரைக் கொடுத்து, ''தாங்க்ஸ்'' என்றாள்.

''கால் எப்படி இருக்கிறது?'' என்றேன். அவள் பாதத்துக் காயத்தைப் பார்த்தேன். அவள் பாதம் மிகவும் சேதமாக இருந்தது. ''நாளைக்கு எம். ஐ. ரூமுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். வேறு எங்கே காயம்?'' என்றேன்.

''வாட் டு யூ வாண்ட்?'' என்றாள்.

''பார்டன்?'' என்றேன்.

''நீ வேண்டுவது என் உடல் தானே?''

''சே!''

''தெரியும். என் உடலைத் தொடத் தான் நீ முஸ்தீபு செய்கிறாய். உங்கள் ஜாதியை எனக்கு நன்றாகத் தெரியும். பணம், அடல்ட்டரி.... நீ கல்யாணமானவன் தானே?''

''இல்லை.''

''உனக்கு என்ன வேண்டும்? ஒரு இலவச டிக்கெட். ஒரு பெண் இருக்கிறாள். எதிரே இருக்கிறாள். சுமாராக இருக்கிறாள். சுலபம். சப்தம் போட மாட்டாள். திமிறினால் சமாளிக்கலாம். திமிறினால் அதில் இன்னும் ஆனந்தம் அதிகம் அல்லவா? கமான் காப்டன். உண்மையைச் சொல். உன்முறை எனக்குத் தெரியும். முதலில் காலில் முள் பார்ப்பாய். அப்புறம் வேறு எங்கே முள் எடுத்து விடுகிறாய், சொல். கமான். என்னைத் தொடு. என் சட்டையைக் கழற்று. என் உடம்பெங்கும் பரவு. உன் சமுதாயத்தில் பெண் ஒரு ரசனைப் பொருள். சீப்பர் தேன் ஏர் கண்டிஷனிங்! வா. என்னை வர்ணி. என் மார்பைத் தொட்டு அதன் மென்மைக்குக் கவிதைகளைக் கூப்பிடு. என் இடுப்புக்காக ஆயிரம் போர் செய்யலாம் என்று சொல். என்னுடன் காதல் என்று சொல். அந்தக் கடைசி உற்சாகத்துக்கு எத்தனை உயரம் என்னை அழைத்துப் போவாய், சொல். நாங்கள் எதற்கு இருக்கிறோம்? உங்களுக்குக் களைப்பாக இருக்கும்போது உங்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்குத் தானே! பக்கத்தில் அலங்காரம் செய்து, இடுப்பைக் காட்டி, மார்பைக் காட்டி, நடனமாடி, சிறிய சிறிய அறைகளில் 'கஜல்' பாடி, ஆயிரம் நகைகள் அணிந்து சிரித்துப் படுத்துத் துடித்து இனவிருத்திக்குத்தானே இருக்கிறோம். மெஷின்களைக் கையாண்டுவிட்டு வீட்டுக்கு வரும் உங்களுக்கு ஒரு மெத்தை தானே நாங்கள்! வா ஆண் மிருகமே! வா!'' என்றாள்.

''நிஷா, என்னைத் தப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறாய் நீ. என் மனதில் உன்னை பற்றிய கவலை தான். உன்மேல் வேறு ஏதும் நோக்கமில்லை. உன் அப்பாவை நான் சந்தித்தேன் அவருக்காக பரிதாபப் பட்டேன். அவரிடம் உன்னைச் சேர்த்ததும் நான் விலகுகிறேன். அத்தனை பெரிய பேச்சு விரயமான பேச்சு. படுத்துக்கொள். நான் உன்னைத் தொடமாட்டேன். மேலும் தொடுவதற்கு எனக்கு நினைவு...''

இவளிடம் ஏன் சொல்ல வேண்டும்? மறுபடி லெக்சர் அடிப்பாள். 'கோ டு ஹெல்' என்றுசொல்விஎழுந்துவந்து படுத்துவிட்டேன். சற்று சற்று நேரத்தில் விளக்கை அணைத்தாள். சற்று நேரத்தில் நான் தூங்கி விட்டேன்.

காலை அவள்தான் என்னைத் தட்டி எழுப்பினாள். ''எழுந்திரு'' என்றாள். நான் அவள் முகத்தில் விழித்தேன். தலையைச் சற்று ஒழுங்கு பண்ணி இருந்தாள். முகத்தை அலம்பி இருந்தாள். ''குட் மார்னிங்'' என்றாள் சிரிப்புடன்.

எதற்குச் சிரிக்கிறாள்?

''குட் மார்னிங்'' என்று தலையணைக்கடியில் சாவியைத் தேடினேன்.

''சாவியா! என்னிடம் இருக்கிறது'' என்று என் மேல் எறிந்தாள். நான் ஆச்சரியத்துடன் பிடித்தேன்.

''சாவியைத் திருடினாயா?''

''எடுத்துக்கொண்டேன், நீ குறட்டைவிட்டுத் தூங்கிய தூக்கத்தில். உன் சட்டை பாண்ட்டைக் கூடக் கழற்றி இருக்கலாம்.''

நான் சற்று அவமானத்துடன், ''தப்பிக்காமல் இருந்ததற்கு தாங்க்ஸ்'' என்றேன்.

எங்களுக்காகக் காலை டீ வந்தது. அப்புறம் ஆம்லெட், கார்ன்பிளேக் எல்லாம் வந்தது....

அவளை இட்டுக் கொண்டு விமானத்தின் பக்கம் சென்றேன். எனக்காகஇரண்டுமெக்கானிக்குகள் காத்திருந்தார்கள். ஜெட் விமானங்கள் பயிற்சிக்காகச் சீறிக் கொண்டிருந்தன. எங்கும் கெரோஸின் வாசனை விரவியிருந்தது.

நான் விமானத்தைக் கவனிக்க ஆரம்பித்தேன். ''நிஷா வேடிக்கை பார்த்துக் கொண்டு இரு. எங்கும் போய் விடாதே'' என்றேன்.

''சாவி ஞாபகமில்லையா?'' என்று கேட்டாள்.

அந்த மெக்கானிக்குகளின் உதவி கொண்டு விமானத்தின் முன் பக்கத்து இன்ஜினின் கௌலிங்குகளைத் திறந்த உடனே எனக்குத் தலைகால் புரியவில்லை. முற்றிலும் பழக்கமில்

ஈயும் ஏழுதியும்

''ஜ''



பிரபல பீட்டில் பாடகர்களில் ஒருவரான ஜான் லென்னனின் மனைவியான யோகோ ஓனோ டாக்குமென்டரிப் படங்களை எடுப்பதில் வல்லவர். (ஆனால் அவை சற்று 'ஏ'ரகம் தான்)

அவர் எடுத்த படங்களில் ஒன்று 'பாட்டம்' (நிர்வாணப் பின் பக்கங்களை மட்டுமே காட்டிய படம்) மற்றொன்று புன்னகை. தொண்ணூறு நிமிட்ப் படத்தில் ஜான் லென்னனின் புன்னகை மட்டும் தான் இருந்தது.

இப்போது இவர் 19-நிமிடப் படம் ஒன்றை எடுத்திருக்கிறார். பெயர்: ஈ. ஆடை யின்றிப் படுத்திருக்கும் பெண்ணின் உடம்பில் மேலும் கீழுமாக ஒரு ஈ போய்வருவதுதான் படத்தில் காட்டப்படுகிறது. இதில் நடிக்கப் பெண்கள் நிறையப் பேர் வந்தாலும் ஈ மெதுவாக நடக்கும் போது உடம்பை சிலிர்த்துக்கொண்டவர்களை யெல்லாம் நீக்கி விட்டார் திருமதி ஓனோ. ஒரு பெண்ணைக் கடைசியில் தேர்ந்தெடுத்தார்.

அடுத்த பிரச்னை ஈ! 25 சென்ட் வீதம் சுமார் 200 ஈக்களை வர வழைத்தார். சொன்னபடி ஈக்கள் நடிக்க மறுக்கவே, சில ஈ நடிகர்களை லேசாக மயக்க வாயுவை முகரச் செய்து பெண்ணின் உடலில் வைத்துப் படம் எடுத்தார். படம் முழுதும் பின்னணி: ஓனோவே செய்த 'ஹம்'. லென்னன் கிட்டாரில் போட்ட தாளத்தை டேப் ரிகார்டரில் பதிவு செய்து அதை 'ரிவர்ஸில்' போட்டுப் படத்திற்கு ரிகார்டு செய்திருக்கிறார்.

படம் நன்றாக அமைந்து விட்டதாக ஓனோ பெருமைப் படுகிறார்!

பின் குறிப்பு: இந்தப்படத்தில் நிர்வாணமாக நடிக்கும் பெண்ணின் பெயர்: மிஸ் லஸ்ட்

லாத புதிய விமானம். இதில் எப்படி நான் ரிப்பேர் பார்க்கப் போகிறேன்.

''கார்ப்பரல்! உனக்கு ஸென்ஞ விமானம் பழக்க முண்டா?''

''நோ ஸார். நான் 'வாம்பெயர்' ஆசாமி'' என்றார்.

என்ன செய்வது என்று புரியாமல் கேபின்களையும் பலவிதமான வால்வுகளையும் மானிஃபோல்ட்களையும் தொட்டுக் கொண்டே வந்தேன், கண்ணில்லாதவன் 'ப்ரெய்ல்' படிப்பது போல. என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு கேபிள் லூஸாக இருந்தது. இன்ஜினின் உள் பாகத்துக்குச் செல்லும் இடத்தில் ஒரு அடாப்டர் போட்டு இணைத்திருந்த கேபிள். அடாப்டரின் சிலமறைகள் லூஸாகி இருந்தன. ஆட்டிப் பார்த்தால், லேசாக ஆடியது. கழற்றிப் பார்த்தேன். எலக்ட்ரிக்கல் ஜெனரேஷன் சிஸ்டத்தில் ஒரு கேபிள்தான் அது. அதை மறுபடி பொருத்தி விட்டு, அடாப்டரை இறுக்க முடிவிட்டு ஸ்பானரால் இறுக்கினேன். இன்ஜினைக் கிளப்பி ஒரு அரை மணி ஓட விட்டுப் பார்த்தேன். சீராக ஓடியது!



கேள்வி: தலையில் முன் பக்கம் இரண்டு கண்கள் இருப்பதுபோல, பின் பக்கமும் இரண்டு கண்கள் இருந்தால் எப்படி இருக்கும்?

பதில்: படத்தையும், படம் பார்க்க வந்தோரையும் ஒரே நேரத்தில் பார்க்கலாம்!

அணைத்து விட்டு, ''ஃபோல்ட் கிளியராகி விட்டது. நிஷா!'' என்று கூப்பிட்டேன். அவள் என்னை நோக்கி வர, அந்தக் கார்ப்பரல் என்னை ஒரு ஜால வித்தை செய்தவன் போல மரியாதையுடன் பார்க்க, ''சரியாகி விட்டது'' என்றேன்....

நான் எதிர்பார்த்த ஒன்பது மணிக்கு ஒரு மணி முன்னாலேயே நாங்கள் அந்த விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டு விட்டோம். பக்கத்தில் நிஷா உட்கார்ந்திருந்தாள். விலங்கு மாட்டவில்லை. கட்டவில்லை. எனக்கு அவளிடம் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. நேராக டில்லிக்கே செல்வதற்கு பெட்ரோல் நிரப்பி இருந்தேன். விமானம் சீராகப் போய்க் கொண்டிருந்தது. நிஷா தான் பேசவே இல்லை. ஒற்றை வார்த்தை பதில்கள்தான்.

டில்லிக்கு ஒரு மணி முன்னதாகக் கிளம்பியதால், பிற்பாடு ஏற்படப் போகும் மகத்தான சிக்கல்கள் எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

—தொடரும்.



இந்த சிறு தொகை
நாளைய பெரு மூலதனம்
தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்கின்
ரேக்கரிங் டெபாஸிட்டுகளில்
12, 24, 36, 48, 60 மற்றும்
74 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
குறைந்த பட்ச டெபாஸிட் ரூ. 1/-
இன்றே இத்திட்டத்தில் சேருங்கள்.

1-7-71 முதல்

மாதாந்திர டிபாசிட்	காலவரை முடியும் தருவாயில் கொடுக்கப்படும் பணம்					
மாதங்கள்	12 ரூ. பை	24 ரூ. பை	36 ரூ. பை	48 ரூ. பை	60 ரூ. பை	74 ரூ. பை
ரூ. 1-/	12-45	25-80	40-10	56-00	72-60	93-25
ரூ. 2-/	24-90	51-60	80-20	112-00	145-20	186-50
ரூ. 5/-	62-25	129-00	200-50	280-00	363-00	466-25
ரூ. 50/-	622-50	1290/-	2005/-	2800/-	3630-00	4662-50
ரூ. 100/-	1245/-	2580/-	4010/-	5600/-	7260/-	9325

THE TANJORE PERMANENT BANK LTD. ESTD. 1901

தஞ்சாவூர் பர்மனெண்ட் பாங்க் லிமிடெட்,
பதிவு அலுவலகம்: 1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்
D. லெக்ஷ்மிநாராயண்—சேர்மன்
B. K. மாதவன் —செக்ரட்டரி

VSK-TPB-8



சுலபமாக ஏமாற்றப்படும்
பன்னிரண்டாம்
அத்தியாயம்

இரவு டில்லி விமான நிலையத்தில் இறங்குவதற்கு முன் நிஷா என்னிடம் சற்றுத் தாராளமாகவே பேசினாள். கல்கத்தாவில் நடந்த சில நிகழ்ச்சிகளைப் பற்றி அவள் சொன்னபோது அவைகளை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் அவைகளை எவரும் முழுக் கற்பனையின் மூலம் சொல்ல முடியாது! அவைகளின் அடித்தளத்தில் உண்மையின் சரடு இருப்பது எனக்குப் புரிந்தது:

''செய்தித் தாள்களில் இவை வருவதில்லை, வராது! செய்தித் தாள்கள் இந்தப் பிற்போக்கு அரசாங்கத்தின் எதிரொலிகள்.

''ரெய்ட் என்று ராணுவ ஆசாமிகள் திடீரென்று புயலாக வந்து இறங்குவார்கள். வந்து ஒரு பகுதியைச் சுற்றி வளைத்துக் கொள்வார்கள். எல்லோரும் துப்பாக்கி வைத்திருப்பார்கள். வீடு வீடாகச் சென்று சோதனை போடுவார்கள், வெடிமருந்து, வெடிகுண்டு புரட்சி தெரியும் புத்தகங்கள் இருக்கிறதா என்று. ப்ளாஸ்டிக் பாம்கள் அகப்பட்டு விட்டால் அவர்களுக்குக் கொண்டாட்டம். பிடிபட்டவர்களை உடனே அழைத்துச் செல்வார்கள். ஓடினால் சுடுவார்கள். தெரு மத்தியில் சுட்டு வீழ்த்துவார்கள். ஓடக் கூடாது. ஓடமாட்டோம். நேராக அவர்கள் அழைத்துச் செல்லும் இடத்துக்குச் சென்று அவர்கள் செய்யும் கொடுமைகளைச் சமாளிக்க வேண்டும். அதற்கான மன அழுத்தம் எங்கள் எல்லோரிடமும் இருக்கிறது.

''போலீஸ்காரர்கள் எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்கள். எல்லோருக்கும்கொடுமைப்படுத்தும்ஆசை-'ஸேடிஸம்' இருக்கிறது! அவர்களில் ஒருவன் என்னை எங்கே கடித்தான் சொல்லட்டுமா!

''இருந்தும் எங்கள் சக்தியை அவர்களால் அழிக்க முடியவில்லை. முடியாது. கல்கத்தாவின் நட்ட நடு மத்தியில் எங்கள் பிரதேசங்கள் இருக்கின்றன. 'விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்கள்'. அங்கே நாங்கள் வரி வசூல் செய்கிறோம். மக்கள் கோர்ட்டில் தீர்ப்பு வழங்குகிறோம்!

''நாங்கள் வெல்வோம்!''

இரவு. டில்லி நகரம் ரத்தினக் குவியலாகத் தெரிந்தது. கார்கள் மின்மினிப் பூச்சிகளாக ஊர்ந்து கொண்டிருக்க என்னுடைய முதல் ஃப்ளைட் ப்ளானின் படி நான் வந்து சேரவேண்டிய நேரத்திற்கு அரை மணி முன்பே இறங்கிவிட்டேன், முன்பே கிளம்பி விட்டதால்.

இறங்கி நேராக டெர்மினல் அருகிலேயே சென்று நிறுத்தினேன். அவளையும் இறக்கி விட்டேன். உடன் அழைத்துச் சென்றேன். அவளிடம் எனக்குப் பெரிதாக நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவள் தப்பிக்க இரண்டு மூன்று அவகாசங்கள் இருந்தும் அவள் தப்பிக்கவில்லை. தப்பிக்க முயற்சி செய்யவில்லை. அதிலிருந்து எனக்குத் தெரிந்த செய்தி அவளுக்கு இவை எல்லாவற்றையும் உதறி விட ஒரு இஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை அவள் வெளியே சொல்லவில்லை. சொல்லாததற்குக் காரணம், அவள் மனதில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டமாக இருக்கலாம். தந்தை பாசத்திற்கும் இந்தப் புதிய புரட்சிப் புயலின் மேல் ஏற்பட்டிருக்கும் பாசத்திற்கும் இடையே போராட்டமாக இருக்கலாம்.

அவள் தந்தைக்கு டெலிபோன் செய்ய அவளையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றேன். டெலிபோன் செய்ததில் அவர் சற்று முன் விமான நிலையத்திற்குக் கிளம்பிச் சென்றார் என்று செய்தி கிடைத்தது.

வட்டமாக கூஷன் தசையில் இருந்த சோபாவின் மேல் இருவரும் உட்கார்ந்தோம். நிஷா, 'பாத்ரூம்எங்கு இருக்கிறது?' என்று கேட்டாள். எதிரே 'லேடிஸ்' என்று கண்ணாடியில் எழுதி இருந்த இடத்தைக் காட்டினேன். அவள் அங்கு சென்றாள். நான் காத்திருந்தேன். காமிரா மாலை அணிந்த ஒரு இளைஞன் வந்து என்னிடம் சிகரெட்டுக்கு நெருப்புக் கேட்டான். கொடுத்தேன். அவன் பற்ற வைத்துக் கொண்டான். நான் சற்று சாய்ந்து கொண்டேன்.

நிலையத்தின் போர்ட்டிக்கோவில் எனக்கு ஏற்கெனவே பரிச்சயமாக இருந்த இம்பாலா கார் வந்து நின்றது. அதிலிருந்து நிஷாவின் தந்தை இறங்கி வெளியே வந்தவுடன் என்னை மத்தியில் பார்த்து விட்டார்; புன்னகைத்தார்.

''ஹலோ காப்டன் ஜேகே!'' என்றார். அவர் கண்கள் நிஷாவைத் தேடின. நான் அவர் பக்கம் சென்று, ''ஹலோ, ஸார் உங்கள் பெண்ணைக் கொண்டு வந்து சேர்ப்பித்து விட்டேன்'' என்றேன்.

''எங்கே அவள்?''

''பாத்ரூம் போயிருக்கிறாள். இதோ வந்து விடுவாள்.''

அவர் பாத்ரூம் பக்கம் பார்த்தார். ''சீக்கிரமே வந்து விட்டீர்களா?''

''ஆம். காற்று சாதகமாக இருந்தது. மேலும் சற்று சீக்கிரமே கிளம்பி விட்டேன்.''

''நல்லது. ரொம்ப ட்ரபிள் கொடுத்தாளா?''

''இல்லை.''

''கட்டிப் போட்டிருந்தீர்களா?''

''முதல் பகுதியில் கட்டிப் போட்டிருந்தேன். பிற்பகுதியில் அவிழ்த்து விட்டேன்.''

''ஏன்?''

சுஜாதா

''அவளுக்கு தப்பிக்கும் எண்ணம் இல்லை.''

''சொன்னாளா?''

''தெரிந்து கொண்டேன். என்ன என்னவோ பேசினாள். ஆனால் அவள் உள் மனத்தில் மாறிவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.''

''என்னைப் பற்றி ஏதும் சொன்னாளா?''

''ஒரு வார்த்தை கூட இல்லை.''

''என்ன இன்னும் காணோம்?''

''பாத்ரூமில் இருக்கிறாள்.''

''இத்தனை நேரமா?''

''வந்து விடுவாள்.''

வந்து விடுவாள் என்று இன்னும் ஐந்து நிமிஷம் காத்திருந்தோம். வரவில்லை. ''போய்ப்பார்க்கலாம்'' என்று எதிரே நடந்தேன். அவர் உடன் வந்தார்.

லேடிஸ் பாத்ரூமில் நான் நுழைந்ததில்லை. அங்கே நின்று கொண்டிருந்த ஒரு ஸ்வீப்பர் பெண்ணை நிறுத்தி, ''உள்ளே ஒரு, சுமார் பதினெட்டு வயதுப் பெண் போய் இருக்கிறாள். கூப்பிடு'' என்று சொன்னேன். அவள் எங்களைச் சந்தேகமாகப் பார்த்தபடி உள்ளே சென்றாள்.

''உள்ளேதான்இருப்பாள். நான் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன்...''

''உள்ளே ஒருவரும் இல்லை'' என்றாள், வெளியே வந்த அந்தப் பெண்.

''தப்பித்து விட்டாள்'' என்றார் நிஷாவின் தந்தை சுருக்கமாக.

இம்பாஸிபிள். நான் வைத்த கண் வாங்காமல் இந்த பாத்ரூம் வாசலையே பார்த்திருந்தேன்.

''உள்ளே வேறு வழி இருக்கிறதா தாயே!''

''இல்லை'' என்றாள்.

''இம்பாஸிபிள். உள்ளே போய் சரியாகப் பார். ஸார்! அவள் எப்படிக் காற்றில் கரையமுடியுமா? உள்ளே நிச்சயம் இருந்தாக வேண்டும். நான் போய்ப் பார்க்கிறேன்!''

''ஒரு செகண்ட் கூடக் கவனம் தவறாமல் பாத்ரூம் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தீர்களா?''

''ஆம். ஒரு செக....வெயிட் எ மினிட்.''

''என்ன?''

''ஒருபையன்வந்து சிகரெட்டுக்கு நெருப்பு கேட்டான். பற்ற வைக்கும் போது எதிரே நின்றான். மறைத்தான். சே! நான் ஒரு முட்டாள். ஸாரி ஸார்!''

''யூ மீன்!...''

''ஆம். நிஷா தப்பித்து விட்டாள்.''

அவர் முகம் கவலையிலிருந்து ஆத்திரத்துக்கு மாறியது. ''காப்டன் ஜேகே! ஆயிரம் மைல் அவளைக் கொண்டுவந்து விட்டு இப்போது இங்கே அவளை நழுவ விட்டு விட்டீரா?''

''அப்படித்தான் தெரிகிறது! கண்டுபிடித்து விடலாம். கவலைப் படாதீர்கள். அவள் போகமாட்டாள். இங்கேயே எங்கேயாவது சுற்றிக் கொண்டிருப்பாள். பார்க்கலாம். இப்படித்தான் ஒருதடவை ஆனது அந்த மிலிட்டரி விமான நிலயத்தில். அவள் தப்பிக்க மாட்டாள்.''

''எங்கே அவள்! ஓடு. தேடிக் கொடு. அவளை நான் இன்று பார்த்தாக வேண்டும். இல்லை என்றால் உன்னைக் கீமா பண்ணிச் சாப்பிட்டுவிடுவன். போ, தேடு!''

நான் பைத்தியக்காரத்தனமாகக் கட்டடமெங்கும் சுற்றினேன். எனக்கு அவள் திடீரென்று ஏதாவது ஒரு அறையில் அகப்பட்டுவிடுவாள் என்கிற நம்பிக்கை முதலில் இருந்தது. அப்புறம் நேரமாக ஆக நம்பிக்கை மறைந்து விட்டது.

தப்பிவிட்டாள் என்கிறது பூரா உதயமாகிவிட்டது.

அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மூக்கு கோபத்தில் துடித்தது! ''யூ ஆர் ஏ ஃபூல். ப்ளடி இடியட். என்ன விளையாடுகிறாயா? நான் யார் என்று தெரியுமா உனக்கு...?''

''ஸார், இந்த இடியட் எல்லாம் நிஷாவைத் திரும்பக் கொண்டு வருமா? எங்கே போயிருப்பாள். தேடிப்பார்க்கலாமேநிஷா! நிஷா!.. கூப்பிடு தூரத்தில் இல்லை.''

''விளையாடுகிறாய். காப்டன் ஜேகே. இந்த நகரத்தில் அவள் தப்பித்திருக்கிறாள். நான் தேட முயற்சிக்கிறேன். ஆனால் இவ்வளவு முட்டாள்தனமாக அவளைத் தப்பிக்க விட்ட உன்னைத் தப்பிக்கவிட மாட்டேன். சரியாக ஒருநாளில், இருபத்து நாலு மணி நேரத்தில் அவள் என்னிடம் வந்து சேரவில்லை என்றால்உன்னைமறுபடிகைதுசெய்து உனக்கு அப்படிப்பட்ட ட்ரிட்மெண்ட் கொடுக்கச் சொல்வேன். புதைக்கப்பட்ட பிணங்களை எழுந்து நிற்க வைக்கக் கூடியபடி.போ, தேடு!''

அவர் விருட்டென்று தன் காரில் உட்கார்ந்து கொள்ள கார் என் காட்சியிலிருந்து மறைந்தது.



நான் மறுபடி சோபாவில் உட்கார்ந்து லேடிஸ் பாத்ரூமைப் பார்த்தேன். எவ்வளவு சுலபமாகப் பறி! நிஷா ஏன் இவ்வளவு தூரம் வந்ததும் தந்தையைப் பார்க்க மறுக்கிறாள்..? நான் எப்படி நிஷாவை மறுபடி கண்டுபிடிக்கப்போகிறேன்? அவர் வேறு இருபத்து நாலு மணி நேரம் கெடு வைத்துவிட்டுப்போயிருக்கிறார். அதற்குள் நிஷா கிடைக்கா விட்டால் என்னை என்னவோ செய்கிறேன் என்கிறாரே!

ரொம்ப முக்கி யோசித்தேன். ஒரு மார்க்கமும் தென்படவில்லை. டில்லியின் ஜனத்தொகை முப்பது லட்சமோ என்னமோ, அதில் நான் எப்படி ஒரு 'சிங்கிள்' பெண்ணைத் தேடப் போகிறேன். எப்படி?

எனக்குத் தெரிந்த ஒரே மார்க்கம் 'நிஷா' என்று கூப்பிட்டுப் பார்ப்பதுதான். கூப்பிட்டால் ஊர் முழுக்கக் கேட்காது. சான்ஸ் இல்லை.

நிஷா நீ எங்கே இருக்கிறாய்? ஒரு பாட்டுப் பாடவா!

திரு திருவென்று விழித்தேன். நகத்தைக் கடித்தேன். என் செய்வேன் சோதரா? சற்றுநேரம் யோசித்த பின் ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரு இளம் பெண்ணைத் தவற விட்டுவிட்டேன். மற்றொரு இளம் பெண்ணைப் போய்ப் பார்க்கலாம் என்று தோன்றியது. ஜ்யோ!

நில்லுங்கள். அதற்கு முன் என்னை மறைத்து என்னிடம் சிகரெட் நெருப்பைக் கேட்டவனைச் சற்றுக் கடுமையாக யோசித்துப் பார்த்தேன். அவன் என்ன சட்டை அணிந்திருந்தான்? மஞ்சளா அல்லது அழுக்குப்பச்சையா-சட்டை அணிந்திருந்தான். அது ஞாபகமிருக்கிறது. சின்னப் பையன்தான். சைட் பர்ன்ஸ் வைத்திருந்தான். மேலே என்ன, அவனிடம் விஷேதமாக ஏதாவது தெரிந்ததா? ஓ எஸ். சட்டென்று ஞாபகம் வந்தது. அவன் கழுத்தில் இரண்டு மூன்று காமிராக்கள் தொங்கியது ஞாபகம் வந்தது. காமிராக்கள் என்றால் பெரிய விலை உயர்ந்த காமிராக்கள், எக்ஸ்போஷர் மீட்டர் ஃப்ளாஷ் அட்டாச்மெண்ட் என்று விதம் விதமாக அட்டாச்மெண்ட்கள் எல்லாம் புடைசூழ...அப்புறம் அவன் முகம் ஞாபகம் இருந்தது. அவனைத் தேடுவதா? அவளைத் தேடுவதா? எனக்கு என்னவோ அந்தப் பையன் நிஷாவின் தப்பித்தலில் சம்பந்தப்பட்டிருந்தான் என்பதை நிச்சயமாகப் பட்சி சொல்லியது.

அவன் முகத்தைக் கஷ்டப்பட்டு ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தேன். அவன் முகம், அவன் முகம். குறுமீசை, எறும்பு ஊறுவது போல் மீசை. சடைசடையாக அடர்த்தியாக மயிர். ஒல்லியான தேகம். கண்களுக்குக் கீழ் கறுப்பு. எனக்கே ஆச்சரியம் ஏற்பட்டது. முயன்று பார்த்தால் எவ்வளவு ஞாபகம் வைத்துக்கொண்டிருக்க முடிகிறது!



வெளியே வந்தேன். சின்னப் பையா! உன்னை டில்லியில் எப்படித் தேடப் போகிறேன்? இரவு டில்லி மாறிக் கொண்டிருந்தது. புதிய பாலங்கள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். கார்கள் கார்களைத் துரத்திக் கொண்டிருந்தன. டாக்ஸி பிடித்து ஜ்யோவின் வீட்டிற்குச் சென்றேன். குமார் வந்திருக்காமல் இருக்கலாம் என்று கொஞ்சம் நம்பிக்கையுடன் கதவைத் தட்டினேன். திறந்தது குமார். ஜ்யோவின் சகோதரன். ''ஜேகே! என்ன இப்படி இரவில் திடீர் என்று...''

''ஜ்யோ எங்கே?''

''உள்ளே இருக்கிறாள் என்று நினைக்கிறேன்; ஜ்யோ?''

''குமார், எப்படி இருக்கிறாய்? பஞ்சாபில் எவளைப் பார்த்தாய்?''

''நிறைய. நீ சொல். எங்கே போயிருந்தாய்?...''

''ஆயிரம் மைல்கள். ரகசிய மிஷன். நாம் தனியாக இருக்கிறோமா?'' என்று அங்குமிங்கும் பார்த்தேன்.

''ஏன்?''

''ஒரு நக்ஸலைட் பெண்ணை விமானத்தில் கொண்டு வந்தேன். இங்கே கோட்டை விட்டேன்.''

''புரியவில்லை.''

''மெதுவாகச் சொல்கிறேன். ஹலோ ஜ்யோ.''

ஜ்யோ சற்று வித்தியாசத்திற்கு ஸாரி அணிந்திருந்தாள். ரவிக்கையில் அங்கங்கே வெட்டப்பட்டு முதுகு கொஞ்சம் தெரிந்தது. பக்க வாட்டில் கொஞ்சம் தெரிந்தது.

''ஜேகே!'' என்றாள் உண்மையான சந்தோஷத்துடன்.

''எங்கேயாவது வெளியில் போகிறீர்களா?''

''ஆம்'' என்றான் குமார். ''க்ராம்வெல் சினிமா. நீயும் வாயேன்.''

''நான் இங்கே படுத்திருக்கிறேன். எனக்கு ரெஸ்ட் தேவை. நீங்கள் செல்லுங்கள்.''

''குமார் எனக்கும் சற்று தலைவலி'' என்றாள் ஜ்யோ.

''மாத்திரை தருகிறேன். அப்புறம் உன் பாய் ஃப்ரெண்ட் காத்திருப்பான் வா.''

''ஜேகே, நீயும் வாயேன், ப்ளீஸ்.''

நான் சற்று யோசித்துவிட்டுச் சம்மதித்தேன். சாணக்யா தியேட்டரில் நான், ஜ்யோ, குமார், அப்புறம் அந்தப் பையன் என்ற வரிசையில் உட்கார்ந்தோம். ஃபார் ஹன்ஸ் உபயோகிக்காவிட்டால் பல் எப்படி உதிரும் என்று காட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பையன் ஜ்யோவிடம் வளவள என்று பேசிக் கொண்டிருந்தான். ஜ்யோ அவனைப் பூச்சியாக மதித்தாள். ''ஆரஞ்ச் ஜூஸ் சாப்பிடு'' என்று எதற்கோ பதில் சொல்லிச் சிரித்தாள். ஜ்யோவின் கை என் கையைப் பற்றியது. எல்லா விளக்குகளும் அணையும் வரை காத்திருந்து என் கையை தன் மேல் எடுத்துக்கொண்டாள்.

என்னால் சரியாகப் படம் பார்க்க முடியவில்லை. நிஷாவின் ஞாபகம் அடிக்கடி வந்தது. அந்தப் பையனின் ஞாபகம் வந்தது. தூக்கம் வந்தது. பக்கத்தில் ஜ்யோவின் மென்மையான மார்பில் என் கை படும்போது எனக்குத் தூக்கம் விழித்தது.

எல்லாவற்றிற்கும் என்ன அர்த்தம்? நிஷா ஏன் தப்பித்தாள்?... ஆனால் நிஷாவை நான் மறுபடி நிச்சயம் பார்க்கப் போகிறேன் என்கிற நம்பிக்கை என் கழுத்துப் பாகத்தில் காலருக்குள் குறுகுறுத்தது.

எங்கே? —தொடரும்

88 88

விஷயம் கொஞ்சம் சிக்கலாகும் பதின்மூன்றும் அத்தியாயம்

சுஜாதா

தியேட்டர் வாசலிலேயே அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு என் அறைக்குச் செல்ல டாக்சியைப் பிடித்தேன். ஏமாற்றம், துக்கம், எல்லாவற்றிற்கும் அர்த்தம் என்ன என்று தெரியாத அற்பநிலை, பின்னிரவு, மனச்சாட்சி சம்மதிக்காத எத்தனையோ சந்தர்ப்பங்கள். டாக்சியின் உள்ளே தனிமையில் நான் பலவித உணர்ச்சிகளின் கதம்பமாகச் சென்றேன். சென்றதும் ஒரே ஒரு அவுன்ஸ் சாப்பிட்டு விட்டுப் படுத்தவன்தான். நல்ல பகலில் எழுந்தேன். எழுந்ததற்குக் காரணம் பிடிவாதமாகத் தட்டப்பட்ட என் அறை முகப்புக் கதவுதான். உலகத்தையே சபித்துக்கொண்டு எழுந்து திறந்ததில் தெரிந்தவன் அதிக உயரமாக, ''வரச் சொன்னார்'' என்றான். சிக்கனமாக 'யார்' என்று கேட்டதற்கு மறுபடி, ''வரச் சொன்னார்'' என்றான். நிஷாவின் தந்தைதான் இருக்க வேண்டும். அவன் சொக்காயைக் சுழற்றினால் எப்படி இருப்பான் என்று சற்று நேரம் யோசித்தேன். இந்த யோசனை நான் சாதாரணமாகப் பெண்களைப் பற்றித்தான் யோசிப்பேன். இந்தப் பிரத்தியேகன், துஷ்ட காரியங்களுக்கென்றே ஏற்பட்டவன் போலத் தோன்றியதால் சமயம் வரும்போது என்னைப் பந்தாடப் போகிறான் என்று எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்ததால், அந்த மாதிரி நினைக்க (ஹாராவ்) வேண்டியதாக இருந்தது.

சட்டென முகத்தில் தண்ணீரை அடித்துக் கொண்டுவிட்டு, பற்பசை தேய்த்து விட்டு, காப்பி கூட சாப்பிடாமல் கிளம்பினேன்.

மறுபடி சாணக்கியபுரி.

நிஷாவின் தந்தை என்னை மூலையில் உட்கார வைத்தார். முதலிலிருந்து கடைசி வரை எல்லாவற்

றையும் கமா, புல்ஸ்டாப் விடாமல் கேட்டார். நான் சொன்னேன். லக்னே, பிஸ்வாஸ், நிஷா, விமானம், கோளாறு, இறங்கல், இரவு புறப்பாடு, 'டில்லி' காமிராப் பையன், சிகரெட் நெருப்பு, நிஷா எங்கே? வரைக்கும் அவள் பேசின ஒவ்வொரு வாக்கியத்தையும் திருப்பிச் சொல்லச் சொன்னார். இயன்ற வரைக்கும் சொன்னேன். நேற்றிரவு சுருக்கமாகச் சொன்ன பய முறுத்தலை விஸ்தாரமாகச் சொன்னார். "காப்டன் ஜேகே! இன்று சாயங்காலத்துக்குள் அவளை நீங்கள் என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும்" என்றார்.

"எப்படி ஸார்" என்று கேட்டதற்கு அவர், "எனக்குத் தெரியாது" என்றார். நான் சிரித்தேன். அவர் என்னைப் பார்த்த பார்வையில் சிரிப்பு பாதியில் உறைந்த காமிராச் சிரிப்பாகியது. "ஸார், உங்களுக்கு எல்லா வசதியும் இருக்கிறது; எல்லா சக்திகளும் இருக்கின்றன. நீங்கள் ஒரு பெரிய சர்க்கார் அதிகாரி. உங்களால் முடியாதது என்னால் முடியுமா? அவள் டில்லியில் தான் இருக்கிறாள். அவளை நான் ஒண்டியாள் எப்படிக்கண்டுபிடிக்கப் போகிறேன். என்ன விளையாட்டாக இருக்கிறது?"

அது விளையாட்டு இல்லை என்பதை நான் இன்று மாலை தெரிந்து கொள்ளப் போகிறேன் என்றார் பெரிய ஸார்.

"சரியாக மாலை 6-30-க்கு நீங்கள் மறுபடி அரெஸ்ட் செய்யப் படுவீர்கள்."

"எதற்கு?"

"அதே குற்றத்துக்கு. ஒப்பியம் கடத்தியது. கள்ளநோட்டு பரப்பியது...."

"ஓ! முதல் இரண்டு அத்தியாயங்களா? அது இன்னும் ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு?"

"நன்றாக."

"அதாவது 6-30-க்குள் நிஷாவை நான் சேர்ப்பிக்காவிட்டால்."

"ஆம்."

"கொண்டு வந்து விட்டால்."

"விடுதலை."

"நீங்கள் உதவி செய்வீர்களா? கண்டுபிடிப்பதற்கு போலீஸ்உதவி, கார் உதவி, அப்புறம் ஏதாவது கைச்செலவுக்கு."

"கேட்டது கிடைக்கும்."

"6-30?"

"ஆம்."

"கண்டுபிடிக்கிறேன் ஸார், நிச்சயம்!"

"இவரைக் கொண்டுவிடு" என்று ஆணையிட்டார்.

"அந்தப் பெரிய இம்பாலாவை எடுத்து வா பையா! 6-30 வரை கொஞ்சம் வாகன பாக்கியமாவது இருக்கட்டும்."

எனக்கு ஏதும் பிடிபடவில்லை. ஏதோ கண்டு பிடிக்கிறேன் என்று சொல்லி விட்டேனே தவிர, அந்தப் பெண்ணை— அதுவும் தப்பித்துப் போன பெண்ணை டில்லி ஜனங்களின் மத்தியில் கண்டு பிடிப்பது -பத்து மாடிக்கட்டிடத்தின் உச்சியிலிருந்து எச்சில் துப்பி அது கீழே ஸ்கூட்டரில் விரைவாகச் செல்லும் என் நண்பர் வரதாச்சாரியின் வழுக்கையான மண்டையில்படுவது எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு தான்.

இம்பாலா காரில் நீ போயிருக்கிறாயா ஜயந்தி?உள்ளே உட்கார்ந்ததும் ஏர் கண்டிஷனர் மெதுவாக உறும ஆரம்பித்து ஏதோ ஒரு பெருமூச்சுக்குள் உட்கார்ந்து செல்வது போல சுகம். அதை கனாட் ப்ளேஸ் வரை ஓட்டிச் சென்றேன். அங்கே இறங்கிக் கொண்டு ஒரு கப் காப்பி வாங்கிச் சாப்பிட்டேன். மெத்தென்று ஸாண்ட்விச்கள். கடித்துக் கொண்டேன். தனியாக ஓட்டல் மேஜையில் உட்கார்ந்து யோசித்தேன்.எப்படித் தேடுவதை ஆரம்பிப்பது?

பேசாமல் தேடாமலேயே இருந்துவிட்டு அறைக்குப் போய்க் கொஞ்சம் தபலா தட்டிவிட்டு நேராக ஸ்டேஷனுக்கு நடந்துவிட்டால் என்ன? நல்ல அருமையான யோசனைதான். அல்லது கைவசம் கப்பல் கார் இருக்கிறது 6-30வரை யாவது அனுபவிக்கலாமே!

கிர்ர்ரக் கிர்ரக் கிர்ர்ரக் கிர்ரக் என்று கைலாஷ் காலனியைச் சுழற்றினேன்.

"ஜ்யோ!"

"தூங்குகிறார்கள்" என்றான் வேலைக்காரன்.

"மணி பத்து. எழுப்பு, ரொம்ப அர்ஜெண்ட் என்று சொல்."

"நீங்கள் யார் பேசறது?"

"அவள் பெரிய மாமா கான்பூரிலிருந்து பேசுகிறேன்."

"சற்று நேரம் இருங்கள். வைத்து விடாதீர்கள். உடனே கூப்பிடுகிறேன்."

"ஹலோ இஸ் இட்" என்றாள் ஜ்யோ கொட்டாவி கலந்து.

"நான் தான் ஜேகே! ஜ்யோ நேராக ஷவருக்குப் போ. குளி. எதையாவது கடி. தயாராக இரு. நான் வருகிறேன். யூ ஸீ ஜ்யோ! காலைதான் ஒரு இம்பாலா வாங்கினேன். திறப்பு விழா செய்ய வேண்டும்."

"ஜேக்! நீ என்ன சொல்கிறாய்?"

"என் அருமைச் சகோதரி! பதினைந்து நிமிஷம். ரெடியாக இரு" என்று டெலிபோனை வைத்தேன்.

எவ்வளவு பைசா?

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

இலவசக் கல்வி போதனை

'E'குரூப் வகுப்புகள் ஆரம்பம்: 19-10-71

ஆண் பெண் ஆகிய இருபாலரும் ஆசிரியர்களும் கீழ்க்கண்ட வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று சர்க்கார் 1971-72 வருடத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளித்து வருகிறோம்.

1. தீரிபுவன் B.A., B.Com., I.A., & I.Com., 2. மதுரை மெட்ரிக்; 3 மதுரை மெட்ரிக்குலேஷன்; 4. ஆந்திரா மெட்ரிக்; 5. மெட்ரிக் P.U.C.; 6. தமிழ் வித்வான் வகுப்புகள்; 7. சர்வீஸ் கமிஷன் (Oct. 72) 8. XIStd. S.S.L.C. 9. கைத்தறி நெசவு; 10. விவசாயம்; 11. Accountancy; 12. Overseer; 13. போர்டு ஃபார்க்; 14. போர்ட் மேன்; 15. கிராமணியம்; 16 கிராமசேவை; 17. ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); 18. பேசிக் ஆங்கிலம்; 19. மிரிமெட்ரிக்; 20. S.S.L.C. For Women.

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

1. S.S.L.C. தேறியவர்களும் ,ஆசிரியர்களும் I.A. வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம். 2. (8-ம் வகுப்பு) III, IV V படிவம் பயின்ற மாணவர்கள் XI Std. S.S.L.C. தேர்வில் கலந்து கொள்ளலாம். மேற்கண்ட வகுப்புகளின் முழு விபரங்களுக்கு 25nP. தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று பயனடைய உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் கல்வி ஸ்தாபனம்.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

சிவிலந்தயம் S. O. தென்னாற்காடு ஜில்லா, தென் இந்தியா.

கிளைகள்: சிலோன் மலேசியா தென்னாப்பிரிக்கா & மாரிஷஸ்

அவன்: உன் பேர் என்ன புள்ளே?

அவள்: நீ கையிலே வச்சிருக்கியே— அதுதான் மச்சான் எம் பேரு!

அவன்: ஆகா, 'குப்பி'யா? என்ன அழகான பேரு!

'ரப்பட்டீர ரப்' என்று டிரம் தட்டிக் கொண்டிருந்தான் ஒரு வழுக்கை. ரம்ப்பம் ரும்ப்பம் என்று ஸாக்ஸபோனில் வழிந்து கொண்டிருந்தான் ஒரு பரட்டை.

தொம் தொம் என்று டபிள் பேஸை மிதித்துக் கொண்டிருந்தான் ஒரு சலவை செய்யாத கோட்.

மைக்கை மார்பில் செருகிக் கொண்டு 'ரெய்ன் ட்ராப்ஸ் கீப் ஃபாலிங்' பாடிக்கொண்டிருந்தாள் ஒரு லோகல்.

ஐந்தாறு பேர் லஞ்ச் மென்று கொண்டிருந்தார்கள்.

''ஜ்யோ நான் ஒரு ஸைஃபர்'' என்றேன்.

''நாட் இன் பெட்'' என்றான் ஜ்யோ

''ஜ்யோ! டில்லியில் ஒரு குறிப்பிட்ட பதினெட்டு வயது நக்ஸலைட் பெண்ணை எப்படி நான்கு மணி நேரத்திற்குள் கண்டு பிடிப்பது?'' என்று கேட்டேன்.

அவள், ''கண்டு பிடிக்க வேண்டாம்'' என்றாள்.

''ஜ்யோ ஜெயிலில் வந்து என்னை அடிக்கடி பார்க்கிறாயா?''

''நானும் உன்னுடன் ஜெயிலுக்கு வந்து விடுகிறேன். அந்த ஆளின் ஸாக்ஸபோனைப் பிடுங்கி அட்டகாசம் செய்யட்டுமா'' என்றாள்.

''ஹல்லோ ஜேகே'' என்று ஒரு மூலையிலிருந்து பலத்த குரல் கேட்டது. திரும்பினால் ஹுஸேன்.

''வந்து விட்டாயா?'' என்றேன். ஹுஸேன் என் நண்பன். பத்திரிகை நிருபன். ஏபி ஸ்தாபனம். ஹுஸேன் தாடி என்று சொல்லும்படியாக ஒரு சிக்கலான சமாசாரம் தாடையில் வளர்த்திருந்தான். அதைச் சென்ற மார்ச் மாதத்திற்கு அப்புறம் சீர்படுத்தியதாகத் தெரியவில்லை. முரட்டுக் கதரில் ஷர்ட் அணிந்திருந்தான். கூர்மையான கண்கள், புருவங்கள் இரண்டு பூச்சிகள், நடந்தால் மூக்கு முன்னால் போகும். அப்புறம்தான் அவன் போவான். அவ்வளவு தீர்க்கமான மூக்கு. குரல் எப்போதுமே இரண்டு மூன்று டெஸிபெல் உச்சம். அட்டகாசச் சிரிப்பு.

அகலமான கை கொடுத்துக் குலுக்கினான். பெரிய சுருட்டு பிடித்துக் கொண்டிருந்ததைஆஷ்டிரே கொள்ளாமல் திணித்து அணைத்துவிட்டு ஜ்யோவைப் பார்த்து, 'ஹலோ' என்றான். நாற்காலியை எங்கேயோ 'எக்ஸ்கியூஸ் மீ' சொல்லி விட்டு இழுத்து வந்து, எங்களருகில் உட்கார்ந்தான். ''ஜ்யோத்ஸ்னா என் கனின்'' என்றேன். ஜ்யோ என்னைப் பார்த்தாள். ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள்.

''ஜேகே. வேர் ஆர் யூ தீஸ் டேஸ்?'' என்றான்.

''இன் ஜெய்ல்'' என்றேன்.

''அப்படியா?'' என்றான்.

''இது ஹுஸேன். என் சினேகிதன், பத்திரிகை நிருபன்'' என்றேன்.

''அப்படியா?'' என்றாள். ஜ்யோவின் சுத்தமான அழகிற்கும்ஹுஸேனின் புஷ் ஷர்ட் அணிந்த காட்டு மிராண்டித்தனத்துக்கும் சரியான எதிர்மறை தெரிந்தது.

''ஹுஸேன்! என்ன சாப்பிடுகிறாய்?'' என்றேன்.

''யாஹ்யா கான் வேண்டும்'' என்றான்.

''ஓ. எஸ். பங்களா தேஷ் அன்வாட் நாட். இங்கே ஏதோ உலக மகாநாடு கூடுகிறார்கள் போலிருக்கிறதே?''

''ஆன்ட்ரே மால்ரோ என்ன சொன்னான் தெரியுமா? ஏன்டா சோம்பேறிப் பயல்களா, பங்களா தேஷுக்காக மகாநாடு கூடுகிறீர்கள்? அங்கே போய் சண்டை போடுங்களேன் என்றான்! ப்ரெஸ் ரிப்போர்ட் எல்லாம் தப்பு. எல்லோரும் கல்கத்தாவிலிருந்து கொண்டு எழுதுகிறார்கள். ஜேகே இங்கே இருந்து கொண்டு என்ன செய்கிறாய்? ப்ரெஸ் க்ளப் வாயேன். பீர் சாப்பிடலாம்'' என்றான். மேலும் ஜ்யோவைப் பார்த்து, ''ப்ரெஸ் க்ளப் பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டான் அவன். ''இல்லை'' என்று சொல்ல, ''சரியான மெனாஜெரி'' என்றான்.

பீர் என்ற சொல் உற்சாகத்தைக் கொடுத்தது எனக்கு. ஜெயிலுக்குப் போவதன் முன் இலவசமாக வரும் தாக சாந்தியை ஏன் விட வேண்டும்? ஜ்யோ இஷ்டமில்லாமல்தான் வந்தாள். அவள் கூட்டமில்லாத சினிமாவுக்குப் போகலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

இம்பாலாவை நான் திறந்த போது ஹுஸேன், ''ஜேகே காரைத் திருட உத்தேசமா?''

தீராத வியாதிகளுக்கு சிறந்த சித்த வைத்தியம்

தவறான பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள், இல்லற இன்பத்தில் திருப்தி இல்லாத நிலைமை, சக்தி விரயமாகுதல், மலட்டுதன்மை களைப்பு, உப்புசம், குஷ்டம், வெண்புள்ளி, தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வயிற்றுவலி, காது மந்தம், முதலியவைகளுக்கு தபால் மூலம் உத்திரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர்

பி. குமாரஸ்வாமி தேவரா,

9-D, சிவாஜி ரோடு,

தி. நகர் - சென்னை-17.

என்று கேட்டான். ''என் கார் தான், வா'' என்றேன்.

விஸில் அடித்துவிட்டு, ''நோட்டு அச்சடிக்கிறாயா?'' என்று கேட்டான்.

''இல்லை, இன்று சாயங்காலம் வரை ஒரு தற்காலிகக் கார்...''

•

ப்ரெஸ் கிளப்பின் பழைய கட்டிடத்தில் பழைய பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்தோம். மூலையில் ஒரு டெலிவிஷன். கீழே கயிற்றுப் பாய்கள். வெயிட்டர் வந்து எங்களைத் தற்காலிக மெம்பர்கள் ஆக்குவதற்கு ஹுஸேனிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு போனான்.

பத்திரிகை ஆசாமிகள் ஒரு தனி ரகம்; தனி ஸ்டீஸிஸ். அவர்கள் பொய்களை ஜோடிப்பவர்கள். உண்மைகளை வார்த்தைகளில் கரைப்பவர்கள். பின்னிரவில் டைப்ரைட்டரின் முன் உட்கார்ந்து கொண்டு ஒரு வார்த்தைக்காக - ஒரே ஒரு வார்த்தைக்காக லெள்ளமாக டீ குடித்து சிகரெட் புகைத்து யோசித்துக் காத்திருப்பவர்கள். அவர்கள் காதுகளில் எப்பொழுதும் டெலிபிரிண்டர் இறையும். அவர்கள் வார்த்தைகளில் எப்போதும் அரசாங்கம் மிதக்கும். தனி ரகம்தான். எத்தனையோ ரத்தங்கள் பார்த்தவர்கள்; எத்தனையோ விமானங்களில் சென்றவர்கள். அச்சியந்திரத்தின் அவசர கதியில் அவர்களின் ஒரே எதிரி காலம்.

யார்யாரோ ஹுஸேனை ஹலோ' செய்தார்கள். அன்றைய கணத்தின் அரசியலை சங்கேத பாஷையில் அலசினார்கள். நான் அவர்களில் அன்னியனாக உணர்ந்தேன். எனக்காவது சில்லென்று பீர் இருந்தது. ஜ்யோதான் என்னையே முறைத்துக் கொண்டிருந்தாள். என்னை இங்கே கொண்டு வந்துவிட்டாயே என்று குற்றம் சாட்டினாள் கண்களால்.

டைப்ரைட்டர் மிஷின் ஒவ்வொரு டிகிரியாக அடுத்தடுத்து தொடர்ந்து செல்ல உதவும் இரண்டு முக்கியமான பாகங்களுக்கு Loose dog (பைத்தியக்கார நாய்?)- Rigid dog (கண்டிப்பான நாய்?) - என்று பெயர். டைப்ரைட்டர் செவ்வனே இயங்க இந்த இரண்டும் மிஷினுக்குள்ளிருந்து அடுத்தடுத்து பணி புரிகின்றன.

-திருச்சி ராஜ்மோகன்

சுற்றிலும் பங்களா தேஷ், இந்திரா, அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி, பாகிஸ்தான் பார்லிமெண்ட்... ஹுஸேன் ஜ்யோவை ஏதோ கேட்க, அவள் அஸ்வாரஸ்யமாகப் பதில் சொல்ல, நான் சடக்கென்று நின்றேன்; ''ஹுஸேன்!'' என்றேன்.

''எஸ், ஜேகே!''

''அந்தப் பையனை உனக்குத் தெரியுமா?''

ஹுஸேன் நான் காட்டியவனைத் திரும்பிப்பார்த்தான். ''தெரியாது. போட்டோகிராபர். இது நிச்சயமாகச் சொல்லலாம். எத்தனையோ ப்ரெஸ் போட்டோகிராபர்கள் வருவார்கள்...''

நான் அந்தப் பையனையே பார்த்தேன். அவன் எங்களிடமிருந்து முப்பது அடி தள்ளி எதிரே ஒரு குறுந்தாடி இளைஞனுடன் பேசிக் கொண்டிருந்தான். அவன்தான் நேற்று என்னை விமான நிலையத்தில் சிகரெட் நெருப்புக் கேட்டவன்; என்னை மறைத்து நிஷாவைத் தப்பிக்கவைத்தவன். அவன் எதிரே ஒரு கண்ணாடி டம்ளரில் மது இருந்தது. அதை அவசரப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''ஹுஸேன், அவன் யார் என்று கண்டுபிடிக்க முடியுமா?''

''ஏன்?''

''ஒரு முக்கியமான காரியம்...''

''வா, அவனையே போய் கேட்டுவிடலாம்.''

''வேண்டாம். அவன் அறியாமல் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''என்ன இது ஸ்பை வேலையாக இருக்கிறது!''

''ஹுஸேன், நான் விவரமாக இதைச் சொன்னால் நேரம் பிடிக்கும். முடியுமா, முடியாதா? சொல்.''

''அவன் எதிரே உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பவன் எனக்கு தெரிந்த ஆள். 'ஹெராஸ்ட்' ஆசாமி. நான் அவனைச் சந்திக்கப் போவது போல் செல்கிறேன்.''

''கொஞ்சம் இரு ஹுஸேன்!'' என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

''அந்த ரூமில் என்ன இருக்கிறது?''

''அங்கேயும் நாற்காலிகள்... மேஜைகள்.''

சத்வைத்தியசாலை (பிரைவேட்) லிமிடெட், நஞ்சன்கூடு, B. V. பண்டிட் அவர்களின்

55 ஆண்டுகளாக

சாதாரணம் பாக்கெட்டில்

I.D.L-612 யர்தரம் பாட்டிலில்

நஞ்சன்கூடு-பல்பொடி

கூந்தல் செழிக்க

நீலா தைலம்

இளநரை தடுக்க

ஜுஜுப் அஜீர்ணம், பித்தசமனி

டோனாடெல் பிரசவத்திற்கும் பிறகு-லேகியம்

பிரசித்தி பெற்றவை.

ஏஜண்டுகள்: யுனைடெட் ... 54, பத்தர் தெரு, சென்னை. மாடுங்கா (பம்பாய்)

''நாங்கள் அங்கே போகிறோம். போன பின் நீ போய் விசாரி'' என்றேன்.

''எதற்கு என்று சொல்லேன்..''

''அப்புறம் விவரமாகச் சொல்கிறேன்.... கம் ஆன் ஜ்யோ.:.''

நானும் அவளும் அடுத்த அறைக்குள் நுழைந்து அங்கே போய் உட்கார்ந்தோம். அந்த அறைக் கதவின் பாதிக்கண்ணாடி வழியாக அந்தப் போட்டோ இளைஞன் தெரிந்தான். அவன் இன்னும் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தான். நிச்சயம் என்னைப் பார்க்கவில்லை.

ஹுஸேன் கையில் கிளாசுடன் அவர்களிடம் போவது தெரிந்தது. அந்தப் பையனுக்கு எதிரே உட்கார்ந்திருந்தவனுடன் கைகுலுக்கி விட்டு ஒரு நாற்காலியை இழுத்துக் கொண்டு உட்காருவது தெரிந்தது; அவர்கள் பேசுவது தெரிந்தது. ஹுஸேனின் நண்பன் அந்தப் பையனை ஹுஸேனுக்கு அறிமுகம் செய்வது தெரிந்தது. ஹுஸேன் அவனுடன் பேசுவது தெரிந்தது.

''ஹுஸேன் கெட்டிக்காரன்'' என்றேன்.

''ஜேகே! எனக்கு ஒன்றும் புரியவில்லை. வா போகலாம்!''

''எனக்கு என்னவோ தோன்றுகிறது. இன்று மாலைக்குள் நான் நிஷாவைக் கண்டு பிடித்துவிடுவேன் என்று....''

''நிஷா யார்?'' என்றாள் ஜ்யோ.

''நிஷா - வயது பதினெட்டு— ஒரு இனிய வெடி மருந்து'' என்றேன். ''அவளைத்தான் நான் நேற்று விமானத்தில் கொண்டு வந்தேன்.''

ஹுஸேன் ஏதோ ஜோக்சொல்ல, அவர்கள் இருவரும் சிரிப்பது தெரிந்தது. கேட்கவில்லை. அந்தப் பையன் சற்று அடக்கத்துடன், சிரித்துச் சுற்று முற்றும் பார்த்தவன்.....

என்னைப் பார்த்து விட்டான். அவன் சிரிப்பு நின்று விட்டது. சட்டென்று தன் பானத்தை ஒரு மடக்கில் குடித்தான். அவர்களிடம் ஏதோ மன்னிப்புக் கேட்பது போல் தெரிந்தது. மறுபடி என்னை ஒரு தடவை பார்த்துவிட்டு எழுந்து அவர்களிடம் கைகுலுக்கி விட்டு விருட்டென்று சென்று விட்டான்.

''ஹுஸேன், ஹுஸேன்! அவனைப் பிடி'' என்றேன். ஹுஸேன் இன்னும் உட்கார்ந்திருந்தான். என்னைப் பார்த்தான். நான் எழுந்து நின்றேன். அவனைக் கூப்பிட்டேன். ஹுசேன் மிச்சமிருந்தவனுடன் இன்னும் கொஞ்சம் பேசிவிட்டு எழுந்து என்னை நோக்கி வந்தான்.....

''ஹுஸேன்! அவன் எங்கே போய் விட்டான்?'' என்றேன்.

''வேலை இருக்கிறது என்று கிளம்பி விட்டான்.''

''ஹுஸேன்! அவனைப் பிடிக்க வேண்டும்! உடனே பிடிக்க வேண்டும்.''

''அவன் யார் என்று தெரிந்து கொள்ளத்தானே விரும்பினாய்?''

''அவன் யார்?''

''அவன் ஒரு போட்டோ கிராபர். தனிப்பட்டவன். ஃப்ரிலான்ஸர். ப்ரெஸ் வேலைகள் செய்வானும். கனுட் ப்ளேஸில் எங்கேயோ ஜி பிளாக்கில் ஒரு சின்ன ஸ்டூடியோ வைத்திருக்கிறானும். ரெயின்போ ஸ்டூடியோவோ என்னவோ சொன்னான்.''

''இதை அவனே சொன்னானா?''

''இல்லை. அவன் போன பின் அவன் நண்பனிடம் கேட்டேன். எங்கே போகிறாய்!''

''எனக்கு வேலை இருக்கிறது! கமான் ஜ்யோ. ஹுஸேன், எல்லாவற்றிற்கும் தாங்க்ஸ். மறுபடி சந்திப்போம்'' என்று ஜ்யோவை இழுத்துக்கொண்டு கிளம்பியவன் மறுபடி தயங்கினேன். ''ஹுஸேன்! இங்கே டெலிபோன் இருக்கிறதா?'' என்றேன்.

அவன் என்னை அழைத்துச் செல்ல, டெலிபோனுக்குச் சென்று நிஷாவின் தந்தைக்கு டெலிபோன் செய்தேன்.

''காப்டன் ஜேகே பேசுகிறேன். ஒரு முக்கியமான விஷயம்.''

''காப்டன் எங்கே இருக்கிறாய்? அப்பாடா! உன்னை எங்கெல்லாம் தேடுவது...?''

''நான் அலைந்து கொண்டிருந்தேன். நிஷா நேற்றுத் தப்பித்தாளே, அதற்கு உடந்தையாக இருந்தவனைப் பற்றிக் கொஞ்சம் தகவல் தெரிந்தது. கனுட் ப்ளேசில் ஜி பிளாக்கில்....''

''காப்டன் ஜேகே!''

''எஸ் ஸார்!''

''உனக்குத் தெரியவேண்டியது நிறைய இருக்கிறது.''

''என்ன ஸார்?''

''உடனே என் வீட்டுக்குக் காரை எடுத்துக்கொண்டு வா. விஷயம் ரொம்ப சிக்கலாகிவிட்டது.''

''இல்லை ஸார், நிஷாவைக் கண்டு பிடிக்காமல்....''

''நிஷாவைக் கண்டுபிடிக்க வேண்டாம்.''

''ஏன்?''

''அவள் இங்கு என்னிடம் இருக்கிறாள். இப்போது தான் வந்தாள். ஆனால்!''

''ஆனால் என்ன?''

''நீ நேரே வா, சொல்கிறேன்.''

—தொடரும்.

''அப்பா!''

''என்னம்மா சித்ரா?''

''நம்ம பாபு இல்லேப்பா, அவன் கிட்டேயிருந்து புதுசா ஏதோ ஸ்மெல் வரதுப்பா. கேட்டா சொல்ல மாட்டேங்கறும்பா.''

''என்னது... ஸ்மெல்லா...? டேய் பாபு.. இங்கே வாடா... என்ன பதிலே இல்லை?...அவன் இல்லையாம்மா?''

''ஓ.. இப்போ மாடியிலே இருந்தானேப்பா.''

''ஓகோ..துரைக்குக் கூப்பிடறது கூடக் காதிலே விழலே போலிருக்கு.. இதோ போய் அவன் தோலே உறிக்கிறேன்.''

''டேய் பாபு.. இங்கே வாடா! வாடான்னா.. அடபாவி! மூக்கைத் துளைக்கிறதே... அதுக்குள்ளே உனக்கு இதெல்லாம் கேக்கறதா? உன்னை என்ன பண்ணறேன் பாரு, ராஸ்கல்.''

''அப்பா.. அப்பா.. தெரியாம செஞ்சுட்டேன். இனிமேல் சத்தியமா அதைத் தொடமாட்டேன். இந்த ஒரு தடவை மட்டும் மன்னிச்சுடுங்கப்பா.''

''என்ன காலங்கார்த்தாலே பையனைக் கவனிக்க ஆரம்பிச்சுட்டிங்களாக்கும்.'' — இது மனைவி கமலா.

''அப்பாவுக்குக் கோபம் வரும்படி என்னடா கண்ணு செஞ்சே?''

''அவனை ஏண்டி கேக்கறே? என்னைக் கேளு. எவ்வளவோ கஷ்டப்பட்டு புதுசா இப்பத்தான்வந்திருக்கேன்னு ஒருபாட்டில் வாங்கி எனக்குன்னு ஒளிச்சு வச்சிருந்தா, எனக்கு முன்னாடியே அவன் அதை எடுத்து... ஸ்மெல் வரது பாரேண்டி அவன் கிட்டே இருந்து..?''

''ஐயோ... என்ன.. பாட்டிலா?''

''ஆமாண்டி... பாட்டில் தான்... ஹோர் ஆயில்!''

எஸ். ராமகாமி

"நிஷாவைச் சந்திக்கிறாயா, ஜ்யோ?" என்றேன்.

"உன் நண்பன் ஹுஸேனைத் தவிர வேறு யாரை வேண்டுமானாலும் சந்திக்கத் தயார். பார்வையாலேயே என் சட்டையைக் கழற்றி விட்டான்" என்றான்.

நான் கடமைக்குச் சிரித்தேன். என் மனம் பூராவும் நிஷாவின் விநோத நடத்தைதான் வியாபித்திருந்தது. காருக்குச் சென்றோம். நிஷாவை முதலில் சந்தித்ததிலிருந்து அவளைத் தவறவிட்ட வரை அவள் பேசின வார்த்தைகள் ஞாபகம் வந்தன. பிரயாணத்தின்போது நேற்று முதல் நாள் இரவு அந்த விமானநிலையத்தின் ரெஸ்ட்ரூமில்.. அங்கே அவள் கலபமாகத் தப்பித்திருக்கலாம். காலை என்னிடம் சாவியை எறிந்துவிட்டு, "தப்பிக்க இன்னும் சமயம் வரவில்லை" என்று அவள் சொன்னதில் தென்பட்ட ஒரு நிர்ணயம் ஒரு குறிக்கோள்... அங்கு ஏன் தப்பிக்கவில்லை? இங்கு டில்லியில் ஏன் தப்பித்தாள்? தன் தந்தையைச் சந்திக்க விரும்பவில்லையா? (கார் சென்று கொண்டிருந்தது) அப்படியும் இல்லையே? தானாகவே தந்தையிடம் வந்து சேர்ந்து விட்டாளே! இந்த இடைநேரத்தில் என்னதான் செய்தாள்? யாரைச் சந்தித்தாள்? அந்தப் போட்டோ இளைஞனுடன் எங்கு சென்றாள்?

பொதுவாகவே நேற்று நிகழ்ந்த சம்பவங்களின் வானிலையில் ஒரு எச்சரிக்கை இருக்கிறதாகத் தென்பட்டது எனக்கு. அந்த எச்சரிக்கையை என்னால் சரியாகப் படிக்க முடியவில்லை.

மறுபடி நிஷாவின் தந்தையின் வீட்டை அடைந்தேன். ஜ்யோ, "நான் வர வேண்டுமா? காரில் இருக்கிறேனே" என்றாள்.

"கார் இனி நமதில்லை கண்ணே" என்றேன்.

இருவரும் முகப்பறையில் காத்திருந்தோம். நிஷாவின் தந்தை துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தார். "காப்டன் ஜே.கே! அட் லாஸ்ட்" என்றார்.

"அவன் எப்படி இருக்கிறான்? எங்கே போயிருந்தாளாம்?" என்றேன்.

"பேசவே மாட்டேன் என்கிறான். ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறான். மாடியில் உட்கார்ந்திருக்கிறான். சாப்பிட மறுக்கிறான்" என்றார்.

"நான் அவனைச் சந்திக்கிறேன். என்னிடம் பேசுவான்" என்றேன்.

"ட்ரை" என்றார்.

[illegible] கொண்டிருந்த ஜ்யோவை, "இரு வருகிறேன்" என்று உட்கார வைத்துவிட்டு மாடிப்படி ஏறி அவர் காண்பித்த அறைக் கதவைத் திறப்பதற்கு முன் கீழே நிஷாவின் தந்தையின் கவலை தோய்ந்த முகத்தை ஒரு தடவை பார்த்தேன்.

நான் உள்ளே சென்றேன். அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நிஷா!" என்றேன்.

நிஷா என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

இங்கேதான் இந்தக் கதையின் சிக்கலான முடிவு ஆரம்பம். ஒரு அரை மணி நேர நிகழ்ச்சியை நான் இப்பொழுது சொல்லப் போவதில்லை. அதற்கு என்று ஒரு சமயம் வரும்போது சொல்கிறேன். காட்சியை அரைமணி தள்ளி அமைப்பதற்கு அனுமதி கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஜ்யோவுடன் மறுபடி அந்தக் காரில் விரைந்தேன். பின் சீட்டில் நாங்கள் உட்கார்ந்திருக்க, முன்னே எனக்கு ஒத்தாசைக்காக அனுப்பப்பட்ட ஒருவன் மௌனமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். என் மனம் விவரம் புரியாத இந்த நிழல் தேடும் விந்தையில் குழம்பி இருந்தது. கனாட் ப்ளேஸில் ஜி பிளாக் என் முதல் அவசரம். ஞாபகம் இருக்கிறதா? நிஷா தப்பிப்பதற்கு உடந்தையாக இருந்தவன் ஒருத்தனை—அந்த இளைஞனை மறுபடி நான் ப்ரெஸ் க்ளப்பில் பார்த்தேனே! பார்த்து என் நண்பன் ஹுஸேன் மூலம் அவன் யார், அவன் ஜி ப்ளாக்கில் போட்டோ ஸ்டூடியோவில் இருக்கிறான் என்று கண்டுகொண்டேனே! என்னைப் பார்த்ததும் ஓடிவிட்டானே...

ஜி ப்ளாக் அருகில் நிறுத்தச் சொன்னேன். அந்த ஸ்டூடியோ உள் வட்டத்துக்கும் வெளி வட்டத்துக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்ட வட்டத்தில் இருந்தது. வாயிலில் சில பெண்கள் மார் திறந்து சிரித்துக் கொண்டிருந்தார்கள் — போட்டோக்களில். இந்தியாவில் செய்யப்பட்ட பாக்ஸ் காமிராக்கள் ஜன்னலை அலங்கரித்தன. ஒரு ஆளையே ஆறு போஸ் எடுத்து இரண்டு ரூபாய் கேட்டது விளம்பரம். நான் ஸ்டூடியோவுக்கு உள்ளே செல்லவில்லை. எதிரே இருந்த பஞ்சாபி ஓட்டலில் நுழையத் தீர்மானித்தேன். ஒரு கண்ணில்லாத பையன் மாலைச் செய்தித் தாள் விற்றுக்கொண்டு தடவி நடந்து சென்றான். அவனை நிறுத்தி அவன் கையில் காசு வைத்துவிட்டு ஓட்டலில் நுழைந்து முதல் மேஜையில் உட்கார்ந்து எதிரே ஸ்டூடியோவைக் கண்காணித்தேன். ஒரு டீ ஆர்டர் செய்தேன். பேப்பரைப் பிரித்தேன். "பங்களா தேஷ் அகதிகள் ஒன்பது மிலியன் எண்ணிக்கையைக் கடந்து விட்டார்கள்." டீ வந்தது. எதிரே ஸ்டூடியோவைப் பார்த்தேன். சலனமில்லை. "மல்ஹோத்ரா புதிய பாலத்தை இன்று திறக்கிறார். எத்தனையோ லட்சம் செலவில் கட்டிய பாலம்."

டீயை ஆற வைத்து எதிரே பார்த்துக் கொண்டே குடித்தேன். "நேருக்கு நேர் - அன்று மாலை பிரதமர் இளம் பெண்களைச் சந்திக்கிறார்." அந்த ஸ்டூடியோவிலிருந்து அந்த இளைஞன் வெளி வந்தான். அவன் தான்! நான் செய்தித் தாளால் முகத்தை மறைத்துக்கொண்டேன். அதற்காகத்தானே வாங்கினேன்.

அவன் ஒரு காமிரா வைத்திருந்தான். ஸ்டூடியோவுக்கு எதிரே நிறுத்தப்பட்டிருந்த ஒரு ஸ்கூட்டரைத் திறந்து உதைத்துக் கிளப்பினான். உடனே புறப்பட்டான். நான் அவசரமாகமுப்பதுபைசாவை சர்தார்ஜியிடம் இறைத்து விட்டுக் கிளம்பி எங்கள் காருக்கு வந்தேன். "அதோ பார் ஒரு ஸ்கூட்டர் போகிறதே டி எல் எச் 2520 அதைப் பின்பற்று" என்று அவசரம் கலந்தேன். மௌனமாகப் புறப்பட்டது கார்.

ரீகல் தாண்டி, பார்லிமெண்ட் தெருவில் திரும்பி ஜந்தர் மந்தர் வரை சென்று சாலை ஓரத்தில்அவன் நிறுத்தினான். நாங்கள் சற்றுப் பின் வாங்கி நின்றோம். அவன் நடந்தான். பெரிய கேட்டுக்குள் நுழையாமல்

சுவரோடு நடந்து சந்து மூலைக்குச் செல்வது தெரிந்தது. நாங்கள் ஊர்ந்தோம். சந்து முனையில் ஒரு [illegible] அருகே சென்றான். அதன் பின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த யாரிடமோ தன் காமிராவைக் கொடுத்து விட்டுத் திரும்ப தன் ஸ்கூட்டரை நோக்கி நடந்தான். பியட் கார் உடனே புறப்பட்டு எங்கள் அருகில் வந்து கடந்தது. அதில் மூன்று பேர் இருந்தார்கள். ஒரு பெண். காமிராவை அவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கார் சாலையில் மற்ற கார்களுடன் கலந்து, நான் மேலே என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்குள், கரைந்து மறைந்து விட்டது.

இளைஞன் தன் ஸ்கூட்டரை உதைத்து ஏறிக் கொண்டான். என் டிரைவர், ''என்ன செய்ய?'' என்றான்.

''அந்த பியட் காரைத் தொடர நினைத்தேன்'' என்றேன்.

''எந்த பியட் கார்?'' என்றான். சரிதான் என்று அலுத்துக் கொண்டு, ''அந்த ஸ்கூட்டரைத் தொடரு'' என்றேன்.

இளைஞன் மறுபடி ஜி பிளாக் சென்று அந்த ஸ்டுடியோவுக்கு எதிரே தன் ஸ்கூட்டரை நிறுத்தினான். நிறுத்தி உடனே உள் சென்று ஒரு கதவைத் திறந்து உள்ளே செல்வது தெரிந்தது. ''ஜ்யோ! சீக்கிரம் என்னுடன் வா'' என்றேன்.

ஜ்யோவும் நானும் அந்த ஸ்டுடியோவுக்குள் நுழையுமுன் அவளிடம், ''ஒன்றும் பேசாதே. சும்மா அழகாக இருப்பது உன் வேலை. பேசக்கூடாது'' என்றேன்.

''திஸ் இஸ் த்ரில்லிங்'' என்றாள் ஜ்யோ.

போட்டோ ஸ்டுடியோவில் நடுத்தர வயது ஆசாமிஒருத்தன் பட்டையிடும் கண்ணாடிக்குக் கீழே சிரித்தான். அவன் தலையில் பழைய ரூபாய் அளவு வழுக்கை தெரிந்தது.

''குட் ஈவினிங்'' என்றேன்.

''குட் ஈவினிங்'' என்றான் ஜ்யோவைப் பார்த்துக் கொண்டு. ''என்ன வேண்டும்?''

''இந்தப் பெண்ணை போட்டோ எடுக்க வேண்டும்.''

அவன் உடனே ஜ்யோவை இன்னும் சுவாரஸ்யமாகப் பார்த்தான். ஜ்யோ மிக அழகாகச் சிரித்தாள்.

''ஹலோ'' என்றாள்.

''என்ன சைஸ்'' என்றான்.

''36'' என்றாள் ஜ்யோ.

''நான் போட்டோவின் சைசைச் சொன்னேன்'' என்றான். அவள் காதுகளின் ஓரத்தில் சிவந்தாள். ஏற்கெனவே ஜ்யோ சாலையில் போக்குவரத்தை நிறுத்தக் கூடியவள். இன்று அவள் மிகவும் விண் என்று இருந்தாள். அவள் சிரிப்பு

அந்த நடுத்தர வயது மனிதனின் இளமை ஞாபகங்களைக் கிளறி இருக்க வேண்டும்.

''நாலைந்து போஸ்களில் எடுக்க வேண்டும், சற்று கவர்ச்சிகரமாக'' என்றேன். அவன் கைகளை உரசிக் கொண்டான். என் கவனம் அந்த இளைஞன் உள்ளே சென்ற அந்தக் கதவிலேயே இருந்தது. ''க்ளாட்லி ஸார்; ஒன்மினிட். ஸ்டுடியோ ரெடியாக இருக்கிறதா என்று பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு தனக்குப் பின் இருந்த நீலத் திரைக்குள் மறைந்தான். நான் அவசரமாக, ''ஜ்யோ, நான் வரும் வரை இவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிரு'' என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் சென்ற கதவைச் சட்டென்று திறந்து பார்த்தேன். மாடிப்படி தெரிந்தது. உள் சென்று கதவை மூடிக் கொண்டேன். குறுகலான இடம். குறுகலான மாடிப்படி. நான் சற்று நிதானித்துக் கொண்டேன். நின்றேன்.

''எங்கே அவர்?'' என்று கதவுக்கு வெளியே கேள்வி கேட்டது.

''கார் வரை போயிருக்கிறார். செக் புத்தகம் எடுத்து வர'' என்றாள் ஜ்யோ. குட் ஓல்ட் ஜ்யோ.

''அவர் உங்கள் கணவரா?''

''ஆம்'' என்றாள். ''சற்று இருங்கள். அவர் வந்துவிடுவார். அந்தக் காமிரா என்ன விலை?''

நான் கவனமாக மாடிப்படி ஏறினேன். மேலே செல்லச் செல்லப் பேச்சுக் குரல் கேட்டது. நிரம்பக் குப்பையாக இருந்தது. ஏதோ ஒரு வருஷத்துக்கு முன்பு போட்ட நாடகத்தின் சாதனங்கள் போல சில கண்டா முண்டா சாமான்கள் கிடந்தன. ஒரு காரிடார் தெரிந்தது. ஜன்னல் தெரிந்தது. ஜன்னல் திரைக்குப் பின் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. உள்ளேதான் பேச்சுக் குரல் கேட்டது. 'தியேட்டர் க்ராஃப்ட்ஸ்' என்று ஒரு போர்டு தெரிந்தது.

சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு சென்று ஜன்னலுக்கு உள் எட்டிப் பார்த்தேன். அது சிறிய அறை. சுவரில் சிவப்பில் ஒரு பெரிய கூட்டல் அடையாளம். குழந்தைக் கிறுக்கல்போலத் தெரிந்தது. மாடர்ன் ஆர்ட் அல்லது ரத்தமா? அறை ஓரத்தில் கட்டாக வெற்றுக் காகிதங்கள் அடுக்கி இருந்தன. அந்த அறையின் மட்டத்துக்குச் சற்று உயரம் அதிகமாக மற்றொரு அறை தெரிந்தது. அது பூட்டி இருந்தது.

ஒரு மேஜை அருகில் இரண்டு கிழட்டு நாற்காலிகள் இருந்தன. அதில் இரண்டு இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவன் எழுதிக் கொண்டிருந்தான். மற்றவன், ஸ்டூடியோ டெலிபோனில் எக்ஸ்டன்ஷன் போலும். அதில் பேசிக் கொண்டிருந்தான். அவன்தான் நான் பார்த்தவன். நான் தொடர்ந்தவன்.

அவன் பெங்காலி பாஷையில் பேசிக் கொண்டிருந்தான். எனக்கு பெங்காலியில் தெரிந்த ஒரு சில [illegible]கள், நடு நடுவே தப்[illegible] ஒரு சில இங்கிலீஷ் வார்த்தைகள், சில பெயர்கள் இவைகளை வைத்துக்கொண்டு எனக்குப் புலப்பட்டது இவ்வளவே:

மாலை

6:45

காமிரா

ஸப்தர்ஜங் ரோடு,

தயார்

விஜயம்

''அமி ஆல்சி'' என்று டெலிபோனை வைத்தான்.

''ஹொலோன்'' என்றான். அவர்கள் எழுந்தார்கள். நான் உடனே கிளம்பி ஓடத் துவங்க, ஒரு டப்பா உருண்டது. அவர்கள் இருவரும் வெளியே பாய்ந்து வந்தார்கள். நான் தயங்கிவிட்டேன்.

அவர்கள் இருவரும் என்னைப் பார்த்தார்கள். ''யார் நீ?'' என்றான் ஒருவன். நான் ஓடி இருக்கலாம். ஆனால் அந்த இளைஞர்களிடம் எனக்குப் பயம் ஏற்படவில்லை. அந்த அறைக்குள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்க்க ஆவல். மற்றவன் என்னை அடையாளம் கண்டு கொண்டுவிட்டான். பெங்காலியில் பேசினான். பைலட் என்று ஒரு வார்த்தை தென்பட்டது.

''ஓ!''

மற்றவன், ''எதற்காக நீ இங்கு வந்தாய்?'' என்றான். நான் அவர்களை நெருங்கினேன். ''மே ஐ கம் இன்?'' என்றேன் அறை வாசலில். அவர்கள் இருவரும் என்னை மிகவும் சந்தேகத்துடன் பார்க்க ஒருவன் சடக்கென்று உள் சென்று டிராயரைத் திறந்து கத்தியை எடுத்து அதை மடக்கித் திறந்தான்.

''வாட் இஸ் ஆல் திஸ்?'' என்றேன்.

''கிட்டே வராதே. கிழித்து விடுவேன்'' என்றான்.

''நான் சண்டை போட வரவில்லை. சில கேள்விகள் கேட்க வந்தேன். அந்தப் பெண்ணை நேற்று எங்கே அழைத்துச் சென்றீர்கள்?''

''எந்தப் பெண்? என்ன சொல்கிறாய்?''

''எனக்கு எல்லாம் தெரியும்'' என்றேன். அவர்கள் இருவர் கண்களிலும் உடனே பயம் தென்பட்டது.

''தருண்! கில் ஹிம்'' என்றான்.

சின்னப் பையன் கத்தியுடன் என் மேல் பாய்ந்தான். நான் அவன் கையைப் பற்றிக் கத்தியை உதிர்த்து அவனைச் சுவரில் ஒரு மோது மோதினேன். மற்றவன் ஆயுதம் தேடி நாடக சாதனங்களில் ஒரு கதை போல் எதையோ எடுத்து என் தலைமேல் மோதினான். அட்டையாதலால் வலிக்கவில்லை. அவன் தாடையில் என் இடது கையை வைத்துத் தள்ளின தள்ள

லில் அவன் [illegible] விழுந்தான். அவர்கள் இருவரு— என்னிடம் மறுபடிவர நான் சௌமியாக ஒருவன் வயிறில் [illegible] காலால் முட்டினேன். மற்றவன் ஒல்லியான கைகளை வீசியது சுவரில் பட்டது. மிக இளைஞர்கள். என்னவோ அசுத்தமாகக் காட்டடி தான் தெரிந்திருந்தது. தருண் என்பவன் எழுந்திருக்கும் வரை காத்திருந்தேன். ''கதவைத் திற கதவைத் திற'' என்று கத்தினான். மற்ற இளைஞன் மேஜை டிராயரை இழுத்து சாவிக் கொத்தை எடுத்தான். நான் அவனை அடைந்து கலபமாக சாவிக் கொத்தை பிடுங்கிக் கொண்டேன். அவன் வாய் ஓரத்தில் ரத்தம் வர ஒரு தடவை முஷ்டியால் அடித்தேன். நான் நல்ல திமிரில் இருந்தேன். அரிசிச் சோறு தின்னும் 'தியரி' பேசும் இளைஞர்கள் சாமர்த்தியமில்லாமல் சண்டை செய்யும் ஒல்லிகள். எனக்கு அவர்களைத் தட்டத் தட்ட சூடு பிறந்தது. காகிதங்கள் சிதறின. டெலிபோன் தொங்கியது. மேஜைக் கால்கள் வானம் பார்த்தன. மூக்கோட்டையில் ரத்தம் கசிந்தது. ஒரே சப்தம்.

ஜன்னல் வழியாக இரண்டு முகங்கள் தெரிந்தன. 1. ஜ்யோவின் முகம். 2. அந்த ஸ்டூடியோ ஆசாமியின் முகம். ''பாப்ரே என்ன சண்டை!'' என்றான்.

''ஜ்யோ! உடனே கீழே போய் போன் செய்து போலீஸ் அனுப்பச் சொல்லு.''

போலீஸ் என்று சொன்னதும் அந்த இளைஞர்களுக்குத் தீவிரமான சக்தி வந்திருக்க வேண்டும். ஒரே மோதலில் இருவரும் அறை வாசலை நோக்கிப் பாய்ந்தார்கள். நான் அவர்களைப் பிடிப்பதற்குத் தகுதியான இடத்தில் இல்லை. ஒருத்தனின் சட்டை மட்டும்தான் அகப்பட்டது. வெளியே ஓடினார்கள்.

மாடிப்படி அதிருவது கேட்டது. நான் ஓடி இறங்கி ஸ்டூடியோ வாசலுக்கு வந்தேன். அவர்களைக் காணவில்லை. மிக சுறுசுறுப்பாகக் கார்களும் சைக்கிள்களும் விரைந்து கொண்டிருந்தன. இடது வலது பக்கம் பார்த்தேன். ம்ஹூம். தப்பித்து விட்டார்கள்.

மறுபடி மாடிக்கு வந்தேன். ''சாச்சா!' என்று வழுக்கை ஆசாமியைக் கூப்பிட்டேன். ''சாச்சா! நான் யார் தெரியுமா? நான் போலீஸ், இவர்கள் யார் சொல்லு.''

''ஹூஸூர், எனக்கு ஒன்றும் தெரியாது. நான் கூலிக்காரன்.''

''சாச்சா, உதை வேண்டுமா?''

''வேண்டாம்.''

''இந்த இளைஞர்கள் யார்?''

''அவர்கள் விவகாரமே எனக்குத் தெரியாது. சின்னப் பயல்கள் வந்து போகிறார்கள். மேலே அறையில் கூடிக் கூடிப் பேசுகிறார்கள்.



எழுத்தாளர்: ஒரு சிறு கதை எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். பார்க்கிறீர்களா...?

ஆசிரியர்: மன்னிக்கணும். இன்னும் ஆறு மாசத்துக்கு வேண்டிய கதைகள் கைவசம் இருக்கு. அப்புறம் பார்க்கலாம்!

எழுத்தாளர்: கதையின் தலைப்பு: 'மனைவியை விட ஆயிரம் மடங்கு அழகிய வேலைக்காரி அமைந்த போது...'

ஆசிரியர்: அப்படியானால் கொடுத்து விட்டுப் போங்கள். அடுத்த வார அட்டைப் படக் கதையாக வெளியிட முடியுமா என்று பார்க்கிறேன்!

இந்த ஸ்டூடியோ ஓனருக்கு எல்லோரும் சினேகிதம். நான் வெறும் கூலிக்காரன்... காமிராவை ரிப்பேர் செய்து கொடுத்தேன்...''

''சாச்சா என்னுடன் வா''என்று மறுபடி மாடிக்குச் சென்றேன். அந்த அறைக்குச் சென்று என் கையிலிருந்த சாவிக் கொத்தில் இருந்த சாவிகளை ஒன்றொன்றாகப் பார்த்து ஒரு சாவியால் அந்த உள்ளறை [illegible] திறந்தேன். இருட்டு [illegible]. கவரில் தடவி விளக்குப் போட்டேன்....

[illegible] அறை அது. அதில் ஒரு டிரெடில் அச்சியந்திரம் இருந்தது. காகிதங்கள் இறைந்திருந்தன. கெரோஸின் வாசனை அடித்தது. ஒரு டின் கெரோஸின் ஓரத்தில் இருந்தது. சில பாட்டில்கள் கிடந்தன. திரிகள்! ப்ளாஸ்டிக் பலூன்கள்! டெலிபோனை எடுத்து 'எக்ஸ்சேஞ்ச்' பட்டனை அழுத்தி நிஷாவின் தந்தைக்கு டெலிபோன் செய்தேன்.

''ஸார், காப்டன் ஜேகே ஸார். நான் கனட் ப்ளேஸில் ஜி ப்ளாக்கில் அந்த போட்டோ ஸ்டூடியோவிலிருந்து பேசுகிறேன். விஷயம் விபரீதமாக இருக்கிறது...''

''என்ன?''

''மாடியில் ஒரு சிறு அச்சகம் இருக்கிறது. இரண்டு இளைஞர்கள் தப்பித்து ஓடினார்கள். கெரோஸின் வைத்து ப்ளாஸ்டிக் பாம், மாலடாவ் காக்டெய்ல் தயாரிக்க சாதனங்கள் எல்லாம் இருக்கின்றன..''

''இஸ்! இட்!'' என்றார். ''அங்கேயே இரு. நான் பார்லிமெண்ட் ஸ்டிரீட் போலீஸ் நிலையத்துக்குச் சொல்லி உடனே ஃப்ளைட் ஸ்குவாடை அனுப்பச் சொல்கிறேன். வேறு ஏதாவது தெரிந்ததா?''

''அவர்கள் பேசிக் கொண்டிருந்தது கொஞ்சம் கேட்டது. பெங்காலியில் பேசிக் கொண்டிருந்தார்கள். சரியாகப் புரியவில்லை. ஆனால் அவர்கள் ஏதோ பெரிசாக உத்தேசித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அந்த இளைஞன் மாலை ஒரு காமிராவைக் கொண்டு போய் காரில் காத்திருந்த ஒரு கோஷ்டியிடம் கொடுத்து விட்டு இங்கு திரும்பி வந்தான்...டெலிபோனில் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தான். மாலை 6-45 என்றான். ஸஃப்தர் ஜங் ரோடு என்றான். காமிரா என்றான்...''

''ஸஃப்தர் ஜங் ரோடா?''

''ஆம்!''

''ஜேகே! கேள்! இப்பொழுது நேரம் என்ன??'

''6-35.''

''ஜேகே! விஷயம் மிகத் தீவிரம். போலீஸ் வருவதை மற! உடனே புறப்பட்டு நம்பர் ஒன்று ஸஃப்தர் ஜங் ரோடுக்குவா. உடனே உடனே! நான் உன்னை அங்கு சந்திக்கிறேன். மிக அவசரம்!'' என்றார். 'கடக்' என்று வைத்தார்.

''கமான் ஜ்யோ!'' என்றேன்.

''எங்கே?'' என்றாள்.

''பாரதப் பிரதமரின் வீட்டுக்கு'' என்றேன். ''இப்பொழுது மணி 6-35. 6-45 க்குள் அங்கு நான் இருக்க வேண்டும்'' என்றேன்.

''முடியுமா?'' என்றாள்.

—தொடரும்

D.P.F என்றால் என்ன?

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த புதிதில், ஆங்கிலத்தில் அதை Dravidian Progressive Federation என்றே அழைத்தனர்.

-வெங்கி

COMICS PDF TIMES

சுஜாதா

அரை மணி நேர நிகழ்ச்சியைச் சொல்லாமல் விட்டிருந்தேன் அல்லவா? அதைச் சொல்லி விடுகிறேன்.

மாடிப் படி ஏறி அந்தக் கதவைத் திறந்து-நிஷாவின் வீட்டில்-'நிஷா' என்று கூப்பிட்டேன் அல்லவா? அந்தப் பெண் திரும்பினாள் அல்லவா? அவளைப் பார்த்ததும் நான் அதிர்ச்சியுற்றேன். உடனே அறையை விட்டு வெளியே வந்து கீழே நிஷாவின் தந்தையைக் கூப்பிட்டேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

''ஸார்! அறையில் இருக்கும் பெண்தான் உங்கள் மகள் நிஷாவா?''

''ஆம் ஏன்?''

''நான் விமானத்தில் கூட்டி வந்தது இவளை அல்ல! ஸார், விஷயம் விபரீதமாக இருக்கிறது. சற்று மேலே வாருங்கள்.''

அவர் இரண்டிரண்டாகப் படி ஏறி மேலே வந்தார்.

''ஜேகே என்னசொல்கிறாய் நீ?''

''இந்தப் பெண் எப்படி இங்கே வந்தாள்?''

''இவள்தான் நிஷா; வந்ததிலிருந்து அவள் பேசவே இல்லை. பிரமித்து நிற்கிறாள். நீ கூட்டி வந்தாய் என்றுதான் முதலிலிருந்தே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதை நான் சந்தேகிக்கவே இல்லை!''

''இவள் பேசவே இல்லையா?''

''இல்லை. சற்று விட்டுப் பிடிக்கலாம் என்றிருந்தேன்....''

நான் உள்ளே சென்றேன். ''நிஷா'' என்றேன்.

அவள் என்னைப் பார்த்தாள். அவள் கண்கள் அகலமாக இருந்தன. தலை முடி இரண்டு பக்கங்களிலும் தொங்கியது. பெரிய மலர்கள் விரவிய சட்டை அணிந்திருந்தாள். வேறு பெண்! அவளல்ல இவள்!

''நிஷா, என் பெயர் ஜேகே. நான் ஒரு பைலட். நான் ஒரு பெண்ணை விமானத்தில் அழைத்து வந்தேன், உன்னை என்று நினைத்துக்கொண்டு. அதாவது நீ என்று நினைத்துக் கொண்டு. அது நீ இல்லை. அது யார் என்று கண்டு பிடிக்க வேண்டும் அதற்கு உன் உதவி வேண்டும். நான்கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். ப்ளீஸ்!'' என்றேன்.

''புரியவில்லை'' என்றாள்.

மறுபடியும் முதலிலிருந்து அடியைப் பிடித்து விவரமாகச் சொன்னேன். ''நீ எப்படி இங்கு வந்தாய்? கல்கத்தாவில் நீ ஹாஸ்டலை விட்டு எங்கு சென்றாய்?''

''பனாரஸ்'' என்றாள்.

''யாருடன்?''

''சில நண்பர்களுடன்.''

''பனாரஸில் என்ன செய்தாய்?''

''உண்மையைத் தேடினேன்.''

சரிதான்! இது ஹிப்பி ரகம் போலிருக்கிறது.

''எத்தனை நாட்கள் உண்மையைத் தேடினாய்?''

''ஒரு வாரம், என் நண்பர்கள் என்னிடம் இருந்த எல்லாவற்றையும் திருடிக்கொண்டு என்னை விட்டு விட்டார்கள்!'' அவள் மூக்கு சுருங்கியது, அழுகைக்கு அஸ்திவாரமாக.

''ரயிலேறி இங்கு வந்து விட்டாயா, டிக்கெட் இல்லாமல்?''

''ஆம்'' என்று சொல்லி விசித்து அழ ஆரம்பித்தாள்.

''தேர் யூ ஆர்; ஸாரி! நிஷா, அழாதே! ஒன்றும் நடந்து விடவில்லை. உன் அப்பா இன்னும்

அங்கே நேரிக்கிறாள் என் அப்பா அவளுக்காக...''

''அந்த பையன் மிகவும் கெட்டவர்கள்!''

''அவர்களைப் பிரித்து விடலாம். கவலைப்படாதே, நிஷா.''

''நேரு! நீ கூட்டி வந்த பெண் யார்?''

''அப்பா! நீங்கள்தான் சொல்ல வேண்டும். அந்தப் பெண் ஒரு நக்சல் பெண். என்னுடன் அவள் வந்ததிலிருந்து ஒரு திட்டம், நன்கு அமைக்கப்பட்ட திட்டம் இருந்திருக்கிறது. வழியில் அவளுக்குத் தப்பிக்க இரண்டு சந்தர்ப்பங்கள் இருந்தன. அவள் தப்பிக்கவில்லை. டில்லியில்தான் தப்பித்தாள். அந்த இளைஞன் உதவி இருக்கிறான். அவன் ஒரு ஃப்ரீலான்ஸ் போட்டோகிராபர். கனாட் ப்ளேஸில் ஸி பிளாக்கில் ஸ்டூடியோ ஒன்றில் இருக்கிறானாம்; இன்று தெரிந்து கொண்டேன்... ஆனால் புரியவில்லை ஸார்!''

''என்ன?''

''நீங்கள் உங்கள் மகளுக்காக அனுப்பிய விமானம் பற்றி அவர்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''ஒரே ஒரு சம்பந்தம் இருக்கிறது. பர்த்வானில் கைதான மாணவர்கள் நிஷா- என் மகள் நிஷா-வின் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். கைதானவர்களில் உன்னுடன் வந்த நக்சல் பெண்ணும் ஒருத்தியாக இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கு, சில தினங்கள் முன் காணாமற் போன நிஷா என் மகள் என்பது தெரிந்திருக்க வேண்டும். என்னையும் பற்றியும் என் அதிகாரத்தைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். பர்த்வான் போலீஸிடம் அந்தப் பெண்ணைத்தான் என் மகள் என்று பொய் சொல்லச் சொல்லி இருக்க வேண்டும். அவளை விடுவிக்க நான் முயற்சி செய்வேன் என்ற நோக்கத்தில்.''

''இருந்தாலும் இந்த விதத்தில் விடுவிப்பீர்கள், இப்படி விமானம் அனுப்புவீர்கள், விமானம் பழுதாகும், ஒரு நாள் டிலே ஆகும், இதெல்லாம் அவர்களுக்குத் தெரிந்திருக்குமா? டில்லியில் தயாராக அந்த இளைஞன் காத்திருந்தானே! இது பெரிய ஆர்கனைஸேஷன் என்று தோன்றுகிறது. டில்லியிலும் பரவி...ஒன் மினிட், உங்களுக்கு இந்த ஐடியா யார் கொடுத்தது?''

''எந்த ஐடியா?''

''இம்மாதிரி விமானம் அனுப்பி உங்கள் மகளைக் கூட்டி வரும்படி!''

''ராம் குமார்.''

''ராம் குமார் யார்?''

''என் அந்தரங்கக் காரியதரிசிகளில் ஒருவன்..... அவன்தான் முழுவதும் இதைக் கவனித்துக் கொண்டான்.''



லாட்ஜிலே ரூம் கேட்டு வந்த ஆசாமி:

''நாய்கள் என்றால் துப்பறியும் நாய்கள் உள்படத்தானே?''

''என்னிடமிருந்து ஸிக்னல் வந்தது, என் ஃப்ளைட் 'டிலே' ஆனது எல்லாம் அவனுக்கு...''

''அவன்தான் மெஸ்ஸேஜ் எல்லாம் வாங்கியது, கொடுத்தது எல்லாம். அவன்தான் இந்தத் திட்டத்தின் மூளை!''

''அவனைக் கூப்பிடுங்கள். அரஸ்ட் ஹிம்!''

''ஏன்?''

''ஆயிரம் வாட் விளக்கில் உட்கார வைத்துக் கேள்விகளால் துளையுங்கள். சுண்டு விரலை மடுக்குங்கள். விஷயம் வெளி வந்து விடும். அதற்கு முன்....''

''ஓ, அதற்கு முன்?''

''நான் கனாட் ப்ளேஸ் சென்று அந்த போட்டோகிராபரைச் சற்று விசாரித்துப் பார்க்கிறேன். தடியாக ஒரு ஆளை என்னுடன் அனுப்புங்கள் ஸார், இந்த விஷயம் சுவாரசியமாக இருக்கிறது. ஐஸ்பர்க் போல் பத்து சதவிகிதம் தான் நீருக்கு மேலே தெரிகிறது. பாக்கி உள்ளே இருக்கிறது. அது என்ன என்று பார்த்து விடவேண்டும். நீங்கள் ராம்குமாரை விடாதீர்கள். கொஞ்சம் தட்டி விசாரியுங்கள். ஸம்திங் ராங் ஸம்வேர்! உங்கள் பெண் காணாமல் போயிருக்கிறாள். உங்கள் பெண் வேறு ரகம். இளைஞர்களுடன் பனாரஸ் சென்று காஷ் காவில் கடவுளைத் தேடுகிற ரகம் என்று நினைக்கிறேன். காசு தீர்ந்தவுடன் திரும்பி வந்திருக்கிறாள். அதற்குள் வேறு பெண், உங்கள் பெண் பெயர் சொல்லி விமானத்திலிருந்து தப்பித்து, இந்த நகரத்தில் எங்கோ இருக்கிறாள். எங்கே! எதற்கு? முதலில் அந்தப் பையன்!

நிஷா! நான் உன்னை மறுபடி சந்திக்கிறேன். டேக் ஈட் ஈஸி. உன் அப்பா மிக நல்லவர். பை பை'' என்று கீழே சென்றேன். உடன் அவர் வந்தார். ''ஏதாவது அபாயத்தில் அகப்பட்டால் எனக்கு போன் செய்.''

''ஜயோ, வா!'' என்றேன்.

அதற்கு அப்புறம் நிகழ்ந்தது உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன்....

பாரதப் பிரதமரின் வீட்டை முதல் தடவை பார்க்கிறவர்களுக்கு அதன் எளிமை சட்டென்று புரியும். வாயிற் பக்கம் டெண்ட் அடித்து செக்யூரிட்டி, ரிஸப்ஷன் ஆசாமிகள். நாலு பக்கமும் வழக்கம்போல் போலீஸ். சுற்றிலும் புல்வெளி. வயல்போலக் கொஞ்சம் இடம்.... (கோதுமை பயிரிட) மாடியில்லாத கட்டடம்.

உள்ளே புல்வெளியில் ஷாமியானா போட்டு அதில் வெளிச்சம் வழிந்து கொண்டிருந்தது. ஆர்வத்துடன் இளம் பெண்கள் காத்திருந்தார்கள். நடுவே ஒரு மைக் காத்திருந்தது. மைக் அருகில் அரை வட்ட வடிவில் காலி இடைவெளி காத்திருந்தது. டெலிவிஷன் வண்டி காத்திருந்தது. சினிமாக் காமிராக்கள் காத்திருந்தன. காமிரா உதவியாளன் அடிக்கடி ஆர்க்லைட்டைப் போட்டு இணைப்புக்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான். வெளியில் பத்திரிகைக்காரர்கள் காத்திருந்தார்கள். அவர்களிடமிருந்த காமிராக்கள் கண் சிமிட்டக் காத்திருந்தன.

நான் என் கைக் கடியாரத்தைப் பார்த்தேன். 6-50. ஜயோ என் பின் தொடர முகப்பில் இருந்த டெண்ட்டுக்குள் சென்றேன். டெலிபோன்கள்; வெள்ளைக் கோட்டு ஆசாமிகள்; அரசாங்கம்!

அவர்கள் என்னைச் சட்டென்று கவனித்தார்கள்.

''எஸ் ப்ளீஸ்?'' என்றார் உயரமான ஆசாமி ஒருவர்.

''பிரதமர் வந்து விட்டாரா?''

''நீங்கள் யார்?''

''தனியாக வருகிறீர்களா? ஒரு முக்கியமான விஷயம்.''

''வாட் ஈஸ் இட் கன்னு?'' என்று மற்றொருவர்.

''அந்தக் கூட்டத்தை உடனே நிறுத்த வேண்டும்.''

''மறுபடி சொல்லுங்கள்.''

'ஜய்ய்' என்று சைரன் ஒலித்தது; காமிராக்கள் தயாராயின!

''கூட்டத்தை நிறுத்துங்கள்'' என்று கத்தினேன்.

அவர் என்னைத் தனியாகத் தள்ளினார்.

வெளியே மண்டையில் சிவப்புக் கண் சிமிட்ட ஒரு நீலக்கார், மற்றொரு கார், மற்றொரு கார், மற்றொரு கார், மோட்டார் சைக்கிள் போலீஸ். பிரதமரின் கார்! அது மட்டும் நேராக உள்ளே சென்றது; நின்றது.

ஓடி வந்து ஒரு கதர் ப்ளூன் காரைத் திறக்க, கூட்டத்தின் ஆரவாரமும் பரபரப்பும் துவங்கியது! பிரதமர் நேராக அந்தப் பந்தலுக்குள் சென்றார்.

''ஆபீசர்! அந்தக் கூட்டத்தை நிறுத்த முடியுமா உங்களால்!''

''மிஸ்டர் யூ வான்ட் டு கெட் அர்ரெஸ்டட்? தெளிவாகப் பேசுங்கள், என்ன ஆயிற்று?''

நான் உடனே நிஷாவின் தந்தை பெயரைச் சொல்லி அவர் வந்தாரா என்று கேட்டேன்!

''இல்லை'' என்றார் கன்னு, என்னை சந்தேகத்துடன் பார்த்தபடி!

''அவருக்குப் போன் செய்யுங்கள்.'' ''என்ன வேண்டும் உனக்கு..,'' என்று அழுத்தினார். முட்டாளே; முட்டாளே என்று சொல்லவில்லை.

சக்கென்று மற்றொரு கார் வந்தது. நிஷாவின் தந்தை அதிலிருந்து இறங்கினார்.

''இதோ! அவரே வந்து விட்டார்!'' அவரைப் பார்த்ததும், அந்த ஆபீசர் அவருக்கு சலாம் போட்டார்.

பிரதமரின் குரல் ஒலிபெருக்கிகளில் புறப்பட்டுச் சோலைகளில் எதிரொலித்தது.

''ஸார், உடனே வாருங்கள். இங்கேஇருக்கிறேன். என் பேச்சைக் கேட்க மறுக்கிறார்கள்.''

''ஸார் அவன் என்ன சொல்கிறான்?''

நிஷாவின் தந்தை உள்ளே பார்த்தார். ஆபீசரைத் தனியாக அழைத்துச் சென்று சிக்கனமாக, வேகமாகப் பேசினார். அவர் கைகள் வேகமாகச் சைகைகள் காட்டின.

அந்த அதிகாரியின் நிலையில் மாறுதல் ஏற்பட்டது. திடீரென்று நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

''மிஸ்டர் உடனே வாருங்கள்'' என்று உள்ளே கூடத்தின் பால் சென்றார்.

''ஜயோ நீயும் வா!'' என்றேன். ஏதோ ஒரு ஞாபகத்தில் ஒரு பெண் உள்ளே தேவைப்படுவாள் எனத் தோன்றியது.

உள்ளே எத்தனை சுலபமான பெண் முகங்கள். எல்லோரும் பிரதமரின் வார்த்தைகளிலேயே தொத்திக் கொண்டிருந்தார்கள். எத்தனை இளம் பெண்கள்; எத்தனை பின்னல்கள்! எத்தனை பவுடர், எத்தனை கண்ணாடிக்கு முன் வீணாக்கிய கணங்கள்.. என் அருகே அதிகாரி.

''மிஸ்டர்; யார் அது, காட்டுங்கள். ஆனால் ஜாக்கிரதை; பதட்டப் படாதீர்கள்..''

நான் அந்தப் பெண்ணை அந்த முகங்களில் தேடினேன். எல்லோரும் தற்காலிகமாக உட்கார்ந்திருந்தார்கள். பின்னால் ஒரு அரை வட்ட வரிசையில் சிலர் நின்று கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் இந்த நாட்டின் எதிர்காலத்தை அமைக்கப் போகிறீர்

பிரமுகர்: (வதூலுக்கு வந்த ஆளைப் பார்த்து) அந்த ஐந்து ரூபாய் பாக்கிதானே, ஐயா? தீபாவளியன்னைக்குக் காலையிலே வந்து ஆளோடு ஆளாக நின்னு நீயும் வாங் கிட்டுப்போ-'பக்ஷீஸ்'மாதிரி!

கள்.'' பிரதமரின் கீச்சுக்குரல், ஒலி பெருக்கிக் கொண்டிருந்தது.''**இந்த நாட்டின் நம்பிக்கை நீங்கள்**'' எங்கே அவள்... எங்கே அவள்... ''**இந்த தேசம் உங்கள் தேசம்**'' முகங்கள் ஷர்மிலா, சாரதா, ஷகிலா, ஷரமா, பிரமீளா, பானு!

நிஷா! போலி நிஷா...பார்த்து விட்டேன். அவள் மெல்ல அந்த வெளி வட்டத்திலிருந்து மெது வாகப் பிரதமரை நோக்கி நகர்ந் து கொண்டிருந்தாள். அவள் கழு த்தில் மாலையாக காமிரா இருந் தது. அந்தக் காமிரா...

''தேர் ஷி இஸ்'' என்றேன்.

''எங்கே?''

''அதோ நகருகிறாளே, குரு கலரில் சட்டை, எதையோ மெல் கிறாளே...காமிரா வைத்திருக் கிறாளே! ஜ்யோ தெரிகிறதா?'' ஜ்யோ, ''ஆம்'' என்றாள். ''ஜ்யோ, நீ பின்பக்கமாகப் போய் முதலில் அவளை மறை, அந்தக் காமிரா! அதில் தான் ஏதோ இருக் கிறது.'' அந்தப் பெண் இன்னும் அருகில் வந்து விட்டாள். ''ஸார் அந்தப் பெண்ணைக் கலவரமில்லா மல் அப்புறப்படுத்த வேண்டும்'' என்றேன்.

''நான் பார்த்துக் கொள்கி றேன். அங்கேயே இருங்கள்'' என் றார். ''க்விக்! ஃபார் ஹெவன்ஸ் ஸேக்!'' என்றேன். அந்தப் பெண் அப்போது பிரதமருக்குப் பத்து அடி தூரத்தில் இருந்தாள். மெது வாகத் தன் காமிராவை எடுத்து அதை வயிற்றில் வைத்துக்கொண்டு வ்யூ ஃபைண்டரில் பிரதமரைப் பார்த்தாள். அவள் விரல் காமிரா ஷட்டரைத் திறப்பதற்குள் ஜ்யோ குறுக்கே வந்து விட்டாள்.

அவள் சட்டென்று சுதாரித்துக் கொண்டு ஜ்யோவைத் தன் இடது கையால் ஒதுக்கி, போட்டோ எடு க்க வேண்டும் என்று பாவனை காட்டினாள். ஜ்யோ திரும்பி என்னைப் பார்த்தாள். எல்லோர் கவனமும் பிரதமரிடம் இருந்தது. ''**நீங்கள் எந்த மொழி பேசுபவ ராக இருந்தாலும், எந்தப் பிர தேசத்திலிருந்து வந்தாலும் என் அன்பிற்கும் மதிப்பிற்கும்....**'' இப்பொழுது இரண்டு மூன்று செக்யூரிட்டி ஆசாமிகள் அந்தப் பெண்ணுக்குப் பின் வந்து விட் டார்கள். அவள் மறுபடி காமி ராவை லாகவமாக வைத்துக் கொள்வதற்கு முன் மிக லாகவமாக அந்தக் காமிரா அவளிடமிருந்து பிடுங்கப்பட்டது. அவள் சட் டென்று ஆச்சரியப்பட்டுப் பின்னால் பார்ப்பதற்கு முன் மற்றொரு செக்யூரிட்டி ஆசாமி அவள் முன்னே வர, பின்னாலிருந்து ஒரு வன் அவள் வாயைப் பொத்த, மற்றவர்கள் சூழ்ந்து மறைத்துக் கொள்ள...

சிறிது நேரத்தில் அவளைக் காண வில்லை. மௌனமாகக் கரைத்து விட்டார்கள். பிரதமர் இன்னும் பேசிக் கொண்டிருந்தார். ''**என்னு டன் சேர்ந்து சொல்லுங்கள் பார்க்கலாம். ஜெய்ஹிந்த்.**''

''ஜெய்ஹிந்த்.''

''போதாது. இன்னும் உரக்க: **ஜெய்ஹிந்த்!**'' இளம் குரல்கள் அதிக சக்தியுடன், ''**ஜெய்ஹிந்த்**'' என்றன.

''உங்களைக் கன்னா ஸார் கூப் பிடுகிறார்'' என்று ஒருவன் என் தோளில் தட்டினான்.



ஒரு இரும்புப் பெட்டி யைத் திறந்தபோது அதற் குள் ஒரு பெட்டி காணப் பட்டது. அதைத் திறந்த தும், அதனுள் இன்னொரு பெட்டி இருந்தது. அதை யும் திறந்து பார்த்தால், வேறு ஒரு சிறிய பெட்டி. அதுவும் திறக்கப்பட் டதோ, இல்லையோ, அங் கும் ஒரு சிறு பெட்டி! அதையும் திறந்து பார்த் தால், உள்ளே ஆ! என்ன அது?

-தொடரும்

(தொடர்கதை எழுது வது எப்படி என்று பயிற்சி அளிக்கும் ஸ்தா பனம் தபால் மூலம் அனுப்பி வைத்த முதல் பாடம்!)

பிரதமர் சட்டென்று அந்தக் கூட்டத்திலிருந்து வலது பக்க வீட்டின் பக்கவாட்டு வாயிலில் நுழைந்தார். அவரைத் தொடர ஓடிய பெண்களைப் பலர் தடுத்துச் சிரமைத்தார்கள். நான் வெளிப்புறம் இருக்கும் டெண்ட் பக்கம் சென்றேன். அங்கே பலர் சூழ்ந்திருக்க நட்ட நடுவில் அந்தப் பெண் ஒரு நாற்காலியில் உட் கார்ந்திருந்தாள். டெலிபோனில் ஒருவன் பேசிக்கொண்டிருக்க, நிஷாவின் தந்தை ஒரு மேஜை மேல் உட்கார்ந்து அந்தப் பெண் ணையே பார்த்துக் கொண்டிருக்க, ''யார் நீ?'' என்று ஒருவர் கேட் டார். அவள் பதில் சொல்லவில்லை.

''ஹலோ ஜேகே! சற்று ஒதுங் குங்கள். அந்த ஆசாமிக்கு வழி விடுங்கள்'' என்றார் நிஷாவின் தந்தை.

நான் அவள் அருகில் சென்றேன். அவளுடன் நான் செலுத்திய விஜேத விமானப் பிரயாணம் ஞாபகம் வந்தது. ''உன் பெயர் நிஷா இல்லையா?'' என்றேன். என்னை நிமிர்ந்து பார்த்தாள். என்னை அடையாளம் கண்டுகொண் டதற்கு எவ்விதச் சலனமும் அவள் முகத்தில் ஏற்படவில்லை. ''காப் டன் ஜேகே! இவளைப் பேச வைக்க முடியுமா உங்களுக்கு?'' என்றார்.

அவள் எதிரே நின்றேன். அவள் என்னை ஒரு தடவை பார்த்து மறுபடியும் நேர்ப் பார்வை பார்த் தாள்.

''காப்டன், யூ நோ ஸம்திங். இவள் வைத்திருந்தாளே காமிரா, அதில் என்ன இருந்தது தெரியுமா? அந்தக் காமிரவைக் கொண்டு வாப்பா.''

''என்ன இருந்தது?'' என்றேன். அவர் குரலை தழைத்துக் கொண்டு, ''காமிராவுக்குள் மிக சாமர்த்திய மாக மறைக்கப்பட்ட சிறிய துப் பாக்கி. காமிராவின் க்ளிக்குடன் இணைந்து செயல்படக் கூடிய துப் பாக்கியின் விசை. ஒரு க்ளிக்! அவ் வளவுதான். நாளை செய்தித்தாள் களில் ஒன்றரை அடி உயர எழுத் துக்களில் செய்தி வந்திருக்கும்'' என்றார்.

காமிரா வந்தது. அதன் வயிறு திறந்திருந்தது. சிக்கலான லீவர் கள். லென்ஸ் இருக்க வேண்டிய இடத்தில் துப்பாக்கியின் கண். காமிராப்பெட்டிக்குள் அடக்கமாகி விடக் கூடிய சிறிய துப்பாக்கி. ஒரு ஸ்பிரிங் இணைப்பு...அந்தப்போலீஸ் ஆபீஸர் காமிராவை மூடி விட்டு ஷட்டரை ஒரு தடவை தட்டினார். துப்பாக்கியின் ஸ்பிரிங் விடுதலை ஆகும் 'டிர்ரக்' சப்தம் அதனுள் கேட்டது...

''தோட்டாக்களை எடுத்துவிட் டோம். பயப்படாதீர்கள்!'' என்று சிரித்தார்.

''இன்ஜீனியஸ்!'' என்றேன். ''நிஷா!'' அப்படித்தான் அவளை அழைக்கவேண்டியிருந்தது. ''இதற்

COMICS BOOTIMES

காகத்தான் நீ என்னுடன் டில்லிக்கு வந்தாயா?''

அவள் பதில் சொல்லவில்லை. ''ரிகர்ஸலுக்காக வயிற்றில் அழுக்கிக் கொண்டு கூட நினைத்திருக்கிறாள்.''

''காப்டன் ஜேகே! உங்களுக்குத் தெரியும். நீங்கள் இன்று பிரதமரின் உயிரைக் காப்பாற்றி இருக்கிறீர்கள்!''

''ஜ்யோ! இவள்தான் அதற்குக் காரணம்! இவள்தான் தைரியமாகச் சென்று மறைத்தாள்.''

''எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்...'' என்று ஜ்யோ ஆரம்பித்தாள்.

''ஜ்யோ, சும்மா இரு!'' என்றேன்.

''இந்தப் பெண் யார்?''

''இவளையே கேட்கலாமே?''

''பேச மாட்டாள். அவர்கள் நிறையத் தாங்கக் கூடியவர்கள்.'' எனக்கு திடீரென்று 'நிஷா' அன்றிரவு அந்த விமான நிலையத்தில் அந்த அறையில் பிரதமரின் போட்டோவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது புரிந்தது. என்ன திட்டம் அது! எப்பொழுது ஆரம்பித்தது? எங்கெங்கே பரவி இருக்கிறது? எத்தனை தைரியம், எத்தனை வேகம். தப்பான வேகம், மரண பயமில்லாமல் ஒருவிதக் கவலை இல்லாமல் இவளைச் செலுத்துகிற ஆதாரமான கான்ஸரை எங்கே தேடப் போகிறார்கள்? எங்கே பிடிக்கப் போகிறார்கள்? எனக்கு அந்தப் பெண்ணின் மேல் திடீரென்று இரக்கம் ஏற்பட்டது. அவள் என்ன ஆவாள்? அரெஸ்ட் செய்வார்கள். இந்த விஷயம் ரகசியமாக இருக்கும். நீங்கள் இந்த விஷயத்தைப் பத்திரிகைகளில் படிக்க முடியாது. மௌனமாக யாவும் நடக்கும். அந்தப் பெண் ஏதோ ஒரு சிறையில் ஏதோ ஒரு மூலையில் வியர்க்கப் போகிறாள் அவளைக் கெஞ்சுவார்கள், கேட்பார்கள், மிஞ்சுவார்கள். அவளிடமிருந்து உண்மையைக் கறக்க, அவளது கூட்டாளிகளைக் காட்டிக் கொடுக்க அறுபத்து நாலு சாகசங்கள் செய்வார்கள். எத்தனை தினம் தாங்கப் போகிறாள்? அவள் இன்னும் ஏதோ மெஸ்மரிஸத்துக்கு வசப்பட்டவள் போல் நேர்ப்பார்வைதான் பார்க்கிறாள். இதுவரை ஒரு வார்த்தை பேசவில்லை...

''ஜேகே! உன் ஊகம் சரியாகி விட்டது!'' என்றார் நிஷாவின் தந்தை.

''என்ன ஸார்?''

''ராம்குமார். அவன்தான் இதில் ஐந்தாம் படை வேலை செய்திருக்கிறான். அவனைக் காணவில்லை. தேடச் சொல்லி இருக்கிறேன்!''

''இதில் எத்தனையோ பேர் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் ஸார். அந்த ஜி பிளாக் போட்டோ ஸ்டூடியோ...அதன் மாடியில் நான் பார்த்த பிரிண்டிங் பிரஸ்...''

''வளைக்கச் சொல்லி இருக்கிறேன். அது பெரிய கும்பல். ஆனால் எல்லோரையும் பிடித்துவிடுவோம். அதற்கெல்லாம் முதலில் காப்டன் ஜேகே! உங்களுக்கு வந்தனம் சொல்ல வேண்டும்'' என்றார் நிஷாவின் தந்தை... ''உங்களுக்கு.''

''எதற்கு ஸார்?''

''நீங்கள் முதலில் சந்தேகப்பட்டு அந்தப் பையன் யார் என்று கண்டுபிடித்து அந்தப் போட்டோ ஸ்டூடியோவிலிருந்து அவர்கள் பேச்சை ஒட்டுக்கேட்டு அதை, மிக முக்கியம், எனக்கு போன் செய்தீர்களே! அது நடந்திராவிட்டால் இது கதையே வேறுவிதமாக முடிந்திருக்கும்.''

''இல்லை. உங்களுக்குச் சட்டென்று ஸம்ப்தர் ஜங் ரோடு என்றதும் இரண்டையும் முடிச்சுப் போட முடிந்ததே!''

''அது ஒன்றுமில்லை. டூ அண்ட் டூ அவ்வளவுதான். எனவே...கன்னா! பிரதமரிடம் சொல்லிவிட்டீர்களா?''

''இல்லை. இந்த இடத்தைவிட்டு விஷயம் இன்னும் வெளியே செல்லவில்லை. பிரதமரிடம் அப்புறம் சொல்லிவிட இருக்கிறேன். காபினெட் செக்ரட்டேரியட்டிலிருந்து அவசரமாக ஒரு நோட் வந்திருக்கிறது....

''காப்டன் ஜேகே! ஒரு முக்கியமான விஷயம்! இந்தச் சம்பவத்தைப் பற்றி நீங்கள் எவருடனும் பேசக்கூடாது. எவருக்கும் எழுதக் கூடாது...''

''எழுதினால் கூட நம்பமாட்டார்கள். ரீல் விடுகிறான் என்று நினைத்துக் கொள்வார்கள். ஸார், ஆனால் ஒரு விஷயம். இந்தப் ப்ளாட்டை எப்படி முறியடிக்கப் போகிறீர்கள்? எத்தனைபேர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?''

''ஒவ்வொருத்தரையும் கண்டு பிடித்துவிடுவோம். கவலைப்படாதீர்கள்... லீட் கிடைத்து விட்டது. மிஸ் என்னுடன் வருகிறாயா!''

''தாங்க்யூ வெரி மச் காப்டன்! க்ரேட் ஒர்க். யூ நீட் ஸம் ரிலாக்ஸேஷன்'' என்று ஜ்யோவைப் பார்த்தார். ''இவள் யார் என்று சொல்லவில்லையே?''

''இவள் என் ரிலாக்ஸேஷன். பாரதப் பிரதமர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும் இருக்கிற சமயங்களில் இவளுடன்தான் நான் சுற்றுவேன்! மேலும் இவளைக் கல்யாணம் செய்து கொள்ளுவதாக ஒரு சிறு உத்தேசம் இருக்கிறது.''

''நாட் எ பாட் ஐடியா!''

ஜ்யோ என் சட்டைக்குள் முதுகுப் பக்கத்தில் கிள்ளினாள். சந்தோஷமாக இருக்கும்போது அவள் அப்படித்தான் செய்வாள்.

பாரத சர்க்காரின் மூன்று சிங்க முத்திரையுடன் ப்ரைம் மினிஸ்டர்'ஸ் செக்ரடேரியட் அச்சுடன் அந்தக் கடிதம் என் அறையின் கதவடியில் கிடந்தது.

அதைப் பிரித்தால்:

காப்டன் அண்ட் மிஸஸ் ஜோகேஷ் குமார்! பாரதப் பிரதமர் உங்களைச் சனிக்கிழமை அக்டோபர் 16, 1971 மாலை ஐந்து மணிக்கு அவர் உறைவிட நம்பர் ஒன்று ஸம்ப்தர்ஜங் ரோடில் தனிப்பட்ட தேனீருக்கு அழைக்கிறார்.

பாரதப் பிரதமருக்காக...

ஒப்பம்.

ஜோகேஷ் குமார்! அதுதான் என் பெயர்...

''ஜ்யோ! ஏதாவது உடுத்திக் கொள். பாரதப் பிரதமர் நம்மைக் கூப்பிடுகிறார்'' என்றேன்.

மூன்றும்

சுஜாதா

மகுடி

COMICS
PDF
TIMES

HSC